Registered as a Newspaper in Srilanka

# முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم මුස්ලිම් කුරල්

17 ஒக்டோபர் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 20 ஷ:பான் - 1424 ☆ சுவடு - 22

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!

தருகை - 20 ரூபா



# புலிகள் பிச்சை போடுவார்கள்

## அதனை எடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்!

## அறிவுறுத்தல்!

பாவமா பரிதாபமா? மன்னிக்கலாமா மறந்து விடலாமா? என்ன செய்யலாம் நமது அரசியல் தலைமைகளை. மக்களே நீங்கள்தான் முடிவு எடுக்க வேண்டும்! வெள்ளம் வரும்முன் அணைகட்டுங்கள் என்பார்கள்; உழும் நேரத்தில்தான் உழலாம். அறுவடை செய்யும் நேரத்தில்தான் அறுவடை செய்யலாம்! நமது முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கோ அணை கட்டுவதற்கான ஆளுமை இல்லை. அறுவடை செய்யும் நேரத்தில் விதைப்பதைப்பற்றி கதைக்கிறார்கள். இவைகள் பற்றியும் இவர்கள் பற்றியும் உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். இன்றைய சூழலில் இடைக்கால சபை என்பது முக்கிய அரசியல் புள்ளியாக அரசியல் அரங்கில் நிலைநிறுத்தப்பட்டு விட்டது. சமாதானப் பேச்சுவார்த்தையின் எதிர்காலமும் நாட்டின் அரசியல் எதிர்காலமும் இந்த 'இடைக்கால சபை' விவகாரத்தில்தான் தங்கி உள்ளது.

அப்படியானால் முஸ்லிம்களின் நிலை அந்தோ பரிதாபம்! இந்த விடயத்தில் நமது முஸ்லிம் அரசியல் தலைமைகள் அனைத்தும் "குருடன் யானை பார்த்த கதை சொல்கிறது" கேளுங்கள் இவர்களின் கதையை பாருங்கள் இவர்களின் கையாலாகாத்தனத்தை எல்லா முஸ்லிம் எம்.பிக்களும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தான்! இது தனிப்பட்ட குரோதங்கள் மீதான விமர்சனமல்ல. சமூக நலன் நின்ற தவிர்க்க முடியாத விமர்சனம்தான், வாசியுங்கள்!

## இடைக்கால சபை தொடர்பாக முஸ்லிம் தலைமைகளின் நிலைப்பாடு!

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தையானது வெறும் காலத்தைப் போக்கும் யுக்தி என யாரும் நினைத்தால் அது மோசமான தப்புக்கணக்காகும். இலங்கைத் தேசம் இந்த நாட்டின் தேசிய இனமான தமிழர்களை 50 வருடங்களாக ஏமாற்றி, அவர்கள் மீது புரிந்த அடாவடித்தனத்திற்கும் அடக்கு முறைக்குமான விலையை இப்பேச்சுவார்த்தையின் ஊடாகச் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதை தேசிய இனங்களின் விடுதலை மீது அக்கறை கொண்ட சக்திகள் நன்கு உணர்வர். இந்த உண்மையை அரசியல் அறிவுள்ள அனைவரும் ஏற்றுக்கொள்ளவே செய்வர்.

நடைபெறும் பேச்சுவாாத்தையானது இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தை மட்டுமன்று; அதன் உள்ளார்ந்த அர்த்தமும் அரசியல் நிலைப்பாடுகளும் பேச்சுவார்த்தை முறைமைகளும் இலங்கை அரசுக்கும்; தமிழீழ அரசுக்குமான இரு அரசுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தையாகவே முன்சென்று கொண்டிருப்பதைக் காணலாம்! இதனை விரும்பியோ விரும்பாமலோ சிங்களத் தேசம் ஏற்றுக்கொண்டுவிட்டது. முஸ்லிம் தேசமும் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்!



எதிர்காலத்தில் யுத்தமொன்றாலும் சரி. நிரந்தர, தற்காலிக போர் ஓய்வு என்றாலும் சரி; புலிகள் தமிழீழ அரசினுடைய அந்தஸ்திலிருந்து ஒருபோதும் இறங்கிவரப் போவதில்லை. புலிகள் அப்படி இறங்கி வருவார்கள் என நினைப்பதை விட வேறு எந்த முட்டாள்தனமும் இல்லை. புலிகள் தங்களுடைய ஆளுகைக்குட்பட்டுள்ள நிலப்பரப்பில் நிர்வாகம், நீதி, நிதிச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் பொலிஸ், இராணுவம், கடற்படை போன்ற படைப்பிரிவுகளை ஸ்தாபித்து தமிழீழத்தின் பரிபாலனத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதனை அரசு புலிகளுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட சட்டபூர்வமாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கமும் எவ்வித மயக்கமும் இல்லாமல்; நேரடியாகவே ஏற்றுக் கொண்டுமுள்ளது.

இந்த அரசியல் யதார்த்தத்தின் அடிப்படையில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் உரிமைக்கும்; அவர்களின் வாழ்வின் மீதான இருப்புக்கும் என்றுமில்லாத வகையில் இன்றைய சமாதான? காலத்தில் கேள்விக்குறி தோன்றியுள்ளது. முஸ்லிம் சமூகம் இப்படியொரு ஆபத்தான அரசியல் நெருக்கடியை வரலாற்றில் எப்போதுமே எதிர்கொண்டதில்லை. இப்போது நெருக்கடி நிலை தோன்றிவிட்டது. ஆனால் நமது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைமைகள் மிக மோசமான வங்குரோத்துத் தனத்தில் கதை அளந்து கொண்டிருக்கின்றன.

தேசிய இனப்பிரச்சினையில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கான நியாயமான தீர்வை எந்த முஸ்லிம் அரசியல் தலைமையும் இதுவரை முன்வைக்கவில்லை. தேர்தல் மேடைகளில் "முஸ்லிம் மாகாணம்" என்ற வாக்கு வேட்டையாடும் குண்டை வெடிக்கச் செய்து அறுவடையைச் செய்து வந்திருக்கிறார்கள். முஸ்லிம் மாகாணம் என்றால் அது ஆணா? பெண்ணா? கறுப்பா சிவப்பா? என இதுவரை அதன் நிர்வாக, சட்ட அரசியல் தன்மைகளை பற்றி ஒரு விளக்கமும் இல்லை! ஒரு கதைக்கு இதுபற்றி நமது முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு தெரியும் என்றால் அம்மாகாணத்தை வெற்றி கொள்ள இவர்கள் என்ன உருப்படியான அரசியல் ஸ்திரப்பாட்டை இதுவரை மேற்கொண்டுள்ளனர்?

வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்விற்கான ஏற்பாட்டை இதுவரை திரட்டி வைக்காத முஸ்லிம் அரசியல் தலைமைகள், இன்று இப்போது எழுந்துள்ள "வடக்கு கிழக்கிற்கான இடைக்கால சபை விவகாரத்தில்" முழிபிதுங்கி நிற்கின்றனர். சொந்த மக்களின் கண்களில் மருட்சி மேலோங்க மேலோங்க "பாயப்போகிறோம், புடுங்கப்போகிறோம்! என மேடைகளில் வாய் வார்த்தைகளை வீசத் தொடங்கிவிட்டனர். இவர்களின் வாய் வார்த்தைகளுக்கு அறவே செவி கொடுக்காத இலங்கையின் அரசியல் சூழல் வேகமாக நகர்ந்து இப்போது அயர்லாந்தில் செம்மைப்படுத்தப்பட்டு - வன்னியில் புலிகளின் தலைவர் பிரபாகரனினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு கொழும்புக்கு இம்மாத இறுதிக்குள் கொண்டுவரப்படவுள்ளது.

புலிகளினால் முன்மொழியப்படவுள்ள இடைக்கால சபை தொடர்பான முன்வரைவை ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் "வெடிக்கக் காத்திருக்கும் குண்டைப்போல் எதிர்பார்த்திருக்கிறது. சந்திரிகாவும் ஜே.வி.பியும் கூட இதனை முக்கிய திரும்பற் புள்ளியாகவே உணர்ந்தும் விட்டனர். இந்த நிலைமையை முஸ்லிம் அரசியல் தலைமைகளோ முஸ்லிம் மக்கள் உணர்ந்து விட்டதுபோல் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இதனை மெய்ப்பிப்பதற்கு அவர்களின் போக்கைத் தவிர வேறொரு சாட்சியமும் நமக்குத் தேவையில்லை. ரஊப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரசாகட்டும், அதாஉல்லா தலைமையிலான 'அஷ்ரஃப் காங்கிரஸ்' ஆகட்டும், பேரியல் தலைமையிலான 'நுஆ' ஆகட்டும், யு.என்.பி. முஸ்லிம் எம்.பிக்களாகட்டும் அனைவரும் இந்த விடயத்தில் கும்பகர்ணத் தூக்கம்தான். மக்கள் விழித்துக் கொண்டிருக்கும்போது தூங்கிக் கொண்டிருக்கும் அரசியல் தலைமைகளை இப்போது நமது அக அரசியல் சூழலினுள்ளே கண்டுவருகிறோம்! துரதிஷ்டவசமான நிலைமையிது.

வடக்கு கிழக்கிற்கான புலிகளின் இடைக்கால சபை வரைபு, ஒரு தனியரசுக்கான முதல்-அங்கீகாரத்திற்கான ஏற்பாடு என லக்ஸ்மன் கதிர்காமர் ஒரு முறை குறிப்பிட்டார். இதுதான் உண்மையுமாகும். இப்போதைய முஸ்லிம் மக்களின் கேள்வி இது தான் நமது முஸ்லிம்அரசியல் தலைமைகளே! வடக்கு கிழக்கு முஸ்லிம்களாகிய நாம் தனி ஈழத்திற்குள் வாழ வேண்டுமா? அல்லது முஸ்லிம் தேசத்திற்குள் வாழ வேண்டுமா? இதற்குப் பதில் சொல்வீர்களா?

## வெலிகம புகாரி பள்ளிவாசல் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது!
## அல்லாஹ்வின் இல்லத்திற்கு யார் உரிமை கோருவது?

வெலிகம கல்பொக்க புகாரிப் பள்ளிவாசல் கடந்த 10ம் திகதி தொடக்கம் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது. இப்பள்ளிவாசலில் பாங்கு சொல்வதோ, தொழுவதோ, சமய அனுஷ்டானங்களில் ஈடுபடுவதோ முற்றாக நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. பள்ளிவாசலைச் சுற்றி பொலிஸ்படை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் வெலிகம முஸ்லிம் பிரதேசமே அல்லோலகல்லோலப்படுகிறது.

அல்லாஹ்வின் பள்ளிவாயலுக்கு யார் உரிமையாளர் என்ற சர்ச்சையை அடுத்து எழுந்துள்ள துர்ப்பாக்கிய நிலையே இது. இப்பிரச்சினை வெலிகம கல்பொக்க பள்ளிவாயலுக்கு மட்டும் உரியதல்ல; இலங்கையிலுள்ள பல்வேறு பள்ளிவாயல்களை தனிநபர்களும், நிறுவனங்களும் தங்களது சொத்துடமையாக்கியுள்ள தன் மோசமான விளைவுதான் இது. இன்று இதன் விளைவு வெலிகமையில் வெடித்தெழும்பியுள்ளது.

அரசியல் வாதிகளின் பள்ளிவாசல் மீதான ஆதிக்கப் போக்குகள் கடந்த காலங்களில் அதிகரித்து வருகின்றன. கடந்த பொது முன்னணி அரசில் அங்கம் வகித்த முஸ்லிம் அமைச்சின் ஒருவரின் செல்வாக்கினால் இப்பள்ளிவாசல் தனியொருவருக்கு கைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. →13

## இலங்கை வானொலியில் முஸ்லிம் சேவை நேரக்குறைப்புக்கு முயற்சி!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் முஸ்லிம் சேவைக்கான அடுத்த வருடத்தில் பெருமளவு நேரக்குறைப்புச் செய்ய திட்டமிட்டுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்போது இலங்கை ஒலிபரப்புச் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையில் நாளொன்றுக்கு முஸ்லிம் சேவைக்கென மூன்று மணிநேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. காலையில் 2மணி நேரமும், இரவில் 1மணி நேரமுமாக முஸ்லிம் சேவை ஒலிபரப்பப்படுகிறது.

இம்முஸ்லிம் சேவை பற்றி பல்வேறு குறைபாடுகள் இருப்பினும்; மேலும் முஸ்லிம் சேவைக்கென நேரம் ஒதுக்கப்படல் வேண்டுமெனவும்; நிகழ்ச்சிகள் காத்திரமாக அமைதல் வேண்டுமெனவும் கோரிக்கைகள் நமது சமூக அரங்கிலிருந்து முன் வைக்கப்பட்டுள்ளன.


இந் நிலையில் எதிர்வரும் வருடத்தில் முஸ்லிம் சேவைக்கான நேரத்தை அரைமணித்தியாலமாக குறைப்பதற்கான "நிகழ்ச்சி திட்ட அமைப்பு" தயாரிக்கப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது. இந்த விடயத்தையிட்டு நமது அமைச்சர்கள், அரசியல் நிறுவனங்கள், சமூக சக்திகள் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## முஸ்லிம் உலகு மீதான ஆக்கிரமிப்பைக் கண்டிப்பதற்கு இஸ்லாமிய மாநாடு கூடுகிறது!

இந்த வாரம் வியாழன் - வெள்ளி ஆகிய தினங்களில் மலேசியாவில் கூடும் இஸ்லாமிய மாநாட்டு ஒழுங்கமைப்பின் அரசாங்க தலைவர்களின் கூட்டத்திற்கு முன்பாக அங்கே கூடியுள்ள ஒழுங்கமைப்பு நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள், சிரியாவையும் பலஸ்தீனையும் தாக்கிய இஸ்ரேலின் தாக்குதலை கண்டிப்பதற்கான பிரேரணையை கொண்டு வருவதில் உறுதியாக உள்ளனர்.

57 இஸ்லாமிய நாடுகள் இந்தக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றன. இந்த உறுப்புரிமை நாடுகளுக்குள் அமெரிக்காவின் வேண்டுகோளுக்கிணங்கி ஈராக்குக்கு துருப்பினரை அனுப்ப துருக்கி மட்டுமே முன்வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய நாடுகள் அமெரிக்காவின் வேண்டுகோளை நிராகரித்துள்ளன.

## மர்ஹூம் அஷ்ரஃபின் 55வது பிறந்த தினம்



ஒக்டோபர் 23

## அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான வேதனம் 2500/= ரூபாவால் அதிகரிக்கும்?

இம்முறை வரவு-செலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் ரூபாய் 2000-2500 வரை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

06 இலட்சத்திற்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு இந்த அதிகரித்த சம்பளம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. கடந்த அரசாங்கத்தினால் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபாய் 2200/- கொடுப்பனவும் எவ்வித மாற்றமுமின்றி கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

அரசாங்க சேவையில் ஆட்களை சேர்த்துக் கொள்ளலாகாது என்று அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட சுற்று நிறுபம் காலாவதியாக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதியதொரு சுற்று நிருபம் வெளியிடப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

என்னதான் வரவு செலவுத்திட்டங்களில் மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் குறிப்பிடப்பட்டாலும், இவை நடைமுறைக்கு வந்தால்தான் மக்கள் பயனடைவர்.


## தேர்தல் ஆணையாளராக மீண்டும் தயானந்த திசநாயக்காவின் பதவி நீடிப்பு

தொடர்ச்சியாக பதவியிலிருந்துவரும் தேர்தல் ஆணையாளரான தயானந்த திசாநாயக்க அவர்கள் மீண்டும் ஜனாதிபதியினால் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் 103-வது சரத்தின் படி வழங்கப்பட்டுள்ள இந்த நியமனம் 2002 ஜனவரி 29ம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. தனக்கு தொடர்ச்சியாக இப்பணியைச் செய்ய முடியாது என இவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக்குரல்! ஆதரவு தாருங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆல விருட்சம் போல்....

'**மு**ஸ்லிம் குரல்'
எமது முஸ்லிம் தேசத்திற்குக் கிடைத்த வரப்பிரசாதம் எனலாம். எங்கு, எது, எப்படி நடந்தாலும் அதை அப்படியே உண்மைத்தன்மையுடன் தெட்டத்தெளிவான முறையில் எமக்குத் தந்து எமக்கான தனித்தன்மையுடன் இயங்கும் ஒரு பத்திரிகை இல்லையே என்ற குறையை மறைத்து சோர்வுற்றுப் போயிருந்த இந்த இதயங்களுக்கு வலுவூட்டிய பெருமை முஸ்லிம் குரலையே சாரும். அண்மையில் நடந்த முஸ்லிம் குரல் பப்ளிகேசன் திடீர் இடமாற்றத்தால், நான் இவ்வாறு எண்ணினேன். துஷ்டர்களால் ஏதாச்சும் பிரச்சினை ஏற்பட்டு விட்டதோ என்று. ஏனெனில் ஒரு ரொட்டித் துண்டுக்காக வாலாட்டுபவர்களுக்கு ஆதரவு அதிகமாக இருக்கும். பிரதம ஆசிரியருக்கும் உறுப்பினர்களுக்குமான அன்பான வேண்டுகோள் இப்புனித சேவையினை சிறப்பாக செய்திடும் போது தங்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களையும், கஷ்டங்களையும் அல்லாஹ்வுக்காக பொறுத்துக் கொண்டு இன்னுமின்னும் புதுமைகளுடனும், திறமைகளுடனும் செவ்வனே செய்திட எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திக்க நாம் கடமைப்பட்டிருக்கின்றோம் என்பதை இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ்.ரி. அப்துல் கபூர்
பொத்துவில்.

## முஸ்லிம் குரலை உயர்த்துவோம்!

**மு**ஸ்லிம்களுக்கு ஒரு தனிக்குரல்
இன்று எங்கும் ஒலிக்கின்றது!
முஸ்லிம் தனித்துவம் நிலைநாட்ட
'முஸ்லிம் குரல்' விழிப்பூட்டுகிறது!
இஸ்லாமிய விழுமியங்கள்
உள்ளங்களை உரமூட்டி
உலகில் அனைத்து மாந்தரும்
இணக்கமாய் வாழ்ந்திட வழிகாட்ட
முஸ்லிம் குரல் தேவையன்றோ!
இன்று நாம் முஸ்லிம்களாய்
இணைந்து பிரிவினை துறந்து
தோளோடு தோள் சேர்ந்து
உழைத்தால் அன்றோ!
முஸ்லிம் சமூகம் தலை நிமிர்ந்து
தரணியில் திகழும்!

எமக்கு ஒரு தனிக் கொள்கையுண்டு
எமக்கு ஒரு தனி மார்க்கம் உண்டு
எமக்கு வழிகாட்ட திருக் குர்ஆன்
உண்டு
அதற்கு விளக்கம் தந்து
பூரண முஸ்லிமாய் மிளிர்ந்திட
அண்ணல் நபி (ஸல்) வாழ்க்கை
முறையுண்டு!

இனி முஸ்லிம் குரலைக் கேட்போம்
இதயத்தில் இறை பக்தி பூண்டே
அவனியில் சமாதானம் பரப்பிட
அணி திரள்வோம்! வாரீர்!

கவிஞர் எம். வை. எம். மீஆத்
தும்புளுவாவை

## காத்திரமான பத்திரிகை

**இ**ன்று இலங்கையில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் எதிர்கால முஸ்லிம்களின் நிலை என்னவாகுமோ என்ற கேள்விக்குறியான நிலையில் முஸ்லிம் குரல் தாங்கி வரும் ஒவ்வொரு செய்திகளும் காத்திரமானவை.

றிபாய் எம் சம்சுதீன்
நிந்தவூர்.

# முஸ்லிம் குரல் நமது குரல்

**இ**ன்றைய உலகை தொடர்பு சாதனங்களே ஆளுகின்றன. சகல மட்டங்களிலும் அதன் தாக்கம் இருந்து கொண்டிருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் அச்சு ஊடகங்களும் பெருகி வருகின்றன. ஆனால் அவை தமது கடமையை மேற்கொள்ளும் பாங்கு கவலையைத் தருகிறது. செய்திகளை மூடிமறைத்தும் திரித்தும் விகாரப்படுத்தியும் வெளியிடுகின்றன.

இந்த வகையில் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் ஊடகங்களினால் நாளாந்தம் பாதிப்புக்குள்ளாகிறது. எனவே தமது தரப்பு நியாயங்களை ஆணித்தரமாக எடுத்துச் சொல்ல, முஸ்லிம் சமூகத்துக்கான ஒரு ஊடகம் கிடையாது. இன்று முஸ்லிம்களுக்கெதிராக எழுதும் அனேக தமிழ் பத்திரிகைகளை பணங்கொடுத்து வாங்குபவர்களாக முஸ்லிம்களே காணப்படுகின்ற பரிதாபம் நிலவுகிறது. முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சாரத்தில் அச்சு ஊடகங்களை தாண்டி இலத்திரனியல் ஊடகங்களும் வளர்ந்துவிட்ட நிலையில் முஸ்லிம்களுக் கென்று ஒரு தினசரி தானும் இல்லை.

இந்த இடைவெளியை நிரப்பு முகமாக முஸ்லிம் குரல் முயன்று கொண்டிருக்கிறது. இப்பத்திரிகை மட்டுமல்ல இன்னும் பல பத்திரிகையை வளர்த்தெடுப்பதுடன் வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் என நமது சமூகம் முன்னேற வேண்டியுள்ளது. அதே வேளை அதிஷ்டவசமாக இவ்வாறு ஊடகங்களை உருவாக்கி வளர்க்க வேண்டுமென்ற ஆர்வமும், பொருளாதார வளமும் முஸ்லிம் சமூகத்திடம் இருக்கவே செய்கிறது. இது குறித்துப் பேசவும் செய்கின்றன. ஆனால் இத்துறையில் எம்மவர் எவரும் ஈடுபட முன்வருவதாக இல்லை.

ஊடகத்துறை நீண்ட பாதையில் முஸ்லிம் குரல் தன் முதல் அடியை எடுத்து வைக்கிறது. இத்தினசரியை வளர்த்தெடுக்க பின்வரும் வழி முறைமைகளைப் பிரயோகிப்பதற்கு நாம் என்றும் தயாராகவே இருக்க வேண்டும்.

வியாபார ஸ்தாபனங்கள் முதலீடு செய்வதோடு, விளம்பரம் முதலியன வழங்க முன் வரவேண்டும். எழுத்தாளர்களும், ஆர்வலர்களும் தம் பங்களிப்பை நல்க வேண்டும்.

சமூக நிறுவனங்கள் தம் அனுசரணைகளை வழங்க வேண்டும். சமூகத்தின் பல மட்டங்களிலும் முஸ்லிம் குரல் வினியோகிக்கப்பட வேண்டும்.

இன்றே சந்தாதாரர்களாகச் சேர முன் வரவேண்டும். இன்று போலவே முஸ்லிம் குரல் என்றும் மக்கள் சார்பானதாக வளர்ந்து வர வேண்டும்.

எம்.ஏ. முஹம்மது உஸ்மான்
மூதூர்.

## புத்தளம் வாழ் - யாழ்/ கிளிநொச்சி முஸ்லிம் மக்கள் ஒன்றியம்

පුත්තලම විසින - යාපනය/ කිලිනොච්චිය මුස්ලිම් ජනතාවගේ සහයෝගිතාවය

**Puttalam Live - Jaffna/ Kilinochchy Muslim People's Association**

203, Mannar Road, Puttalam. பதிவு - எண் : தொலை பேசி இல 203, மன்னார் வீதி, புத்தளம்.

### இவர்களுக்கு என்ன நடந்தது? புலிகள் பதில் சொல்வார்களா?

யாழ் பிறந்த எம் இளைஞர்கள் விடுதலைப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு பதின்மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. இவர்கள் தொடர்பாக புலிகள் எவ்வித தகவலுமில்லாமல் மௌனம் சாதிக்கின்றனர். அவர்களின் பெயர் பட்டியலை இத்துடன் அனுப்பி வைக்கின்றோம்.

இந்த நேரத்தில் எமது வேண்டுதலை பதிவு செய்ய விரும்புகிறோம். இந்த உயிர்களுக்கு புலிகள் பதில் சொல்ல வேண்டும்.

| தடுத்து வைக்கப் பட்டவர் பெயர் | வயது | தடுத்துவைக் கப்பட்ட திகதி | தகவல்தருபவர் பெயர் |
|---|---|---|---|
| 01. நெய்னா முகம்மது றுசான் | 20 | 03.02.1990 | என்.எம்.சித்தி அனீசா |
| 02. கமால் அஜ்மீன் | 29 | 28.05.1991 (வவுனியா) | அப்துல் மஜீத் கமால் |
| 03. முகம்மட் சமீம் நியாஸ் | 21 | 07.02.1990 | எம்.எஸ். மீரான் முகைதீன் |
| 04. வஹாப் இஸ்வத் | 21 | 03.08.1990 | ஏ.எம். முகம்மட் றமீஸ் |
| 05. அப்துல் கபூர் நசீப் | 33 | 28.05.1991 (வவுனியா) | என். இனுல் ஜாரியா |
| 06. எம். அப்துல் காதர் நுஹ்மான் | 38 | 17.03.1990 | றூபியெ நுஹ்மான் |
| 07. அப்துல் மஜீத் ஜலீஸ் | 34 | 05.09.1990 | பறுயின் செய்லா ஜெலீஸ் |
| 08. அப்துல் ஜப்பார் சுபைர் | 37 | 28.05.1991 (வவுனியா) | எஸ். சித்தி நஸீமா |
| 09. முகிதீன் தம்பி ஜபறுல்லாஹ் | 42 | 28.05.1991 | ஜே. சம்சுன் நிஸா |
| 10. ஹம்சார் நவாஸ் | 21 | 20.05.1990 | எச். ஜெமீலா |
| 11. இஸ்மாயில் றமீஸ் | 22 | 01.01.1990 | இ. சுல்தான் பீவி |
| 12. சாஹுல் ஹமீட் தன்சில் | 37 | 20.04.1991 | ரி. நஜீபா |
| 13. அப்துல் ஜப்பார் பைறூஸ் | 23 | 07.02.1990 | எஸ்.எச். அப்துல் ஜப்பார். |
| 14. அப்துல் லத்தீப் முகம்மட் றமீஸ் | 24 | 26.01.1990 | ஏ.எல். சுபைதா |
| 15. அப்துல் லத்தீப் றஜப் | 23 | 02.09.1990 | ஏ.எல். சுபைதா |
| 16. அப்துல் மஜீத் நஜீப் | 33 | 28.05.1991 (வவுனியா) | ஏ.எம். பாத்தும்மா |
| 17. சீனி அலியார் றபீஸ்கான் | 23 | 1998 | எஸ்.ஏ. நூர்ஜஹான் |
| 18. சீனி அலியார் இனுமென் | 30 | 10.1991 | எஸ்.ஏ. நூர்ஜஹான் |
| 19. அப்துல் றஹீம் ஜப்ரின் | 21 | 15.02.1990 | எம்.கே. அப்துல் றஹீம் |
| 20. மீரான் முகைதீன் நஜீப் | 22 | 12.1990 | பரீனா நஜீப் |
| 21. பட்ஜிறிஸ்சாம் றஸீம் | 17 | 07.1989 | எஸ்எச். நஸீர் |
| 22. ஜமால் முகம்மட் றபீக் | 19 | 1990 | |
| 23. பதுர்மீன் ஜெலீஸ் | 23 | 1990 | எஸ்.எச். பதுர்மீன் |
| 24. பதுர்மீன் சிறாஜ் | 16 | 1990 | எஸ்.எச். பதுர்மீன் |
| 25. அப்துல் ஜப்பார் சுன்திவஸ் | 21 | 25.01.1990 | ஏ.ஐ. செய்னம்பு |
| 26. சரீப்மீன் பஸீர் | 17 | 28.05.1991 (வவுனியா) | |
| 27. எஸ். சன்ஜீர் | | 02.05.1990 | |
| 28. சி.எம். சுபைர் அசாட் | | 02.05.1990 | சி.எம். சுபைர் |
| 29. ஏ.ஜி. மிலான் | | 02.05.1990 | |
| 30. வி. மஜீட் | | 30.05.1990 | |
| 31. செய்னுல் ஆப்தீன் பிர்தௌஸ் | | 1990 | எவ். பிர்தௌஸ் |
| 32. என். நிஸ்வான் | | | |
| 33. பதுர்மீன் பாறூக் | | | |
| 34. ஆப்தீன் புஸ்லக் | | | |
| 35. அபூபக்கர் றறூக் | | | |
| 36. கே.எம். நஜிமுமீன் | 30 | 11.10.1984 (மன்னார்) நசூல் | |

## போராளிகள்...! என்று ஏன் அழைத்தாய்...?

பேராவல் கொண்டு
எழுந்த தலைவா!
பெயரில்லா யுன் சமூகத்தை
பார்வியக்க வைத்த தலைவா!
உன் பாசறைப் பயிர்களை
போராளிகள்...! என்று
ஏன் அழைத்தாய்....?

உன் மரணத்திற்கு பின்
இதுதான்...
நல்ல தருணமென்று
தலைமைப் பதவிகளுக்கு...
மல்யுத்தம் புரியும்...
சொல் வித்தையாளர்கள்...
நல் உன் சிந்தனைகளை...
நாசம் புரிந்திட...
போரிடுவார்கள் என்றா
போராளிகள்...! என்று
நீ அழைத்தாய்....?

அரசியல் உரிமைகளுக்காக
பேரம் பேசும் உன்யுக்தி....
அடிமைத்தனத்தை தகர்த்தெறிய...
நீ வளர்த்தெடுத்த சக்தி....
அடிவருடிகளாம் அறிவிலிகள்!
பேரினவாத ஒற்றர்கள்...!
அழித்திட்டார்களே...! இன்று

இதனை உணர்ந்திடா
ஊமைகளாய்
உலாவிடும் மாக்களாய்
உறங்குவதற்காகவா
உன் பயிர்களை
போராளிகள்...! என்று
நீ அழைத்தாய்....?

நாமொரு தேசம்
நமக்கென்று ஒரு தேசியம்...!
நாமென்றும் ஓரினம்...!
நாம் காப்போம் தனித்துவம்...
நமக்கும் இந்நாடு தாயகம்...!
நாம் பெறுவோம் சுதந்திரம்...!
நம் தேசத்தின் தலைவா...!
மக்களை மாக்களாக்கி
வயிறு பிழைக்கிறது
உன் பாசறைப்பயிர்கள்!
இதற்காகவா இவர்களை
போராளிகள்...! என்று
நீ அழைத்தாய்....?

விதையாக நீ புதைந்தாய்...
இதை கண்டேனும்
இனி மேலுமொரு
இளவல்கள் எழுந்தேனும்....
நிலை நாட்டும்...

சுதந்திர தேசம்...!
முஸ்லிம் தேசமென்றா...?
வீணாக போனார்கள்
உன் பயிர்கள்...! இவர்களையா...?
போராளிகள்...! என்று
நீ அழைத்தாய்....?



இன்னுமொரு கூட்டம்...!
பணத்திற்கும் பதவிக்கும்...
மேலுமொரு கூட்டம்...!
அமைச்சுக்களுக்கும்
அடிவருடித் தொழிலுக்கும்....
இதற்குள்ளும் மொரு
ஒற்றர் கூட்டம்..!
காட்டிக் கொடுத்தேனும்
கயவர்கள் கால் கழுவியேனும்
கறப்போம் பணமென்று....
இவர்களெல்லாம் உன்
முற்றத்தில் முளைத்த
கள்ளிச்செடிகள்...! இவர்களையா...?
போராளிகள்...! என்று
நீ அழைத்தாய்....?

-தேச புத்திரன்

## கவனிப்பாரற்றுக் கிடக்கும் காங்கேயனோடை

தேர்தல் வரும்போது வாக்குகளை வேட்டையாடுவதற்கு மாத்திரம் அரசியல்வாதிகள் எங்கள் கிராமத்திற்கு வந்து போவார்கள். தேர்தல் முடிந்ததும் இவ்வரசியல் வாதிகளுக்கு கண்களும் குருடாகி விடுகிறது. எங்கள் கிராமத்தில் இருக்கும் குறை நிறைகளை கூறுவதற்கு யாருமே இல்லை.

எங்களூரின் காட்டுமாவடி வீதியில் இருக்கும் கழிவு நீர் வரும் கான், இது ஆரையம்பதியில் ஆரம்பித்து காட்டுமாவடி வீதியில் முடிவடைகிறது. மழை வந்தால் கழிவு நீர் அனைத்தும் வீதிகளில் தேங்கிக் கிடக்கும். இந்தக் கானை ஏன் ஆற்றங்கரை மட்டும் முழுமையாக்கவில்லை. ஆரையம்பதியிலிருந்து வரும் கழிவு நீர் அனைத்தும் முஸ்லிம் கிராம வீதிகளில் ஓடுகிறது. இதையாரிடம் சொல்வது.

சிறிதுகாலம் சேவையாற்றிய பஸ் போக்குவரத்து, ஆறுமாதகாலமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. இது மக்களுக்கு கடும் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு வைத்தியசாலைக்குப் போய், வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருப்போரை காலை, மாலை பார்வையிட கஸ்டமாக உள்ளது. பஸ் சேவை இல்லாததால் தூர இடங்களுக்கு நடந்து சென்றே வேறு பஸ்ஸில் பயணம் செய்ய வேண்டும். பஸ்சேவை நிறுத்தப்பட்டது ஏன்? இதையாரிடம் கேட்பது?

தீச்சம்பள்ள வீதியில் நடு வீதியை வெட்டி மண் அகழ்ந்து எடுக்கிறார்கள். மண் எந்நாளும் எடுப்பதால் பாதையால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இந்த மண் எடுப்போரை தடுக்க முடியாதா? இந்தக் கிராமத்தின் வீதிகள் அனைத்தும் பள்ளமும் படுகுழியுமாக உள்ளது. அடுத்து எங்கள் பொது நூலகம், இங்கே புத்தகமில்லை. மின்சாரவசதியில்லை. மலசலகூடம் உள்ளது. ஆனால் நீர் வசதியில்லை. சுற்றிவர மதிலில்லை. இப்படியான பிரச்சினைகளை தீர்த்துவைப்பது ஒவ்வொரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடமையாக உள்ளது.

வாக்குகளை பறிக்க ஆசை வார்த்தைகளைக்கூறி மக்களை ஏமாற்றாமல், மக்களுக்குச் சேவை செய்யுங்கள். இனியாவது எங்களூர் மக்களுக்கு விடிவுகாலம் பிறக்குமா? அரசியல்வாதிகளே பதில் கூறுங்கள்.

சே.மு. முபயிதீன் - காங்கேயனோடை.

## திஹாரியில் ஒரு "மையவாடிப்போர்"

**தி**ஹாரியில் "மையவாடிப்போர்" ஒன்று நடைபெற்று வருகின்றது. சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகப் பாவிக்கப்பட்டுவந்த மையவாடியினை உரிமைகோரி பள்ளிவாசல் நிர்வாகத்துக்கும் மையவாடிக்குச் சொந்தம் கொண்டாடும் ஒரு சாராருக்கும் இடையில் வருடக் கணக்காக வழக்கொன்று நடைபெற்று வருகின்றது. ஊர் ஜமாஅத்தும் எதிர்த்தரப்பினரும் வழக்குச் செலவுக்காக இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவுசெய்து கொண்டிருக்கின்றனர். பள்ளி வாயல்களை நிர்வகிக்க போதிய பணம் இல்லாமல் திண்டாடும் நிலை இருக்க, கிடைக்கும் பணத்தை வழக்கு வம்புகளுக்கு செலவு செய்ய முயல்வது சரிதானா?

50 வருடங்களாக நல்லடக்கம் செய்யப்பட்ட கப்றுகளுக்கு சொந்தம் கொண்டாடுவோரைப்பற்றி இஸ்லாம் என்ன கூறுகின்றது என்பதைப்பற்றி எமக்குத் தெரியாது. நம் முன்னோர்கள் பள்ளிவாயல்களுக்கு வாரி வழங்கினார்கள். திஹாரிக்கு பக்கத்தில் அதுவும் கொழும்பு-கண்டி வீதியில் கத்தோலிக்க, பௌத்த புனித ஸ்தலங்களுக்காக பெறுமதிமிக்க நிலங்களை ஏக்கர் கணக்கில் அம்மதத்தைச் சேர்ந்தவர்கள் வழங்கியுள்ளனர். ஆனால் மிகவும் பெறுமதி குறைந்த இடங்களில் உள்ள கப்றுஸ்தானங்களை உரிமையாக்கிக் கொள்ள வழக்காடும் மனிதர்களைப்பற்றி நினைக்க என்ன இருக்கின்றது.

வழக்காட விரயமாகும் பணத்தை பள்ளிவாயல் அபிவிருத்திக்கு பயன்படவும், இறைவனின் கோபத்துக்கு ஊரை இட்டுச்செல்லாமல் தடுக்கவும் செய்வது நம் எல்லோருக்கும் கடமையாகும். திஹாரி பள்ளிவாயல் சம்மேளனம் இது சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். உலமாக்களும் கூடிய கவனமெடுக்க வேண்டும். புனித தலங்களை அவமானத்துக்குள்ளாக்கும் மடமைகளை இல்லாதொழிக்க நாம் அனைவரும் முன்வர வேண்டும்.

- எச்.எம். கவுஸ் மொகிதீன்

## அகதி நிலை மாறுமா?

கடந்த 2003 ஏப்ரல் மாதம் மூதூர், தோப்பூர் பிரதேசங்களில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நடைபெற்ற இனமோதலில் தோப்பூர் பிரதேசத்தில் உள்ள ஆசாத்நகர், ஜின்னா நகர் போன்ற கிராமங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டும், தமது உடமைகள் சூறையாடப்பட்டும், எரிக்கப்பட்டும் துன்புறுத்தப்பட்டதினால் இம்மக்கள் இராணுவ முகாம்களிலும், பாடசாலைகளிலும், அயல் கிராமங்களிலும், உறவினர்களிடத்திலும், பள்ளிவாசல்களிலும் முகாமிட்டுக் கொண்டமை தெரிந்ததே.




இம்மக்களின் ஒரு சிறு பகுதியினர் இன்னும் இம்முகாம்களில் தரித்து இருக்கின்றனர். தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு அச்சம் இருப்பதே அதற்கான காரணமாகும். இவ்வாறு அவர்கள் பயப்படுவதற்கு அவர்கள் மீது இன்னும் சிறிய சிறிய மிரட்டல்களும், சூறையாடல்களும் தமிழ் ஆதிக்க சக்திகளிடமிருந்து தொடர்ந்தும் திணிக்கப்பட்டுக் கொண்டிருப்பதிலுமாகும்.

ஆகவே, இம்மக்கள் எதிர்கொள்கின்ற இடர்களை அகற்றி, மீண்டும் அவர்களை தமது சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென இம்மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஏ.பி.எம். வபீஸ், தோப்பூர் 06.

## அதிபரின் மூர்க்கத்தனமான தண்டிப்பு கண்டிக்கப்பட வேண்டும்!

**கொ**ழும்பு மாளிகாவத்தை ராஜசிங்க மகாவித்தியாலய அதிபரினால் ஏழாம் ஆண்டு மாணவன் முஹம்மத் றுமைஸ் மண்வெட்டிப்பிடியினால் கடுமையாகத்தாக்கப்பட்டு, பொரளை சிறுவர் மருத்துவமனையில் நான்கு நாள் அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவம் கடும் விசனத்திற்குரிய ஒன்றாகவே நோக்கப்படுகின்றது.

சங்கீத பாடத்திற்கான கற்பக அறைக்கு செல்லுமாறு சம்பவதினமன்று அதிபர் கட்டளையிட்டிருந்தார். எனினும் சங்கீத வகுப்பறை மூடப்பட்டும் அப்பாட ஆசிரியர் சமுகம் தராமையினாலும் மாணவர்கள் மீண்டும் தமது வகுப்பறையில் மீண்டிருந்தனர். திடீரென வகுப்பறைக்குள் நுழைந்த அதிபர் எவ்விதமான கேள்விகளுமின்றி முன்வரிசையில் இருந்த மாணவர்களுக்கு மண்வெட்டிப் பிடி - தடியினால் சாரமாரியாகத் தாக்கியுள்ளார்.

கடுமையான தாக்கத்திற்குள்ளான மாணவன் றுமைஸின் தந்தை அதிபரைச் சந்தித்து "வரம்பு மீறிய இத்தகைய தண்டனை" ஏற்கத்தக்கது அல்ல என தமது ஆட்சேபனையை தெரிவித்தமைக்கு, "குழப்படி செய்யும் மாணவர்களுக்குத் தண்டனை வழங்காமல் என்ன செய்வது?" என்ற வினாவை எழுப்பியதோடு, "உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் உங்கள் பிள்ளையை வேறுபாடசாலைக்கு அனுப்புங்கள்" என்று தீர்வையும் முன்வைத்துள்ளார். அதிபரின் மூர்க்கத்தனமான தாக்குதலும், அதற்கான தீர்வும் பதிலும் பொறுப்பற்றது என நம்பும் றுமைஸின் தந்தை எம். ஆர். ஜே. றூமி இச்சம்பவம் பற்றி பொலிஸில் முறையிட்டுள்ளார்.

மாணவர்களை ஆசிரியர்கள் அடித்து தண்டிக்கும் முறைமை இன்றைய கல்வியல் அமைப்பில் கண்டிக்கத்தக்க ஒன்றாக இருக்கும் வேளை இவ்வாறு கடுமையாக மாணவன் றுமைஸ் தாக்கப்பட்டிருப்பது பலத்த கண்டனத்துக்குரியதும், நடவடிக்கை எடுக்கப் படவேண்டிய ஒரு விடயம் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எம்.ஜே.எம். பிர்தௌஸ் புதுக்கடை,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியா அச்சுறுத்தலுக்குள்ளாகிறது! உண்மையை மூடி மறைக்க ஆதிக்க தமிழ் ஊடகங்களும், சக்திகளும் முயற்சி!

(முஸ்லிம் குரல் நேசன்)

கிண்ணியா பைசல் நகரில் ஏற்பட்ட சம்பவங்கள் ஏதோ முஸ்லிம்களின் அடாவடித்தனத்தாலும், ஆத்திரத்தாலும் நடாத்தப்பட்டதாக வெளி உலகிற்குக் காட்ட பலத்த முயற்சிகள் எடுக்கப்பட்டதை நாம் கண்டோம். ஆனால் கிண்ணியா நிலவரம் வேறுமாதிரியாகவே உள்ளது. உண்மைக்கு மாற்றமான செய்திகளைப் பரப்புவதில் தமிழ் ஊடகங்கள் ஏன் இவ்வளவு அக்கறையுடன் செயல்படுகின்றன? முஸ்லிம் விரோதப் போக்கை ஊட்டுவதில் தமிழ் ஊடகங்கள் மிகவும் திட்டமிட்டு செயற்படுவதற்கு கிண்ணியா சம்பவம் மேலும் ஒரு உதாரணமாகும்.

கிண்ணியா பைசல் நகர் அல்-இர்பான் வித்தியாலயத்திற்கு சொந்தமான காணியில் - தமிழ் மக்களைக் கொண்டுவந்து திடீரென குடியேற்றியதால் எழுந்த சூழலே இது. 1991ம் ஆண்டு ஆரம்பித்து இயங்கிவரும் இப்பாடசாலைக்கு மொத்தமாக 5 ஏக்கர் 25 பேர்ச்சஸ் காணி ஒதுக்கப்பட்டுள்ளது. நில அளவைத் திணைக்களத்தின் 1997ம் ஆண்டின் வரைபட இலக்கம் FTP6 இன் தாள் இலக்கம் 190 இதற்கு தெளிவான ஆதாரமாகும்.

சகல பாடசாலைகளுக்குமான காணி உறுதிப்பத்திரங்கள் பெறப்பட வேண்டும் என்று வடக்கு கிழக்கு மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளரின் கோரிக்கைகளை மாகாணக் கல்விப் பணிப்பாளரின் விதப்புரையைப் பெற்ற கிண்ணியாப் பிரதேச செயலாளர் எம்.சீ.எம். சரீப் மேற்படி ஆதாரங்களை மையமாக வைத்து மாகாணக் காணி ஆணையாளர் மத்திய அரசுக் காணி ஆணையாளர் ஆகியோரின் எழுத்து மூல அனுமதியின் பேரில் காணி உறுதியைத் தயாரித்தார்.

கடந்த 2003-09-22 ஆம் திகதி இப்பாடசாலையில் நடந்த விசேட வைபவமொன்றின் போது இந்த உறுதிப்பத்திரத்தைக் கையளிக்குமாறு பாடசாலை நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டதற் கிணங்க பிரதேச செயலாளர் மூதூர் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் வைபவத்தில் வைத்து உறுதியைக் கையளித்தார். இந்த வைபவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கே.எம். திஊர் தௌபீக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டிருந்தார். ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். ஆனால் உறுதி இரகசியமாகக் கொடுக்கப்பட்டதாக ஒரு தமிழ் ஊடகம் கதை சொல்கிறது.

இச் சம்பவத்தினைத் தொடர்ந்து தமிழ் மக்கள் இக்காணியில் அத்துமீறிக் குடியேறினர். இது முஸ்லிம் மக்களிடையே குமுறலை ஏற்படுத்தியது. உறுதி கையளிக்கும் போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இது விடயத்தில் தலையிட்டு சுமுக நிலை ஏற்பட உதவுவார் என பொது மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் ஏனோ அது நடக்கவில்லை.

எனவே, பொறுமையிழந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் 06-10-2003இல் திருமலை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேரடியாக முறைப்பாட்டைச் சமர்ப்பித்தனர். மறுநாள் இப்பகுதிக்கு விஜயம் செய்த அவர்கள் எதுவித கருத்தும் தெரிவிக்காத நிலையில் இப்பகுதி மக்களின் ஆவேசம் அதிகரிக்கவே அது ஆர்ப்பாட்டமாக உருமாறியது.

அதிலிருந்து தான் பதற்றம் அதிகரித்து சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழர்கள் மட்டுமன்றி முஸ்லிம்களும் தாக்கப்பட்டு காயங்களுக்குள்ளாகி இருக்கிறார்கள். முஸ்லிம்களின் சொத்துக்களும் சேதமாக்கப்பட்டுள்ளன. அகதிகளாகி, உணவுத்தட்டுப்பாட்டை அனுபவித்தவர்களில் அதிகமானோரும் முஸ்லிம்கள்தான். இந்த விடயங்களைப் பற்றி தமிழ் ஊடகங்கள் மூச்சுக் கூட விட வில்லை.



இந்தக் காணி தமிழர் ஒருவருக்குச் சொந்தமானது என்றும், அது கோயிலுக்கான காணி என்றும் வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. சூரியன் எப்.எம். தமிழரை முஸ்லிம்கள் மடக்குகிறார்கள் என்ற தொனியில் செய்தி வாசித்தது.

1972ஆம் ஆண்டுக்கு முன்னர் இக்காணிகள் ஆர். சரவணமுத்து என்பவருக்கு சொந்தமாக இருந்தது தான். ஆனால் அது 1/1374ஆம் இலக்க காணி உச்சவரம்புச் சட்டப்பிரகாரம் அப்போதே அரசு உடைமையாக மாறிவிட்டது. ஆலங்கேணிக் கோயிலுக்கும் இந்தக்காணிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

விடுதலைப் புலிகளின் சில உறுப்பினர்கள் தான் முஸ்லிம் விரோதப்போக்கை கொண்டு இந்தக் காணியில் குடியேறுமாறு தமிழ்மக்களைப் பணித்ததாக தமிழ் மக்கள் தரப்பிலிருந்து நம்பகமாகத் தெரிய வருகின்றது. இதுதான் இதன் உண்மைக்கதை. எனினும் முஸ்லிம் மக்களை வாசகர்களாகக் கொண்ட, முஸ்லிம் வர்த்தகர்களின் விளம்பரத்தில் வாழ்கின்ற தமிழ் ஊடகங்கள் ஏனோ தொடர்ந்து முஸ்லிம் விரோதப்போக்குடனேயே செயற்பட்டு வருகின்றன. இந்தச் சம்பவத்தின் உண்மை நிலையை மூடி மறைத்து திரிபுபடுத்தின.

சரவணமுத்துவுக்கு 500 ஏக்கர் காணி இருந்ததாக தினக்குரல் கூறுகிறது. ஆனால் நில அளவைத் திணைக்களப் பதிவுகளின்படி 225 ஏக்கர் காணியே 1972க்கு முன்னர் அவருக்கு இருந்திருக்கிறது. முன்னாள் பிரதியமைச்சர் மர்ஹூம் ஏ.எல். அப்துல் மஜீது இனவிகிதாசாரத்துக்கு மாற்றமாக முஸ்லிம்களுக்கு காணியைப் பகிர்ந்தளித்ததாக அப்பத்திரிகை கூறுகிறது. எனினும், யாரும் எந்த மக்களுக்கும் காணியைப் பகிர்ந்தளிக்கவில்லை. பலவந்தமாகக் குடியேறிய மக்கள் காலப்போக்கில் அதற்குரிமையாளர்களாக மாறினார்கள்.

தற்போது இனவிகிதாசாரத்தைப் பற்றி பேசும் தமிழ் ஊடகங்கள் வடக்கு கிழக்கு மாகாண சபை முஸ்லிம்களின் இனவிகிதாசாரத்துக்கு முற்றிலும் மாற்றமாக முழுமையாக இயங்கி வருவதை ஏன் கண்டு கொள்வதில்லையோ?

- கிண்ணியா முஸ்லிம்களின் குரங்குபாஞ்சான் பூர்வீகக் காணியை கண்முன்னே அபகரித்துக் கொண்டு, கிண்ணியா விவசாயிகளின் இதயம் போன்ற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் கண்டல் காடு பகுதி வயல்களைச் செய்கை பண்ணவிடாமல் தடுத்துக்கொண்டு, அரசினால் சட்டரீதியாகக் கையளிக்கப்பட்ட அல் இர்பான் வித்தியாலயக் காணியை அபகரிக்க முயல்வது யாரோ?

குரங்குபாஞ்சான், உப்பாறு ஆயிலியடி, கல்லடிவெட்டுவான் போன்ற கிராம மக்கள் இன்னும் மீள்குடியேற்றப்படாமல் இருக்கின்றனர். ஆனால் முஸ்லிம் மக்கள் மீளக் குடியமர்த்தப்படுவதாக பக்கச் சார்பான அந்தக்குரல் கூறுகிறது.

எனவே நாட்டில் உண்மையான சமாதானம் மலர வேண்டுமானால் தமிழ் ஊடகங்கள் கசப்பாயினும் உண்மையைச் சொல்ல முன்வரவேண்டும். அப்போது எல்லா மக்களும் எல்லா விடயங்களையும் தெளிவாகப் புரிந்து செயற்பட ஏதுவாயிருக்கும். இனிமேலாவது தமிழ்மக்களில் நடுநிலையாளர்களும், ஊடகங்களும் இதன்படி செயற்பட முன்வருவார்களா?

## கொயிலவத்தை முஸ்லிம்கள் மீது குண்டர்கள் அச்சுறுத்தல்!




வெல்லம்பிட்டிக்கு அருகாமையில் அமைந்துள்ள கொயிலவத்தை பிரதேசத்தில் வாழும் 800க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்களை அப்பிரதேசத்திலிருந்து அகற்றுவதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பிரதேசத்தில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒலிபெருக்கியில் பாங்கு சொல்வதற்கு தடை விதிக்கப்பட்டதினால் இப்பள்ளி வாசல் ஒலிபெருக்கியில் பாங்கு சொல்வதே இல்லை- கடந்த காலங்களில் தொழுதுவிட்டு தொப்பியுடன் திரும்பிவரும் முஸ்லிம்கள் பலர் தாக்கப்பட்டும் உள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக கடந்த 12 ஆம் திகதி இப்பிரதேசத்தில் அமைந்துள்ள சல்மான் ஹோட்டலும், இவ் ஹோட்டல் உரிமையாளரின் வீடும் குண்டர்களினால் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது. அன்றிரவு இப்பிரதேச முஸ்லிம்களை இங்கிருந்து வெளியேறுமாறு குண்டர்கள் எச்சரித்துமுள்ளனர். பொலிசார் தலையிட்டு உரிய பாதுகாப்பை வழங்கினாலும்-இப்பிரதேச முஸ்லிம்கள் அச்சத்துடனேயே காலம் கழித்து வருகின்றனர்.

## இந்த அரசாங்கம் 56 நிறுவனங்களை இழுத்து மூடிவிட்டு 32,000 ஊழியர்களை வெளியேற்றி உள்ளது

இந்த அரசாங்கம் ஆட்சி அமைத்ததன் பின் எவ்வித தொழிற்சங்க போராட்டங்களுமின்றி 56 தனியார் நிறுவனங்களை இழுத்து மூடி விட்டு 32,000 ஊழியர்களின் வேலையை இரத்துச் செய்துள்ளது. அரச நிறுவனங்களில் இருந்து கூட அநேகமானோர் விலத்தப்பட்டுள்ளதுடன், இன்னும் அநேகமானோரின் தொழில் வாய்ப்புக்களை காவு கொள்ளப் பார்க்கிறது.

இழுத்து மூடப்பட்ட தனியார் நிறுவனங்களின் 56வது நிறுவனம்தான் 'காழூல் லங்கா' அதன் 4,000 ஊழியர்களின் நிலை அந்தரத்தில் உள்ளது.

எவ்வித நஷ்டஈட்டுத்தொகையையும் வழங்காமல் மகாவலியில் தொழில் புரியும் 800 பாதுகாப்பு ஊழியர்கள் ஜனவரியில் வேலை நீக்கம் செய்யப்படவுள்ளனர். இதே வேளை வேலையற்ற பட்டதாரிகளின் தொகை 35,000 ஆகும்.

இந்த அரசாங்கத்தில் 1000 பேருக்காவது தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுக்க தொழில் அமைச்சரினால் முடியவில்லை. பொறியியல் நிறுவனங்கள் அசைந்து கொண்டிருக்கின்றன. உள்நாட்டு வர்த்தகமும் சிதைந்து போய் உள்ளது. உள்நாட்டு புத்திஜீவிகள் தங்கள் துறையின் தேவையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி அழுது வடிகின்றனர்.


அரசாங்கத்தின் முக்கிய நிறுவனங்களான இறைவரி திணைக்களம் சுங்கத் திணைக்களம் ஆகியவற்றுள் பிரச்சினைகள் எழுந்துள்ளன.

கணக்கெடுப்பின் படி தற்போதைய வேலையற்றோர் தொகை 46 ஆயிரமாகும். இது தவறான கணக்கெடுப்பாகும். உண்மை நிலை என்னவென்றால் இந்நாட்டின் வேலையற்றோர் தொகை பட்டதாரிகள் அடங்கலாக 2 இலட்சமாகும்

## கல்முனை. சாய்ந்தமருது தமிழ்க் கிராமங்களாகும்?

### புலிகளின் தமிழ் அலை பத்திரிகையில் தெரிவிப்பு!

கல்முனை நகரமும், சாய்ந்தமருது பிரதேசமும் தமிழ் மக்களுக்குச் சொந்தமானதாகும். இப்பிரதேசத்தை முஸ்லிம்கள் ஆக்கிரமித்துள்ளனர். முஸ்லிம் அரசியல்வாதிகளின் சூழ்ச்சியான சதித்திட்டத்தினால் இப்பிரதேசம் பறிபோய் விட்டதாக கடந்த 04-10-2003ல் வெளியான தமிழ் அலை பத்திரிகையில் 4ம் பக்கத்தில் ஒரு முழுப்பக்க கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.


நாங்கள் சாய்ந்தமருது உதவி அரசாங்க அதிபர் பிரிவின் தேச வரைபடத்தை உன்னிப்பாக ஆராய்ந்து பார்க்குமிடத்து "சாய்ந்த மருது தமிழ் பிரிவு" என்ற பெயர் இன்னும் இருப்பதைக் காணமுடியும்.

இக்கட்டுரைக்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பு கல்முனை, சாய்ந்தமருது பிரதேச முஸ்லிம் புத்திஜீவிகளுக்குரியதாகும்.

## தமிழ் ஊடகங்களின் போக்கிற்கெதிராக கிண்ணியா மக்கள் எதிர்ப்புக் காட்டினர்

குரங்குபாஞ்சான், பைசல்நகர் விவகாரங்களில் ஒரு பக்கச் சார்பாக நடந்து கொண்ட குறிப்பிட்ட ஒரு பத்திரிகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக அப்பத்திரிகை 13ம் திகதி மாலை கிண்ணியா அல் அக்ஸாச் சந்தியில் வைத்து எரிக்கப்பட்டது.

கிண்ணியா நலன்புரிச்சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கூடியிருந்து எதிர்ப்புக் கோசங்களை எழுப்பியவாறு பத்திரிகைக்கு தீயிட்டனர். இதனால் சிறிது நேரம் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டது.

தர்மம், நடுநிலையைப் பேணி நம்பகத்தை ஏற்படுத்து, முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்காதே, மனித உணர்வுகளை மலினப்படுத்தாதே போன்ற வாசகங்களையுடைய பதாகைகளை எதிர்ப்பாளர்கள் ஏந்தியிருந்தனர்.

இது தமது முதற்கட்ட எதிர்ப்பு என்றும் இதனை ஏற்று நியாயமாகச் செயற்படாத ஊடகங்களை நாடளாவிய ரீதியில் ஒரு நாள் அடையாளப் புறக்கணிப்புச் செய்யக் கோரும் இயக்கத்தை ஆரம்பிக்கப்போவதாக கிண்ணியா நலன்புரிச் சங்க செயலாளர் வீ.எம். சலீம் முஸ்லிம் குரலுக்குத் தெரிவித்தார்.

## அபுதாபியில் இலங்கைப் பணிப் பெண்ணுக்கு நடந்த துயரம்!

அபுதாபிக்கு பணிப்பெண்ணாகச் சென்ற ஒரு ஏழைப் பெண்ணுக்கு நடந்த கதையை இப்போது அப்பெண் கண்ணீர் மல்க ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட அப்பெண்ணுக்கு நீதி கிடைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தடுத்து நிறுத்தப்பட்டு வருகிறதாம்.



தூதுவராலயத்திற்குச் செல்கையில், இரு வெளிநாட்டினரால் பலவந்தமாகக் கற்பழிக்கப்பட்டார்.

பணிப் பெண்ணாக அபுதாபிக்குச் சென்றபோது மிக மோசமாக பாலியல் வல்லுறவுக்குட்பட்ட அப்பெண் தனக்கு நீதி வழங்கப்படல் வேண்டுமென அபுதாபி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். வழக்கை விசாரித்த நீதிமன்றம்- பாதிக்கப்பட்ட அப்பெண்ணுக்கு இலங்கை ரூபாய்ப்படி 26 இலட்சம் ரூபாவை நஷ்டஈடாக வழங்குவதற்கு தீர்ப்பளித்துள்ளது. இவ்விருபது இலட்சம் ரூபா நஷ்டஈட்டுப் பணத்தை பெறுவதில் அப்பெண்ணுக்கு நடந்த துயரம் அதிர்ச்சி தருவதாக உள்ளது.

அபுதாபி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் அப்பெண் அபுதாபியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார். அங்கு தங்கியிருந்த சமயம் இலங்கை இராஜதந்திரியாலும் ஒருவராம் இலங்கை ராஜதந்திரக் கடவுச்சீட்டை வைத்திருந்த ஒரு பெண்ணின் கணவராலும் 6 மாசம் பாலியல் வல்லுறவுக்குட்பட்டுள்ளார்.

இதனை அங்குள்ள இலங்கைத் தூதுவரிடம் முறையிட்டபோது, நட்டஈட்டில் பணத்தைப் பெறுவதற்கு முன், அத்தூதுவர் இப்பெண்ணை பலவந்தமாக இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளார்.

இது தொடர்பாக விசாரித்துத் தனக்குரிய நஷ்ட ஈட்டுப்பணத்தைப் பெற்றுத்தருமாறு பாதிக்கப்பட்ட அப்பெண் தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்ஹாவிடம் கேட்டுள்ளார்.

இப்பெண் அபுதாபிக்குச் சென்றது 11.11.2000. 02-01-2001 தினம் வெளிநாட்டு முகவர் நிலையத்தின் ஆலோசனையின் படி வாடகைக்காரில் இலங்கைத் தூதுவராலயத்திற்குச் செல்கையில், இரு வெளிநாட்டினரால் பலவந்தமாகக் கற்பழிக்கப்பட்டார்.

அபுதாபி பொலிஸாரின் துரித நடவடிக்கை காரணமாக வழக்கு தொடரப்பட்டது.

இலங்கைத் தூதுவரின் செயலாளர் அப்பெண்ணைத் தனது வீட்டில் ஒரு வாரத்திற்கு வேலைக்கமர்த்தினார். அங்கு செயலாளரின் கணவனால் கற்பழிக்கப்பட்டார்.

அபுதாபித் தூதரக அதிகாரிகளினால் இவ்வாறு பலர் கற்பழிக்கப்படுவதாக அப்பெண கூறுகிறார். நீதி மன்றத்தில் தீர்ப்புக் கிடைக்கும் வரை சுமார் ஒரு ஆண்டு அங்கு தங்கியிருந்தார்.

நஷ்டஈடாக ஒரு லட்சம் திர்ஹம் (ரூபா இருபத்தியாறு லட்சம்) தீர்ப்பு வழங்கப்பட்டது. தூதுவரின் செயலாளரின் கணவரது துர்நடத்தை பற்றித் தூதுவருக்கு முறையிட்ட போது இலங்கைக்கு அனுப்பப்பட்டார். இது நடந்து ஒரு வருடமாகி விட்டது.

அரசாங்கம் மாறிய போதிலும் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நஷ்டஈட்டைப் பெற்றுக் கொடுக்கவோ துர்நடத்தைக்குப் பொறுப்பாக இருந்த தூதரக அதிகாரிகளை தண்டிக்கவோ நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அபூ அஹ்ஸன்

# வெளிச்ச வாசல்

## புலிகளுக்காக அழும் 'மான்'

நவீன உலகில் போர் என்பது ஆயுதப் போர், ஊடகப் போர் என்று வகுக்கப்பட்டு விட்டதை மேற்கத்தேய ஊடகங்களில் மாத்திரமன்றி உள்ளூர் ஊடகங்கள் மூலமும் நாம் தெளிவாக உணர்ந்து வருகிறோம். செப்டம்பர் 11 தாக்குதல் நடந்த ஒரு சில மணித்தியாலங்களில் ஏதோ ஒரு சந்தோஷ நிகழ்வுக்காக எப்போதோ கைதட்டி ஆரவாரம் செய்த பலஸ்தீனச் சிறுவர்கள் சிலரை சி.என்.என் ஒளிபரப்பிற்று. அதன் நோக்கம், இதனை முஸ்லிம்கள் செய்தார்கள் என்பதைக் காட்டுவது மட்டுமன்றி, முஸ்லிம்கள் இது குறித்து பேரானந்தப் படுகிறார்கள் என்பதை உலகுக்குக் காட்டுவதேயாகும். ஆனால் பின்னர் அக்காட்சி பற்றிய விமர்சனங்கள் எழுந்து, அது பொய்யானது என்று நிரூபிக்கப் பட்டத ாக அறியக் கிடைத்தது.

நீண்ட காலங்களாக பலஸ்தீன் விவகாரங்களிலும் அண்மைய ஆப்கான் ஈராக் போன்றவற்றைத் தாக்கும் நடவடிக்கைகளிலும் பொய்யான தகவல்களே தரப்பட்டன என்பதற்கு ஆதாரங்கள் எதுவும் தேவையில்லை.

தாங்கள் செய்யத் துணிந்த தப்பான அல்லது மனுக்குல விரோதச் செயல்களை மூடி மறைப்பதற்காக அதற்கு ஏற்றவாறான செய்திகளைச் சொல்வதற்காக அக்காரியங்களில் ஈடுபடுவோர் திட்டமிட்டு இவற்றை மேற்கொண்டு வருகின்றனர். பல வேளைகளில் ஊடக நிறுவனங்கள் மட்டுமன்றி, பொதுவான நபர்கள், முக்கியஸ்தர்கள் போன்றோரையும் சம்பந்தப் பட்டவர்கள் பணங் கொடுத்து வாங்கி விடுவதுண்டு. அல்லது அவர்களுக்கு சௌகரியமான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து விட்டு அவர்களைத் தங்களுக்குச் சார்பாகக் குரல் கொடுப்பதற்கோ எழுதுவதற்கோ பயன்படுத்திக் கொள்வதுமுண்டு. அவ்வாறு வாங்கப்பட்டவர்கள் அதன் பிறகு 'மனச்சாட்சியாவது.. மண்ணாவது' எனும் போக்கில் தங்களது எஜமானர்களின் தப்புக்களுக்குத் தாளம் போடத் தொடங்கி விடுகின்றனர்.

யுத்தம் ஒன்றின் பின்னணியில்தான் நிறுவனங்களும் தனி நபர்களும் இவ்வாறு கூலிக்கு அமர்த்தப் படுவார்கள் என்றில்லை. 'சக்ராத்' ஹாலில் இருக்கும் அரசுகள், பிளவு பட்ட கட்சிகள், பணத்தோடு சம்பந்தப்பட்ட பொது நிறுவனங்களும் தங்களுக்குத் தேவையான காய் நகர்த்தலுக்கு கைக்கூலிகளைப் பயன்படுத்துவதுண்டு. யுத்தம் பற்றிப் பேச வருவதாலேயே அதனை இங்கு முதன்மைப் படுத்துகிறேன்.

இந்தியாவிலிருந்து நடிகர்கள் என்றாலென்ன, எழுத்தாளர்கள் என்றாலென்ன, கவிஞர்கள் என்றாலென்ன, பாடகர்கள் என்றால் என்ன - அவர்களைச் சுமந்து காவடி ஆட ஒரு கூட்டம் எப்போதும் நம் நாட்டில் தயாராக இருந்து கொண்டேயிருக்கிறது. சினிமாவின் பின்னணியில் துவங்கிய இந்த மோகம் முஸ்லிம் சமூகத்தையும் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கி வருகிறது. இந்தியாவிலிருந்து வருபவரோடு சேர்ந்து திரிய, அவரோடு சேர்ந்து ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ள, அவரது வாய்களால் தமக்கு ஒரு அங்கீகார வார்த்தையைப் பெற்றுக் கொள்ளவென்றெல்லாம் ஒரு கூட்டம் எப்போதும் ஓடிக்கொண்டேயிருக்கிறது. இவர்களில் பாடகர்கள், நடிக, நடிகையரைத் தவிர்த்துக் கொள்ளுவோம். ஏனெனில் அவர்களை அழைத்து வருபவர்கள் ஏதோ ஒரு வருமான நோக்கில், வர்த்தக நோக்கில் செயல்படுகின்றனர் என்பதால் அது வியாபாரத்துக்குள் அடங்கிவிடும். அவர்கள் 'கலைச் சேவை' என்று 'கதை' விட்டாலும் கூட, நாம் அதைக் கண்டு கொள்ளத் தேவையில்லை.

தனிப்பட்ட முறையில் சில கவிஞர்களை, எழுத்தாளர்களை, பேச்சாளர்களைத் தனியாரோ அல்லது அமைப்புகளோ அழைத்து வருவது வழக்கமாயிருக்கிறது. ஆனால் அங்கிருந்து வரும் கவிஞர்கள், எழுத்தாளர்கள் எவரும் 'சும்மா' நம்மீது கொண்ட கரிசனையிலும் அன்பிலும் ஒரு போதும் வருவதில்லை. போக வர விமானச் சீட்டு, ஒரு தொகை அன்பளிப்பு, தங்க இடம், போக்கு வரத்து, நமது ஊடகங்களில் சொந்த நாட்டில் கிடைக்காத விளம்பரம் ஆகியவை அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இவ்வாறு கனடாவிற்கு ஒரு முறை அழைக்கப்பட்ட கவிஞர் வைரமுத்து, திடீரென இலங்கைத் தமிழர்களில் பாசம் பொங்க - உணர்ச்சிவசப்பட்டுப் பேசியதை அங்கிருந்த தமிழ்ப் புத்தி ஜீவிகள் கேலி செய்தார் கள்.

ஏனென்றால் கனடாவுக்கு அழைக்க
கைத் தமிழர்களில் அவருக்குப் பாசம்
அவர்களது நோவுகளைக் கண்டு கொள்
குறித்து மிகக் காரசாரமாக புகலிட
கைகளில் விமர்சித்தார்கள். கவிஞர்
வந்து நிகழ்ந்த அசிங்கங்களை இங்
பலர் அறி வார்கள். இங்கு வந்த பிறகும்
கை தந்தால்தான் கூட்டத்தில்
கமில்லாமல் கணக்குப் பேசி நாறிப்
இந்த நிகழ்வின் தாக்கத்தில் இந்தியா
ஒரு கூட்டத்தில் 'இந்தியாவுக்குக்
ஒரு தேசம் இருக்கிறது' என்று இலங்
புண்ணியவான் அவர். காசை வீசி
விக் கென்ன்டு 'ஆகா இதுவல்லவோ
ளல்லவோ மனிதர்கள்' என்று
பார். இந்தியாவிலிருந்து வரும் இம்மு
பணத்தைக் கொடுத்து எப்படியும்
லாம் என்பதே இதிலிருந்து தெளிவா



ப்படும் வரை இலங்
ஏற்பட்டிருக்கவில்லை.
ளவுமில்லை. இந்நிகழ்வு
த்திலிருந்து வரும் சஞ்சி
மு.மேத்தா இலங்கைக்கு
குள்ள இலக்கியவாதி கள்
தனக்கு இவ்வளவு தொ
பேசுவேன் என்று வெட்
போன கவிஞர் அவர்.
வுக்குச் சென்ற பிறகும்
கீழே செருப்பு மாதிரி
கையை வர்ணித்த
எறிந்திருந்தால் கௌ
அற்புத தேசம்... இவர்க
புகழ்ந்து தள்ளியிருப்
க்கியஸ்தர்களை நாம்
பயன்படுத்திக் கொள்ள
கிறது.

கடந்த வருட இறுதியில் என்று நினைக்கிறேன். இலங்கையின் வடபகுதியில் நடைபெற்ற ஒரு நிகழ்வுக்கு கவிஞர் இன்குலாப் வந்து சென் றார். இல்லை, அழைத்து வந்தார்கள். இன்குலாபின் இயற் பெயர் சாஹுல் ஹமீது. இவ்வாறு அடிக்கடி வந்து செல்பவர்களில் கவிக்கோ அப்துல் ரகுமானும் ஒருவர். மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் புத்தக வெளியீட்டு விழாவுக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். அஷ்ரஃப் என்பவர் யார்? அவர் எப்படி உருவானார்? ஏன் உருவானார் என்பதெல்லாம் கவிக்கோவுக்கு நன்கு தெரியும். அஷ்ரப் அவர்களின் பேரில் கவிதைக்கான அறக்கட்டளை துவங்கி நடத்தி வரும் அவருக்கு இதுவெல்லாம் தெரியாது என்று சொல்வதற்கில்லை. பின்னர் கம்பன் விழாவுக்கு வந்து சென்றிருக்கிறார். உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக்கு வந்து சென்ற போது இந்நாட்டு முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப் பட்ட படுகொலைகள், அநியாயங்கள் பற்றிப் பிறந்த - ஐம்பது கவிஞர்களின் கவிதைகளின் தொகுப்பு கொடுக்கப்பட்டது. (இது மாநாட்டுப் பேராளர்களுக்கு வழங்கப் பட்டது) இலங்கை முஸ்லிம்களின் அநாதரவான, ஆபத்தான நிலை பற்றி அவருக்குத் தெரிந்திருந்தது.

இவ்வருட ஜனவரியில் வடபகுதியில் நடந்த நிகழ்வுக்காக வந்து சென்ற அவர், ஆனந்த விகடனில் 'இலங்கைத் தமிழர்களின் கண்ணீர்க் கதை' எழுத ஆரம்பித்தார். இருபத்து நான்கு வாரங்கள் தொடர்ச்சியாக அதை எழுதி முடித்திருக்கிறார். இதன் மூலம் இலங்கையில் அவர் கடமைப்பட்டவர்களுக்கும் இந்தியாவில் தமிழ் சமூகத்துக்குமிடையில் அவரது நன் மதிப்பை மேலும் வளர்த்துக் கொள்ள அவரால் முடிந்திருக்கிறது. தமிழர்களின் கண்ணீர்க் கதை ஒன்றல்ல ஆயிரம் எழுதட்டும். தமிழர்களின் மேல் பாசமும் நேசமும் கொண்டவர் என்று பேசப்படட்டும். நமக்கு ஆட்சேபனை இல்லை.

ஆனால் இந்த நாட்டின் பெரும்பான்மையினரால் நசுக்கப்பட்ட தமிழர்களின் மீது அவர் காட்டுகின்ற கரிசனையில் ஒரு துளியாவது தனது சொந்தச் சகோதரர்கள் பற்றி அவரால் எழுத முடியாமல் போனது ஏன்? இலங்கை முஸ்லிம் இரண்டு பெரும்பான்மையினரால் சீரழிக்கப்படுகிறார்களே அதை அவரால் ஏன் எழுத முடியவில்லை? பலஸ்தீன யூதர்கள் ஆடிய கொலை வெறித் தாண்டவத்தின் இரண்டாம் கட்டத்தை காத்தான்குடிப் பள்ளிவாசல்களில் நடத்திக் காட்டிய பாதகத்தை அவரால் ஏன் எழுத முடியாமல் போனது? ஏறாவூரில் நடு நிசியில் கத்தி கொண்டு நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள், பெண்கள் உட்பட அறுத்து வீசினார்களே... அதை ஏன் அவரால் எழுத முடியவில்லை. அழிஞ்சிப் பொத்தானையில் குழந்தைகளைத் தூக்கி மரத்தில் அறைந்து கொன்றார்களே... முஸ்லிம் கர்ப்பிணிகளின் வயிற்றைக் கிழித்து சிசுக்களை எடுத்து காலில் நசித்துக் கொன்றார்களே... இவற்றைக் கவிக்கோ எழுதமாட்டாரா?

அவர் யாரை மாவீரர் என்று புகழ்கிறாரோ அந்த மாவீரர்கள் இலங்கை முஸ்லிம்களுக்குச் செய்த மாபெருங் கொடூரங்கள் பற்றியும் அவர் எழுத வேண்டாமா? தமிழர்களுக்கு நேர்ந்த கதி குறித்துப் பேச உலகமெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்கள். தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் எத்தனையோ ஊடகங்கள் இருக்கின்றன. இவற்றில் எதிலாவது ஒரு தொடர் அல்ல, முஸ்லிம்களைப் பற்றி ஒரு பக்கக் கட்டுரை எழுதவாவது கவிக்கோவால் முடியுமா? அல்லது ஒரு முஸ்லிம் எழுதியதை அவரது செல்வாக்கைப் பிரயோகித்து பிரசுரித்துக் கொடுக்கவாவது முடியுமா அவரால்?

தமிழ்ச் சகோதரர்களுக்காகக் கண்ணீர் விடுகிறாரே... கவிக்கோ. தனது சொந்த நாட்டில் கற்பழிக்கப்படும் முஸ்லிம் பெண்கள் பற்றி அவர் ஏன் எழுதவில்லை. காஷ்மீரில் சித்திரவதைக் குள்ளாக்கப்படும் முஸ்லிம் இளைஞர்கள் பற்றி, கொலை செய்யப்படும் முஸ்லிம்கள் பற்றியெல்லாம் எழுத வேண்டாமோ?

எழுத முடியாது. எழுதினால் அவர் கடமைப் பட்டவர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டு விடும். இந்தியத் தமிழர்கள் இவரை வேறுவிதமாகப் பார்ப்பார்கள். தமிழ் உலகிலும் அவர்களது பத்திரிகை, சஞ்சிகைகளிலும் அவருக்கு உள்ள செல்வாக்கு இறங்கி விடும். சொந்தச் சமுதாயத்தின் இரத்தத்தின் மீது நின்று அந்த இரத்தத்தைச் சிந்தச்செய்தவர்களைத் திருப்திப்படுத்திக் கொண்டிருக்கும் காரியத்தைச் செய்த கவிக்கோவை மானமுள்ள எல்லா இலங்கை முஸ்லிம்களும் புறக்கணிக்க வேண்டும். தனி நபர்களோ முஸ்லிம் அமைப்புகளோ அவரை அழைப்பதை நிறுத்த வேண்டும்.

அவர் அத்தொடரை எழுதி முடிக்கும் போது சகட்டு மேனிக்காக 60 முஸ்லிம்கள் பள்ளிவாயிலில் படுகொலை செய்யப்பட்டதாக அப்பட்டமான பொய்யை எழுதியிருக்கிறார். பள்ளிவாயிலில் கொலையான மீதி 43 முஸ்லிம்களையும் கவிக்கோ வரலாற்றில் புதைத்து விட்டார். இனி அவரது தொடர் கட்டுரை நூல் வடிவம் பெறும். இந்தியாவிலும் இலங்கையிலும் பிய்த்துக் கொண்டு விற்பனையாகும். கவிக்கோவுக்கு நிறையப் பணம் கிடைக்கும்.

ஒரு வகையில் தமிழ் மாவீரர்கள் வெற்றி பெற்று விட்டார்கள். அவர்கள் இந்த நிமிடம் வரை எந்தச் சமுதாயத்தின் மீது அடாவடித்தனம் மேற் கொண்டு வருகிறார்களோ - எந்தச் சமுதாயத்தைக் கொன்று குவித்து வருகிறார்களோ - எந்தச் சமுதாயத்தின் உரிமைகளைப் புறக்கணிக்கிறார்களோ - எந்தச் சமுதாயத்தை துப்பாக்கிகளைக் காட்டிப் பணியவைத்து அச்சுறுத்தி வருகிறார்களோ - எந்தச் சமுதாயத்திடம் பலாத்காரமாகக் கப்பம் வசூலித்து வருகிறார்களோ - அந்தச் சமுதாயத்திலிருந்து ஒரு முக்கியஸ்தரைக் கொண்டு தமக்கு அங்கீகாரம் பெற்றுக் கொண்டார்கள்.

'நரம்பு அறுந்த யாழ்' எழுதியதன் மூலம் நமது கழுத்து நரம்புகளை அறுத்த கவிக்கோ அப்துல் ரகுமான் இலங்கை முஸ்லிம்களுக்குச் செய்திருப்பது மாபெரும் வரலாற்று துரோகமாகும்.

# இலங்கைச் சிறுபான்மையினரின் உரிமைகள்
# அரசியல் சாசனப் பாதுகாப்பு

எச்.எல்.டி. சில்வா P.C.
Island 9.10.2003.



## சாரம்

ஆங்கில ஊடகங்கள்

தமிழில் : முஹம்மட் மதனி

நான் இப்போது முஸ்லிம் சமூகத்தினரின் அரசியல் உரிமைகள் பற்றி உரையாடப் போகிறேன். சிறுபான்மை முஸ்லிம்களின் அரசியல், குடியியல் உரிமைகளைப் பொறுத்த வரையில் வடக்கு கிழக்கைத் தவிர பிற பிரதேசங்களில் சிங்களப் பெரும்பான்மை கொண்ட பெரும்பான்மைக் கட்சிகளாலும், புதிதாக உருவாக்கப்பட்ட இ.மு.கா. மூலமாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இக்கட்சி கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் அக்கறைகளையிட்டு விசேட கவனம் செலுத்துகிறது. இக்கால கட்டத்தில் வரலாற்று ரீதியான ஒரு சமூகம் என்ற வகையில் அவர்களது இருப்பு சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இப்படியான அபாயகரமான நிலை நிலவுவதால் இவ்விடயத்தையிட்டு நான் அதிகம் பேசாமல் சில பொதுவான கருத்துக்களை மட்டும் முன் வைக்கிறேன்.

"இலங்கையின் இனப்பிரச்சினை" பற்றி உரையாடப்படுகையில் அது சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இடையிலான ஒரு பிரச்சினையாகவே கணிக்கப்படுகிறது. இப்படி உண்மையான பிரச்சினையினை, மேலோட்டமாகக் குறைத்து மதிப்பிடுவது தவறானது.

இனப்பிரச்சினையினை இறுதியான வகையில் தீர்ப்பதில் முக்கிய் பங்கு வகிக்கக்கூடிய இதுவரை கவனிக்கப்படாத முஸ்லிம் பிரச்சினை என மூன்றாம் சக்தியொன்று உள்ளது என்பதை மறக்கக் கூடாது.

" தமிழ் பேசும் மக்கள்" என்ற தலைப்பின்கீழ் முஸ்லிம்களது உரிமைகளும் அக்கறைகளும் கீழ்ப்படுத்தப்படலாகாது. ஏனென்றால் முஸ்லிம்களின் தனித்துவமும், கலாசார வேறுபாடுகளும் பிரதிபலிக்கப்படுகின்ற மார்க்க அடிப்படையானது முஸ்லிம்களைத் தமிழர்களுடன் இணைத்து நோக்கக் கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது பற்றிப் பரவலாகப் பேசப்பட்டாலும், தமது பாரம்பரிய பூமி என்ற அடிப்படையில் புலிகளின் பணிப்பின் பேரில் வடக்கு கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட முடியாதது என்று தமிழ் அரசியல் கட்சிகள் கோருவது கருத்துவேறுபாட்டையும், எதிர்ப்பையும் தோற்றுவிக்கிறது.

இலங்கையில் இனப்பிரச்சினை எனக் கூறப்படுவதன் உண்மையான யதார்த்தம், வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தனியான தமிழ் அரசொன்றினை நிறுவி இலங்கையைத் துண்டாடிச் சிதற வைப்பதாகும். நியாயமற்ற இனப் பாகுபாடு என்று குறை கூறி உலக நாடுகளின் பரிவான கவனத்தை ஈர்ப்பதற்காக நியாயமான கோரிக்கை என்ற போர்வையில் இறைமையுள்ள நாட்டின் மூன்றில் ஒரு பகுதி நிலப்பிரிவினையைக் கோருவதே இவர்களது திட்டமாகும். இதற்கு இணக்கம் காணப்பட்டால் இலங்கையின் கடற்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதியின் கட்டுப்பாட்டை இழக்கும் நிலை உருவாகும். (அண்மையில் உள்ள கடற்பரப்பு, முழு இலங்கை மக்களும் அனுபவிக்கக் கூடிய தனியான பொருளாதார வலயம் என்பன) அடிப்படையில் இது இறைமை கொண்ட ஒரு நாட்டின் சட்டரீதியான கட்டுப்பாட்டில் இருந்து, சுய ஆதிக்கம் என்ற பெயரில் ஆயுத பலத்தினால் ஒரு இனம் ஒரு பகுதியின் கட்டுப்பாட்டைப் பெறுவதாகும். இந்த ஆபத்தினையிட்டு அரசாங்கம் அக்கறை கொண்டதாகக் காணப்படவில்லை. புலிகள் வெளிப்படையான வகையில் சட்டத்தை மீறிய போதிலும் அரசாங்கம் அதையிட்டுக் கரிசனை தெரிவியாதிருப்பது ஆச்சரியமானது.

தெளிவாகக் கூறப் போனால் எமது அரசியல்வாதிகள், யாதார்த்தைப் புரிந் கொள்ள முடியாத முட்டால்கள் அல்லர் மாறாக அவர்கள் பதவிக்கு வருவதற்காக வெறும் வாக்குறுதியளித்த வேடதாரிகளே. "தமிழர்களின் அபிலாசைகள்" எனப்படுபவையும் ஆக்கிரமிப்பை மனதிற் கொண்ட ஓர் அரசியல் அமைப்பின் வெளிப்பாடுகளே. இது வரலாற்று ரீதியில் ஜேர்மனியர்களின் LEBENS RAVI க்கான கோரிக்கை போன்றது.

இங்கு எழும் கேள்வி, இத்தகைய ஒரு கோரிக்கையின் சட்டபூர்வமான தன்மை பற்றியதாகும். குறிப்பிட்ட ஒரு சமூகம் தனது அக்கறையினை மட்டும் மனதிற் கொண்டு முன்வைக்கும் இத்தகைய ஒன்றை அனுமதிக்க முடியுமா? மாகாணத்தில் வாழும் பிற இரு இனங்களின் நலனைத் துச்சமென மதித்து இராணுவ பலத்தால் விடுக்கப்படும் இத்தகைய ஒரு கோரிக்கையினை நீதி, நியாயத்தை மதிக்கும் எவரும் அங்கீகரிக்க மாட்டார். தமிழ் தாயகம் எனும் கோரிக்கைக்கு எந்தவித வரலாற்று ரீதியான பின்னணியும் இல்லை என ஆய்வாளர்கள் எழுதியுள்ளனர்.

இவர்களது கோரிக்கை சட்டபூர்வமற்ற, வலிதற்ற ஒரு காணியுறுதியினை முன்வைத்துக் காணியின் சட்டபூர்வ உரிமையினைக் கோருவது போன்றதாகும்.

தமது கோரிக்கை பேரம் பேசப்பட முடியாதவை (NON NEGOTIABLE) என அவர்களே வலியுறுத்துவதன் காரணம் அதற்கு தகுந்த ஆதாரமும், அடிப்படையும் அவர்களிடம் இல்லாமையாகும்.

இரு மாகாணங்களும் இணைக்கப்பட்டால் சிங்கள முஸ்லிம் மக்கள் சிறுபான்மையினராவர். மாகாண எல்லைகளை இணைப்பதன் நோக்கம் அவர்களது பெரும்பான்மையினரைப் பெறவாகும். முஸ்லிம் சிங்கள இனத்தவர்கள் தமிழர்களினால் உரிமை மறுக்கப்பட்டு அங்கிருந்து பாரிய அளவில் வெளியேற்றப்படும் நிலை ஏற்படும்.

முஸ்லிம்களும் சிங்களவர்களும் இதனை ஆட்சேபித்தால் புலிகளின் இராணுவ பலத்துடன் மோதும் நிலை உருவாகும். இவற்றின் விளைவுகள் பயங்கரமாக இருக்கும். இலங்கை இராணுவத்தின் படைப்பலம் பற்றிய யதார்த்த நிலைமையினை உணர்ந்தால் பேச்சு வார்த்தைகளின் போது உரிமைகள் என்ற பெயரில் அளிக்கப்படும் வாக்குறுதிகள் யாவும் அர்த்தமற்றவை. அவை மணலில் எழுதப்பட்ட வாசகங்கள் போன்று இருக்கும். அரசாங்கம் முஸ்லிம் சிங்கள மக்களின் பாதுகாப்பைப் பற்றி உண்மையான அக்கறை கொண்டதாக இருந்தால் மாகாணங்களின் இணைப்பை ஒரு போதும் அனுமதிக்கக்கூடாது.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன அவசர கால விதிகளின் கீழ் வடக்கு.கிழக்கை இணைத்ததில் பல சட்டப் பிரச்சினைகள் உண்டு.

ஆகவே இப்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதி அரசியல் அமைப்பின் கீழ் செயற்பட்டு இரு மாகாணங்களுக்கும் தனித்தனி ஆளுநர்களை நியமிக்க வேண்டும். புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை என்பதன் கீழ் காலத்தை வீணடிக்காது அரசியல் அமைப்பின் பிரகாரம் செயற்பட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது முக்கியம்.

கோழிக்கூட்டை நரிகளிடம் ஒப்படைத்த நிலை ஏற்படக்கூடாது.


## உலக இஸ்லாமிய ஒன்றியம்!
## அகில இலங்கை ரீதியாக அமைப்பாளர்கள் தேவை

சமூக, கலாசார, கல்வி மறுமலர்ச்சி, பொருளாதார விடயங்களை உள்ளடக்கியதாக குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் எமது பணியினை விருத்தி செய்வதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

எனவே சுயநலம் பாராது முழுமையாக சமூக சேவையினை மேற்கொள்ள விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் 100/= க்கான காசுக்கட்டளையை மருதமுனைத் தபாலகத்தில் (32310) மாற்றக்கூடியதாக "தலைவர் தலைமைக் காரியாலயம், உலக இஸ்லாமிய ஒன்றியம், 36, ஹுதாப் பள்ளிவீதி, பெரிய நீலாவணை என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைப்பதோடு பாஸ்போட் அளவிலான 02 புகைப்படங்களையும் அனுப்பி வைக்கவும்.


## இலங்கையில் அழிவின் அச்சுறுத்தலுக்கு உட்பட்டுள்ள ஊர்ந்து செல்லும் பிராணிகள்

இலங்கையின் பலவிதமான பொருத்தமற்ற சுவாத்தியம் காரணமாக இந்நாட்டுக்கே உரித்தான சில ஊர்ந்து செல்லும் பிராணிகள் அழிவுக்குள்ளாகும் அச்சுறுத்தலுக்கு முகங் கொடுத்துள்ளன. அவற்றுள் முதலைகள், ஓணான்கள், மலைப்பாம்புகள், ஆமைகள், கடலாமைகள் ஆகியனவையே முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும்: இப்பட்டியலில் சில நத்தைகள், இலங்கைப்புலிகள், வண்ணத்துப் பூச்சிகள் ஆகியனவும் அடங்குகின்றன. சுற்றுச் சூழல் பரிசோதனைகளின்போது இந்த விடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய பிராணிகளை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு கடத்துவதிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். என்பது கவலைக்குரிய விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

ஆசிரியருக்கு!
அவசியம் இதைப் பிரசுரித்து பட்டதாரிகளை சிந்திக்க வையுங்கள். சமூகம் நிம்மதியாக வாழ வேண்டும். படித்த கும்பல் படுக்கையில் இருக்கிறது. அவர்களை வெளியே எடுங்கள்.

*புத்தி ஜீவிகளுக்கு:*

(இங்கே நான் புத்தி ஜீவிகள் என விழிப்பது பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றும், தற்போது பட்டம் பெறுவதற்காய் படித்துக் கொண்டிருக்கும் நண்பர்களைத்தான்)

நண்பர்களே! நீங்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள் என்றும் சமூகத்தை வழி நடத்தக் கூடியவர்கள் என்றும் நாளைய எமது சமூகத்தின் தலைவர்கள் என்றும் சமூகம் எண்ணிக் கொண்டிருக்கின்றது. அவர்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்களாக நீங்கள் இருக்கிறீர்களா என சற்று நிதானித்துச் சிந்தித்துப் பாருங்கள். உங்களை நம்பிக்கொண்டிருக்கும் எமது சமூகத்தை வழி நடாத்தும் பொறுப்பை நீங்கள் எப்போதும் தட்டிக் கழிக்க முடியாது. பல்கலைக்கழகத்தில் நீங்கள் பல்வேறு சௌகரியங்களை அனுபவித்துக் கொண்டு உங்களையும் மறந்து உங்கள் சமூகத்தையும் மறந்து ஏதோ மயக்கத்தில் மூழ்கி கிடப்பதற்கு எமது சமூகம் அனுமதியளிக்காது. முதலில் உங்களைப் பற்றிய ஓர் ஆக்கபூர்வமான வடிவமைப்பைக் கட்டமைத்துக் கொண்டு அதன் மூலம் உங்கள் ஆற்றலை. அறிவை நாலா பக்கமும் சிதறிக்கிடக்கும் இச்சமூகத்தை சீர்படுத்த பயன்படுத்துங்கள். சிந்தியுங்கள்! நீங்கள் மேய்ப்பாளர்கள் உங்கள் மேய்ப்பைப்பற்றி நாளை மஹ்ஷரில் விசாரிக்கப்படுவீர்கள். எச்சரிக்கையாக இருங்கள்.

உங்கள் சுயநலத்துக்காக அரசியல் வாதிகளின் கையாட்களாகவும் அவர்களின் அடிமைகளாகவும் ஆகிவிடாதீர்கள். இன்று எமது அரசியல் தலைவர்கள் எமது சமூகத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எமது அரசியல் சமூகம் மாசுபட்டு. மானம் கெட்டு. குட்டிச்சுவராய் குறுகிப்போய் விட்டது. அவர்களிடம் என்றும் ஆக்கபூர்வமான ஒரு கொள்கைத் திட்டம் இருந்ததில்லை. எம்மை ஆள்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் அவர்கள் பாக்கியசாலிகள். ஏனெனில் நாம் அவர்கள்செய்து கொண்டிருக்கும் அருவருப்பான செயற்திட்டங்களைக் கண்டு கொள்ளாமல் இருக்கிறோமே நண்பர்களே! தலைவர்கள் என்பவர்கள் யார்? அவர்களுக்கும் சமூகத்திற்கும் இருக்கும் தொடர்புகள் யாவை? என்பவற்றை உணரச் செய்வதில்தான் சமூகத்தினதும் உங்களினதும் வெற்றி மறைந்திருக்கின்றது. அரசியல் வாதிகளால் வாழ வேண்டிய மக்கள் அவர்களினாலேயே மடிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை புரிய வையுங்கள்.

எமது சமூகம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றது. அவர்களைச் சுற்றி என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். பாசிசவாதம் அவர்களைச் சுற்றி சதிவலை விரித்துக் காத்திருக்கின்றது. அவர்கள் அந்த வலையில் சிக்கி சின்னா பின்னமாவதற்கு முன் உறக்கத்திலிருந்து விளிப்படையச் செய்ய வேண்டிய கடப்பாடு உங்கள் மீதே இருக்கின்றது. உங்கள் சமூகத்தை அடக்கு முறையிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் காப்பாற்ற உங்களால் முடிய வில்லையானால் நீங்கள் கற்ற கல்வியும், பெற்ற பட்டமும் வெறும் சோடனைதான் என்பதை மறந்து விடாதீர்கள். இன்று எமது சமூகம் மீள முடியாத ஒரு துன்ப நிலையிலிருக்கிறது. வெகுவிரைவில் நாம் நாடற்ற சமூகமாக மாற்றப்படலாம். இடைக்கால நிர்வாகம் இதற்கு சாதகமாகவும். சாத்தியமாகவும் மாறலாம் என்பது உங்களால் வெளிப்படுத்தப்பட வேண்டிய ஒரு உண்மையாகும்.



நண்பர்களே! வாழ்க்கையானது மல்லிகைப் பூ பரப்பிய படுக்கையல்ல. நீங்கள் சதா உறக்கத்தில் மூழ்கிக் கொண்டிருக்க உங்களை சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. நீங்கள் அசைவுகளற்ற வெறும் சடப்பொருள்களாக மாறிக் கொண்டிருக்கிறீர்களோ என அவர்கள் சிந்திக்கிறார்கள். எமது சமூகத்துக்கு இளைக்கப்படும் துயரங்களையும். கொடுமைகளையும் பார்த்துக்கொண்டு நீங்கள் அமைதியாக இருப்பீர்களேயானால் பாசிசவாதம் உங்கள் தலைகளிலும் புளியரைக்கும் என்பதை சொல்லியேயாக வேண்டும்.

முஸ்லிம்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட முஸ்லிம்களின் தேசிய கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்று உடைபட்டு துண்டுகளாகி சாய்ந்து கிடக்கிறதே. இதை யார் தூக்கி நிறுத்தி நிலைபெறச் செய்வது? எமக்காகப் போராடுவதாக சொல்லிக்கொள்ளும் தலைவர்கள் வெறும் சோடனை வார்த்தைகளைக் கக்கிக் கொண்டு தங்களது பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் சுய நலத்துக்காக உங்களை பாவிக்க அவர்களுக்கு நீங்கள் இடமளிக்கக் கூடாது. முஸ்லிம் தலைவர்கள் செய்து கொண்டிருக்கும் ஆரோக்கியமற்ற. போசாக்கில்லாத செயல்திட்டங்களை சுட்டிக்காட்டி அவர்களைத் திருத்துவதற்கு முன்வாருங்கள். இல்லையானால் அவர்களை அரசியலிலிருந்து தூக்கி எறிந்துவிட்டு ஒரு சிறப்பானதும், நம்பிக்கைதரக் கூடியதுமான தலைமைத்துவங்களை உங்களில் இருந்து கொண்டு வாருங்கள். எமது வருங்கால சமுதாய அமைப்பானது மகிழ்ச்சியாகவும், நிம்தியஙாகவும் வாழ வேண்டுமானால் அவசியம் நீங்கள் தீர்க்கமான பல விடயங்களை மேற்கொள்வதற்கு முன் வந்தேயாக வேண்டும்.

நண்பர்களே! எமது சமூகம் உங்களை வெறும் பட்டதாரிகளாக மட்டும் எதிர்பார்க்கவில்லை. உங்களின் நேர்த்தியான வழிகாட்டலுக்காக காத்துக்கொண்டிருக்கிறது. அடிமைப்பட்ட சமூகமாக இருந்தது போதும். ஆளும் வர்க்கம் எம்மை கறிவேப்பிலையாய் பாவித்துக் கொண்டிருப்பது உங்களுக்குப் புரியாததல்ல. அவர்களின் சில சலுகைகளை மாத்திரம் எதிர்பார்த்துக்கொண்டு அவர்கள் இயக்கும் பொம்மைகளாக இருப்பதிலிருந்து எப்போது வெளிவருவது? நமக்கென்று ஒரு திடமான ஸ்தீரமான அரசியல் சக்தியின் தேவைப்பாடு இருக்கின்றது. அதற்கு உங்களால் என்ன செய்யமுடியும்? சென்ற கால சமுதாய அமைப்புக்களை அப்படியே நகல் செய்து வைத்த மாதிரி வருங்கால சமுதாயத்தை அமைக்க சமூகம் தயாரில்லை. பழைமையிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்களை சற்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

தோன்றி மறைந்து போகக்கூடிய இந்த வாழ்க்கையை வெறுமையாய் கழித்துவிட்டு சென்றுவிடவா நீங்கள் விரும்புகிறீர்கள்? மூச்சிவிட்டுக் கொண்டிருப்பது மட்டும் வாழ்க்கையல்ல. வெறுமையாய் சுவாசித்தக் கொண்டும் உண்டுவிட்டு உறங்கிக் கொண்டும் உங்கள் பொழுதை கழித்து விடலாம் என எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? அது முடியாது. உங்களின் மீது பாரிய சுமை இருக்கிறது. நீங்கள் அனுபவித்துக் கொண்டிருப்பது எமது சமூகத்தின் உதிரத்தால் உற்பத்தியாக்கப்பட்டது. உதயமாவதற்கு முன் நீண்ட இரவு இருப்பது போல எமது சமூகம் விழிப்படைய நீண்ட காலம் தேவைப்பட்டிருக்கிறது. இந்த விழிப்பு நிலை போதாது. இதற்குத் தேவை உங்கள் அசைவுகள்தான். உங்கள் செயற்பாடுகளில் வேகம் வேண்டும். ஆரோக்கியம், ஊட்டம் வேண்டும். அதிகார வர்க்கம் வளர்த்தெடுத்த நாய்கள் மாதிரி எமது தலைவர்கள் வாலை ஆட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதை நிமிர்த்த நீங்கள் என்ன முயற்சி செய்தீர்கள். நாய்வாலை நிமிர்த்த முடியாது என்று சொல்லி விட்டுவிடப் போகிறீர்களா? அல்லது அவற்றை அடித்துத் துரத்திவிட்டு நிமிர்ந்து நிற்கப் போகிறீர்களா? பேசிக் கொண்டிருப்பது மட்டும்போதாது. சோடனை வார்த்தைகளைக் கொண்டு பேசினால் சமூகம் மயங்கி விடும் என இனி மேலும் எம்மால் எண்ண முடியாது. நமக்குத் தேவை ஆக்கமும் ஊக்கமும் நிறைந்த செயற்திட்டங்கள்தான். குறை மாதத்தில் பிறந்த குழந்தையைப்போல் எமது சமூகம் மெலிந்து நலிந்து நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறது. என்ன செய்தால் இவற்றைக் குணப்படுத்தலாம் என எப்போதாவது சிந்தித்தீர்களா? சிந்திப்பதொன்று செய்வதொன்று என்ற நிலைப்பாடு உங்களிடம் இருக்கக்கூடாது. முறித்துப் பிழிந்தெடுக்கப்படுவதற்கு உடம்பிலே நரம்புகள் இருக்கின்ற வரை உழைத்துக் கொண்டே இருப்போம் எமது சமூகத்துக்காய்!

நண்பர்களே! சிறைக்கம்பிகள் உன் முகத்தை மறைத்துக் கொண்டிருக்கின்றன. உன் உள்ளத்திலே எத்தனை கோழைத்தனம். எத்தனை சோம்பல். இத்தனைக்கும் நீ சிந்திக்காமல் சிரித்துக் கொண்டிருக்கிறாய். உன் இலக்குத்தான் என்ன? அதிகார சக்தி எமது சமூகத்தை விலங்கிட்டு மகிழ்கிறது. சிறைப்படுத்தி வெற்றி கொண்டாடுகிறது. உன் பெயரை உச்சரித்துக்கொண்டு எத்தனை பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நீ ஏதோ மயக்கத்தில் கட்டுண்டும், போதையில் மூடுண்டும் கிடக்கிறாய். உனது பெற்றோர் உன்னை அழகிய வார்த்தைகளால் அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள். உரத்த குரலில் உன்னை துதிபாடுகிறார்கள். நண்பனே! எவ்வளவு காலம் நீ இப்படி கட்டுண்டு கிடக்கப்போகிறாய்? எழுந்திரு! சிறைக்கம்பிகளின்று வெளியே வா! உன்னை எமது சமூகம் எதிர்பார்க்கிறது. தொண்டர்கள் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆதலினால் வா! எழுந்து வா! வெளியே வா! ஏழைகளின் நல்வாழ்வுக்காகவும் உழைப்பாளிகளின் உயர்வுக்காகவும் உழைக்க எழுந்து வா!

**ஆர். அலிக்கான்,**
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.



இல்லறத்தில் நுழையும் நம்மவர்கள் எல்லோரும் அதுபற்றிய எல்லா வகையான அறிவுகளுடனும் இருப்பதில்லை. இதனால் சிற்சில இடறல்கள் தலைகாட்டவே செய்யும். அவ்வாறானவற்றைக் களைந்து நல்லறமாக மாற்றுவதற்கும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து இணைபிரியாத் தம்பதிகளாகத் திகழ்வதற்கும் ஆலோசனைகளை பன்னூல் ஆசிரியர் 'கைபேடு கலைஞர்' டாக்டர் அப்துல் பாரி 'புதுமணத் தம்பதிகள் கையேடு' என்ற தலைப்பிலான நூலில் முன்வைத்துள்ளார். அவற்றிலிருந்து சில பகுதிகள் இங்கு இடம்பெறுகின்றன. நமது மக்களும் இவ்வாறான இடறல்களை சந்திக்கும் போது அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கு இத்தொடர் வழிகாட்டும் என்று நம்புகின்றோம்.

## மூத்த மருமகள் மூத்த மகன் 2

அருமையாகப் பெற்று. ஆசையாக வளர்த்த பெற்றோரைப் பிரிந்து வந்த துயரம்! அன்புடன் பழகி. ஒன்றாக ஆடிப்பாடி மகிழ்ந்த உடன் பிறந்தோரைப் பிரிந்த துக்கம்! புதிய இடம். புதிய மனிதர்கள். புரிந்து கொள்ள முடியாத குழப்பம். பிறந்த வீட்டில் செல்லமாக வளர்ந்த பெண். செல்வத்தில் வாழ்ந்த பெண். வசதிகளில் புரண்ட பெண். வந்த இடத்தில் எப்படியோ? வசதி இருந்தாலும் அதை சுதந்திரமாக அனுபவிக்கும் உரிமையை எடுத்துக் கொள்ளத் தயக்கம்.

### அரவணைக்க வேண்டும்!

இப்படி எத்தனையோ மனக் குமுறல்களின் காரணமாகச் சில பெண்கள் குழப்பம் அடைவார்கள். அவர்களை அன்பாக அரவணைக்க வேண்டும்.
மூத்த மருமகளிடம் மாமியார். மாமனார் - குறிப்பாக மாமியார். அதிகம் எதிர்பார்ப்பார்கள். மூத்த மருமகள் நன்றாக நடந்து கொண்டால். வரும் மருமகள்கள் அனைவரும் நல்ல முறையில் நடந்து கொள்வார்களே என்று அதிகம் ஆசைப்படுவார்கள். இந்த எதிர்பார்ப்புகளை புரிந்து கொண்டு. மூத்த மருமகளோ. மூத்த மருமகனோ முடிந்த அளவு அனுசரித்துப் போக முயற்சி செய்ய வேண்டும்.

### கணவனைக் கையில் போட்டுக் கொள்ளுங்கள்!

கணவனைக் காதலியுங்கள். அவனைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். அவனது நல்ல குணங்களைப் பாராட்டுங்கள். துயரத்தில் இருக்கும் போது உற்சாகப் படுத்துங்கள். கோபித்துக் கொண்டால். கொஞ்சி சமாதானப்படுத்துங்கள். தன்னம்பிக்கை உள்ளவனாக இருந்தால். ஊக்கப்படுத்துங்கள். முயற்சி உள்ளவன் என்றால். உறுதுணையாக நில்லுங்கள். அவன் உங்களைப் பாராட்டினால். உங்களுக்குப் பரிசு கொடுத்தால். நன்றி சொல்லுங்கள். "நம்மீது அவனுக்கு எவ்வளவு அக்கறை" என்று அவன் நினைக்கும்படி நடந்து கொள்ளுங்கள். இவையெல்லாம் கணவனை உங்கள் பிடிக்குள் கொண்டு வந்து விடும்.
"கணவன் அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்பார்கள். அது அந்தக் காலம். எப்படிப்பட்ட கணவனையும் பட்டை தீட்டி. கோகினூர் வைரம் போலப் பளபளக்கச் செய்ய நல்ல மனைவியால் முடியும்.
நாய் வாலை நிமிர்த்த முடியுமா? முடியும்! ஒரு பனை மட்டையைக் கட்டிப் பாருங்களேன்!

## மனத்துயரை கை விட்டு மகிழ்ச்சியுடன் இருங்கள்

தற்கால மத்தியதர சமூகத்தவரின் உள்ளகத்தை சிறிது நோட்டமிட்டுப் பார்த்தோமேயானால், எமக்கு விளங்கக்கூடிய ஒரு விடயம் உண்டு. அவர்கள் அன்றாட காரியங்களை சாதாரணமாக செய்து கொண்டு இருப்பினும். ஒரு வித களைப்பு. மகிழ்ச்சியின்மை. வெறுப்பு போன்றவற்றை அவர்களுள் அவதானிக்க முடியும். பத்துப் பேருடன் பேச்சுக் கொடுத்து பார்ப்போமேயானால் அவர்களுள் எட்டு பேர்களாவது மனத்துயருடன் கைசேதப்பட்டவர்களாகவே தோன்றுவார்கள்.

ஒரு குடும்பத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்பட்டு. ஒருவருக்கொருவர் முரண்பட்டு. மனமகிழ்ச்சியற்று வாழும்போது அவர்களின் குழந்தைகள் அறிந்தோ அறியாமலோ பாரிய தாக்கத்திற்கு உள்ளாவர் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. பெற்றோர் மகிழ்ச்சியுடன் வாழ்கின்ற குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் பாடசாலை சென்று நன்கு கல்வி கற்பதை நாமறிவோம்.

ஒரு குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்தான் குழந்தை. அக்குழந்தைக்கு பாரிய தியாகங்களுக்கு மத்தியில் பெற்றோர் கல்வியூட்டுகின்றனர். தமது உழைப்பின் பெரும் பகுதியை அதற்காகவே செலவு செய்கின்றனர். ஆனால் எவ்வளவுதான் செய்தும் அவர்கள் அதிர்ச்சியுறும் நிலையே ஏற்பட்டுள்ளது.

சமீபத்தில் வெளியான உயர்தர பரீட்சை பெறுபேற்றில் ஒரு A தர சித்தியும் இரண்டு B-தர சித்திகளும் பெற்ற பிள்ளைகள் தங்கள் வீடுகளுக்குச் செல்ல அச்சத்துடன் பின்வாங்கினர்.
ஏனென்றால், அவர்களின் பெற்றோர் புரிந்த தியாகங்களுக்கும். பிள்ளைகளுக்காக அவர்கள் செலவு செய்த பணத்திற்கும் ஈடாக பரீட்சையில் சிறந்த பெறுபேறாக மூன்று A - க்கள் பெற வேண்டுமென்பது அந்தப் பெற்றோரின் கட்டளையாகவும், பிள்ளைகளின் பொறுப்பாகவும் இருந்ததுதான்.

இன்றைய இளம் தம்பதியினரில் அநேகர் நூல்களை நன்கு பரிசீலிக்காத. வரலாறு. இலக்கியம் போன்ற பாடங்களிலிருந்து மிகவும் விலகி இருப்பவர்களாகவே உள்ளனர். ஆகவே, அவர்கள் வாழ்க்கையைப்பற்றிய புரிந்துணர்வற்ற, முதிர்ச்சியடையாத ஒரு பிரிவினரே என்று தெளிவாக சுட்டிக்காட்ட முடியும்.



பரீட்சையில் சித்தி எய்துவது என்பது வேறு வாழ்க்கையைப் புரிந்துணர்வது என்பது வேறு இவற்றில், வாழ்க்கையைப் புரிந்துணர்வது என்பதே முக்கியமானது. அனைவராலும் அதனை ஈட்டிக் கொள்ள முடியும். அதற்குத் தேவை மனப்பாங்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதே.

அனைவரும் நிம்மதியாகவும். மகிழ்ச்சியாகவும் வாழவே ஆசைப்படுகின்றனர். அந்த நிம்மதியும். மகிழ்ச்சியும் தூர விலகி இருப்பதற்கு காரணம்தான் என்ன?

"மனிதனது தேவை என்ன? முன்னேற்றமா? மகிழ்ச்சியா? உள்ளத்தில் மகிழ்ச்சியில்லாத பட்சத்தில் முன்னேறி என்ன பயன்? வாழ்க்கையில் முன்னேறியுள்ள பலரிடம் மகிழ்ச்சியில்லை. இரசனை தேய்ந்து மொட்டையாகியுள்ளபடியால் அத்தகையவர்களுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி கிடைக்காது. அவர்களைப் பொறுத்தளவில் வாழ்க்கை என்பது ஒரே தன்மையைக் கொண்ட ஒரே வர்ணத்தைக் கொண்ட அர்த்தமற்ற ஒன்றாகும்."

இன்று அநேகரின் சிந்தனை காலையில் படுக்கையை விட்டும் எழுந்தது முதல் இரவில் படுக்கைக்கு செல்லும் வரை 'முன்னேறுவது எப்படி' என்பதே. அதற்காக முறையான நித்திரையின்றி ஆச்சரியப்படும் வகையில் மிகவும் சிரமப்படுகின்றனர்.

இன்று நம் வாழ்க்கையை கடுமையான முறையில் ஆக்கிரமித்து கட்டுப்படுத்திக் கொண்டிருப்பது இலத்திரனியல் ஊடகங்களே. பாரிய அளவிலான தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகள் நம் வீட்டுக்குள் பிரவேசித்துக் கொண்டிருக்கின்றன. வயது வித்தியாசமின்றி பிள்ளைகளும். பெரியவர்களும், கற்றவர்களும். கல்லாதவர்களும் அவற்றை கையாள்கின்றனர்.
இதன்காரணமாக. எம்மால் தனிப்பட்ட முறையில் சுயாதீனமாக சிந்திக்க முடியாத ஒரு நிலை தோன்றியுள்ளது. சுய கல்வியின் பெறுபேறாகவே சுயசிந்தனை உருவாக இடமுண்டு.

ஆகவே. ஒவ்வொரு வீட்டிலும் தம்பதியினரிடையே ஏதோ ஒரு வகையில் வாழ்க்கையை விரிவாக புரிந்துணரக் கூடிய அறிவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் வாசிக்கும், பரிசீலிக்கும் பழக்கம் இருக்க வேண்டியது மிக முக்கியமாகும்.

நன்றி : தருணயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Letter from the publisher

**impact INTERNATIONAL**

DECEMBER 2001-RAMADAN-SHAWWAL 1422

**"impact" சர்வதேச ரீதியாக இஸ்லாமிய சிந்தனை உலகத்தில் பேசப்படும் இஸ்லாமிய இதழ் - இலண்டனில் இருந்து வெளிவருகிறது. உலகெங்கும் பரவலான ஆதரவைப் பெற்ற, தாக்கத்தை ஏற்படுத்திய இதழாக இது இருந்தும்- பாரிய நிதி நெருக்கடியை இவ்விதழ் எதிர்கொண்டே வருகிறது. 2001ஆம் ஆண்டு இவ்விதழின் வாசகர்களுக்கு "impact" இதழை தொடர்ச்சியாக கொண்டுவர முடியாத நிலையை விளக்கி "impact" ஆசிரியரால் எழுதப்பட்ட கடிதத்தின் சுருக்கிய வடிவத்தை தமிழில் மொழி பெயர்த்து பிரசுரம் செய்கிறோம்!**
**(ஆசிரியர்)**

தொடர்ச்சியான நிதி நெருக்கடிகள் காரணமாக "இம்பெக்ட் இண்டநஷனலில் 2001ம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்கான இதழை வெளியிட முடியாமற் போனது என்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். நாம் இம்மாதம் உங்களுக்குத் தரவிருந்த தகவல் இதுவல்ல. துரதிஷ்டவசமாக எமக்கு வேறு வழி (மாற்றுவழி) இருக்கவில்லை.

இம்பெக்ட் என்பது வர்த்தக ரீதியிலான ஒரு தாபனமன்று. அது பின்வரும் பணிகளை மையமாகக் கொண்டது.

01. இஸ்லாத்தை-முஸ்லிம்களைப் பற்றிய புரிந்துணர்வை வளர்த்தல்.
02. மார்க்கம், அரசியல், சமூகம், நடப்பு விவகாரங்கள் என்பன பற்றி முஸ்லிம்களின் பரவலான அபிப்பிராயத்தை உருவாக்குதல்.
03. இஸ்லாமிய விடயங்கள், முஸ்லிம்களது அக்கறை தொடர்பு பட்ட விடயங்களையிட்டுப் பொதுவான அறிவை ஏற்படுத்துதல்.
04. குறிப்பாக முஸ்லிம் உலகில் கொள்கையுருவாக்கம் பற்றித் தகவல் அளித்து உதவுதல்.
05. பரஸ்பரம் மரியாதை, சமத்துவம் போன்றவற்றின் அடிப்படையில் முஸ்லிம் மக்களுக்கும், முஸ்லிம் அல்லாதோருக்கும் இடையில், விசேடமாக இஸ்லாமிய உலகு, மேற்கத்திய உலகு ஆகியவற்றுக்கு இடையில் இருபக்க உணர் தலை முன்னேற்றிச் செல்லுதல். (முன்னெடுத்துச் செல்லுதல்)

எவ்வாறெனினும், விசேட நோக்கமுடைய பல பிற வெளியீடுகளைப் போன்று, இஸ்லாமிய வெளியீடொன்று என்ற வகையில் 'இம்பெக்ட்' பணம் உழைக்கவில்லை/சம்பாதிக்கவில்லை. வெளியீடுகளுக்கான செலவு அதிகரித்தது போலவே 'நட்டமும்' வெகுவாக அதிகரித்தது. எமது கஷ்டங்களையும் மேலும் மறைத்து வைக்க முடியாத ஒரு கட்டத்தை நாம் அடைந்துள்ளோம்.

முதல் நாள் தொடக்கம் 'இம்பெக்ட்' இதழை வெளியிடும் செலவு; அதனை யதார்த்த ரீதியாகச் சந்தைப்படுத்த முடியுமான விலை என்பனவற்றிற்கிடையில் வீழ்ச்சி/குறைபாடு காணப்பட்டது.

ஏதோ ஒரு வகையில், அல்லாஹ்வின் உதவியுடன் கடந்த 30 ஆண்டுகளாக, சுயநலங்கருதாத நண்பர்களின் பெருந்தன்மையுடன் சமாளித்துக் கொண்டோம். எனினும் கத்தியின் கூர்மைக்கு மேற் போன்றவாறான வாழ்க்கை போன்றிருந்தது.

தகவல் என்பது பெரும் அளவில் செலவுடன் பெறப்பட வேண்டியதொரு பொருள் என்பதனை எம்மிற் பலர் அறியாதிருக்கின்றனர் போல் இருக்கின்றது. இம்பெக்ட் என்பது பத்திரிகை அறிக்கைகளையோ, இன்டர் நெட்டிலிருந்து பெறப்பட்ட தகவல்களையோ பிற வெளியீடுகளில் இருந்து அனுமதியுடன் அல்லது அனுமதியின்றிப் பெறப்பட்ட தகவல்களையோ மீள எழுதும் ஒரு செய்திஸ்தாபனமன்று.

மறுபுறத்தில் மரபு ரீதியான மூலங்களில் தங்கியிருப்பதை விட எமது தகவல்கள், பல மூலங்களில் இருந்து பெறப்பட்டு பகுப்பாய்வுக்கும், ஆராய்ச்சிக்கும் உட்படுத்தப்பட்டு வெளியிடப்படுவனவாகும். அதனால்தான் செய்தித்தலையங்கம் தொடக்கம் விபரங்கள் வரை நிகழ்வுகளின் உள்ளடக்கமும், பொருட்கோடலும் புதியனவாகவும், ஆரம்பமானதாகவும் அதனால் பிற ஊடகங்களில் இருந்து வேறுபட்டதாகவும் உள்ளது.

*எமது நிதி அமைப்புக்கூட வேறுபாடானது*

ஒரு வெளியீட்டின் பதிப்பாசிரியரின் சுதந்திரம் அதன் பொருளாதாரச் சுதந்திரத்தின் ஒரு பகுதியாகும். இதன் அடிப்படையில் நாம் ஒழுங்கான ஒரு முறையினைப் பின்பற்றினோம். வர்த்தக ரீதியான அல்லது தாபன ரீதியிலான அனுசரணை எமக்குக் கிடைக்கவில்லை. *டைம் நியூஸ்வீக், சீஎன்என்* என்பன வர்த்தக ரீதியான அனுசரணையாளர்களால் உதவப்படுகின்றன. பீ.பீ.சி வொயிஸ் ஒப் அமெரிக்கா என்பன அரசாங்கங்களால் பணவுதவி செய்யப்படுகின்றன. முழுமையாகவே சந்தாப்பணத்தைக் கொண்டு மட்டும் தரமான ஒரு சஞ்சிகையினை வெளியிட முடியாது. சஞ்சிகையின் அமைப்பினை அனுசரணைகள் தீர்மானிக்கின்றன.

இவ்வாண்டில், பிரித்தானிய வெளிநாட்டு அலுவலகம் பீ.பீ.சி உலக சேவைக்கு 18 கோடி 18 இலட்சம் பவுணை வழங்கியது. (கடந்த ஆண்டில் 17 கோடிப்பவுண்). பீ.பீ.சி கூட்டுத்தாபனம் உலகின் பல முக்கியமான மொழிகளில் சுதந்திரமான ஒரு தகவல்சேவையினை வழங்க வேண்டும் என்பதற்காக இவ்வுதவிப் பணம் வழங்கப்பட்டது. அது தர்மப் பணமன்று, பதிலாக வெளிநாட்டுக் கொள்கையாகும்.

பீ.பீ.சி உலக சேவைக்குப் பணம் கொடுக்கப்பட்ட பிரதான காரணம் பிரித்தானியாவின் கொள்கையினைப் பற்றி பிரசங்கம் செய்யவும், ஆங்கிலப் பாஷையினை முன்னேற்றவும் என்பது ஒரு புறமிருக்க, பீ.பீ.சியை உலகின் பிரதான தகவல் மையமாக ஆக்குவதற்காகும்.

இது இவ்வாறிருக்க, 18கோடி 18 இலட்சம் பவுண் என்பது முழு உலகிலும் மக்களின் அபிப்பிராயத்தில் செல்வாக்குச் செலுத்தவும், கொள்கைகளை உருவாக்கவும் செலவிடப்படுவதெனின் அது சிறு தொகையாகும்.

இப்போது அமெரிக்கா கூட, முஸ்லிம் நாடுகளை மட்டும் கருத்திற் கொண்டு, 24 மணித்தியாலங்களும் வாரமொன்றில் ஏழு நாட்களும் இயங்கக் கூடிய **SATELLITE** திட்டமொன்றை அமைப்பதற்காக குறைந்த பட்சம் 50 கோடி டொலர் பணத்தை முதலிடப்போகிறது.

இது "வொயிஸ் ஒப் அமெரிக்கா" எனும் அமெரிக்கக் குரல் அண்மையில் நிறுவப்பட்ட சுதந்திர ஆப்கானிஸ்தான் குரல் எனும் இரண்டிற்கும் மேலதிகமானதாகும்.

50 கோடி டொலர் செலவில் முஸ்லிம்களுக்கு மட்டும் தகவல் வழங்குவதற்கு அவர்கள் ஏன் அக்கறை கொள்ள வேண்டும்?

"வார்த்தைகளின் யுத்தம், துப்பாக்கி ரவைகளின் யுத்தத்தைப் போன்ற முக்கியமானதாகும்"-இவ்வாறு விளங்கப்படுத்தினார் அமெரிக்க ஒலிபரப்புச் சபை ஆய்வாளர்களின் மத்திய கிழக்கு உப குழுவின் தலைவர் மார்க் நதன்லைன் என்பவர்.

முப்பது ஆண்டுகளுக்கு முன் இம்பெக்ட் வெளியிடப்பட்டபோது அதன் கவனம் நடப்பு விவகாரங்கள், முஸ்லிம்கள் அறிந்திராத முஸ்லிம் உலகிற்கான அக்கறையுள்ள விடயங்கள் மீது மட்டுமே இருந்தது. அது அப்போது பெரும் பணியாக இருந்தது. ஆனால், இன்று நாம் முன்னோக்கும் ஊடகச் சவால் உண்மையில் பாரியதும், அச்சுறுத்தக்கூடியதுமாகும்.




இப்போதைய விடயங்கள் திட்ட அமைப்பானவை, அரசியல், சமய ரீதியானவை ஏகாதிபத்தியவாதிகளின் அணைவுக்குட்பட்டவை.
ஹன்டிங்டனால் கிளர்ந்தெழுப்பப்பட்ட நாகரிகங்களின் மோதல்கள் ஏற்கனவே ஏவுகணைகளதும், தந்திரமான குண்டுகளினதும் சிறகுகளுடன் பறந்து வந்துள்ளன.

சர்வதேச சட்டபூர்வம், இறைமையின் சமத்துவம் பற்றிய அடிப்படைக் கொள்கைகள் மறைந்துள்ளன.

முஸ்லிம்களுக்குத் தமது தர்மப் பணங்களைத் தற்கொலைக் குண்டு தாரியின் அல்லற்படும் குடும்பத்திற்கோ, ஆக்கிரமிப்பு அல்லது அடக்கு முறைக்கு எதிரான ஜிஹாதுடன் தொடர்பு பட்டதாகக் கூறப்படும் எவருக்குமோ செலவழிப்பதை விட்டு, தமது ஸக்காத் பணத்தைக் கூடச் செலவழிப்பதற்கான சுதந்திரம் இல்லை போல் இருக்கிறது.

முஸ்லிம்களிடம் பணிவாக விடுக்கப்படும் வேண்டுகோள் அவர்கள் இஸ்லாத்தைச் சீர்திருத்த வேண்டுமென்பதுடன், நாகரிக உலகத்துடன் அவர்கள் ஏன் சமமாக வாழ இடமளிக்கப்பட வேண்டும் என்பதற்கான காரணத்தைத் தெரிவிக்க வேண்டும் என்பதாகும்: இல்லையேல்.

இவ்வடிப்படையில் (எதிர்காலத்தில்) எதிர்வரும் நாட்களில் சுதந்திர ஊடகத்தின் பணி மேலும் அளப்பரியது: மகத்தானது.

இறைவன் அருளால், இன்ஷா அல்லாஹ் இம்பெக்ட் சஞ்சிகை, தங்களது ஆதரவுடன், எதிர்வரக்கூடிய கொந்தளிப்பான நாட்களில் தனது பணியைச் செவ்வனே மேற்கொள்ளும். இதனைச் செய்வதற்காக, 'இம்பெக்ட்' வாசகர்களின் அனுசரணை பெற்ற சஞ்சிகையாகுதல் வேண்டும். முழு உலகிலும் உள்ள வாசிப்போரும், நலன் விரும்பிகளும், இவ்வேண்டுகளில் தாம் விரும்பிய சுதந்திரக் குரலுக்கு உதவ முடியும். உங்களது பங்களிப்பு இந்த வேறுபாட்டை நீக்கும். இப்போதுள்ள நிலையில் இம்பெக்ட் சஞ்சிகைக்கு ஆண்டு தோறும் 150.000/= பவுன் அல்லது 225000 அமெரிக்க டொலர் பணம் துண்டு விழுகிறது. அத்துடன் இப்போது கொடுபட வேண்டிய கடன்களுக்கும் சில தேவைகளுக்குமாக 50.000/= பவுண் அல்லது 75.000/= அமெரிக்க டொலர் பணம் தேவைப்படுகிறது.

பிறருக்காக நன்கொடை என்ற அடிப்படையில் சந்தாக்கட்டியும், விளம்பர இடத்தில் பணங்கட்டியும் இப்பணத்தைச் சேகரிக்க நீங்கள் உதவ முடியும்.

இந்த நன்கொடைச் சந்தாக்களைக் கொண்டு இம்பெக்ட் சஞ்சிகையின் தகவலை, அதனை வாங்கிப்படிக்க வசதியற்றோருக்குப் பரவச் செய்யலாம். அத்துடன் இஸ்லாமிய விவகாரங்களில் அக்கறையுள்ள முதலாம் உலகின் தாபனங்கள் கொள்கையுருவாக்குபவர்கள் இடையில் இத்தகவலைப் பரவச் செய்யலாம்.

இலவசப் பிரதிகள் அனுப்பப்படவேண்டியவர்களின் பெயர்ப்பட்டியலை நீங்கள் அனுப்ப முடியும். மீதியானவற்றை எமது விருப்பப்படி அனுப்புவோம். நாம் இதனை ஏற்கனவே எம்மால் முடிந்த அளவு செய்து கொண்டிருக்கிறோம்.

எனவே தயவு செய்து உங்களது சந்தாக்களையும், உறுதிமொழிகளையும் இன்றே அனுப்பினால் அடுத்த பதிப்பில் இருந்து அனுப்ப முடியும்.

இன்ஷா அல்லாஹ் 2002ம் ஆண்டு ஜனவரி இறுதிக்கு முன், ஆகக்கூடிய விரைவில் இம்பெக்ட் வெளியீட்டை மீண்டும் தொடங்கிப் பின்னர் நாளடைவில் பொதுவான (வேகத்தில்) திட்டப்படி படிப்படியாக கொண்டு செல்வதே எமது திட்டமாகும்.

இம்பெக்ட் என்பது பாரிய, புனிதமான ஒரு கைங்கரியமாகும். எம்மைப் போலவே நீங்களும் அதன் பங்குதாரர்கள்தாம்.

இஸ்லாமிய 'உம்மா' வை முன்னோக்கக்கூடிய நீண்டகாலச் சவாலை, அதன் உண்மையான தோற்றப்படி உங்கள் முன்வைப்பதன் மூலம் எமது கடமையினை நிறைவேற்றியுள்ளதாக நான் நம்புகிறேன். ஆகவே இந்த முக்கியமான முயற்சியினை மீண்டும் விருத்தி செய்து, நிலைபெறச் செய்வதற்காக உங்களது முழு மனதுடனுமானதும், தாராளமனதுமான உதவி, ஒத்தாசையினை எதிர்பார்க்கின்றோம்.

நாம் இப்போது முன்னோக்க விளையும் உடனடியான பண எல்லை ஏற்கனவே குறிப்பிட்டபடி பவுண் 200,000/-. 300.000/- ஆகும். 2003 தொடக்கம் ஆண்டுதோறும் 150.000 பவுன் 225000 டொலர் தேடப்பட வேண்டும்.

இது எம் எல்லோருக்கும் ஓர் இடர் மிக்க கால கட்டமாகும். ஆனால் இன்ஷா அல்லாஹ் உங்களது ஆதரவுடனும், தெளிவுடனும் இம்பெக்ட் சஞ்சிகை தப்பிப் பிழைப்பதுடன் செழித்து வளருமென்றும் எமக்கு நம்பிக்கையுண்டு.

தயவு செய்து பணம் அனுப்புவதற்காக இக்கடிதத்தின் இறுதியில் உள்ள பதிப்பத்திரத்தைப் பயன்படுத்தலாம்.
நன்றி.

வஸ்ஸலாம், நல்லாசியுடன்
உங்களது உண்மையுள்ள, *எம்.எச். பாரூக்கி*
வெளியீட்டாளரும், முகாமை ஆசிரியரும்.

**முஸ்லிம் குரலுக்கு**
நாட்டின் நாலா திசையிலிருந்தும்
செய்தியாளர்கள் விற்பனை முகவர்கள்
வேண்டப்படுகின்றனர்.
30 ஒக்டோபர் 2003ந் திகதி இறுதித்
திகதியாகும்
பூரண விபரத்துடன் விண்ணப்பிக்கவும்.

# சுழியோடும் சர்வதேசமும் திண்டாடும் முஸ்லிம் தேசமும்

பண்டைய காலம் தொட்டு இலங்கை புவியியல் ரீதியாக சர்வதேச அரங்கில் பிரசித்தம் பெற்று விளங்குகின்றது. இதற்கு பூகோள ரீதியான இலங்கையின் அமைப்பு முக்கிய இடம் வகிக்கிறது. இலங்கை மத்திய கோட்டுக்கண்மையில் அமைந்திருப்பதால் சீரான தட்ப வெப்ப நிலை, மற்றும் இந்து சமுத்திரத்தின் நித்திலமாக அமைந்திருப்பதால் சர்வதேச கடல் போக்குவரத்தில் இலங்கையின் அமைவிட முக்கிய பங்கு போன்றன மாத்திரமன்றி இன்னும் பல காரணிகள் இதனை ஆதாரப்படுத்தி நிற்கின்றன.

இதன் பல்வேறுபட்ட அமைவிடச் சிறப்பால் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் போன்றோர் இலங்கையை தங்கள் ஆதிக்கத்திற்குட்படுத்தி அட்டை போல் உறுஞ்சியும் விட்டிருந்தனர்.

ஆக இலங்கை பல் நூற்றாண்டுகளுக்கு முன்னமே சர்வதேச அரங்கின் கண்களுக்குள் தைத்திருந்தன. அப்போது உலகியலின் பார்வை நீண்டும் விசாலித்தும் இருந்தது. ஆனால் இன்று கையடக்கமாகிப் போன உலகில், இலங்கையின் அமைவு சர்வதேசத்தில் அதன் தேவையை எத்தனை வீதத்தால் அதிகரிக்கும் என்பது சாதாரணமானவர்களுக்கும் எளிதில் விளங்கக்கூடியதே.

மாத்திரமன்றி இன்று ஏற்றுக் கொள்ள முடியாமல் போனாலும் எதார்த்தமாகிப் போயுள்ள அடக்கி ஆள்தல் என்ற அரசியல் நவநாகரிகத்தின் உச்சக்கட்ட லீலையில் அமெரிக்க ஐரோப்பா போன்ற நாடுகளின் ஏக பிரதிநிதிகள் தெற்காசியாவில் தனது ஆளுமையை நிலை நிறுத்த அதனை அச்சுறுத்தலுக்குள்ளாக்குவதற்கான தளத் தேடுதலில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வேளையில், தமது முஸ்லிம் தேசத்தை உள்வாங்கியதும், புலிகளின் கோட்பாட்டு ரீதியான எல்லைக்குட்பட்டதும், இந்தியாவின் மிக அண்மித்த கடல் பகுதியுமான திருகோணமலை இயற்கைத் துறைமுகம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந்த இடத்தில் தான் முஸ்லிம் தேசம் சர்வதேசப் பொறியில் தன்னை முதன் முதலில் உள்வாங்க இருக்கிறது.

இங்கு பல போராட்டங்கள், சதிப்புரட்சிகள் உச்சக்கட்ட தொழில்நுட்பம், மைக் ரோகண் கொண்ட உளவுப்படை மற்றும் வெளிப்படையாகவே முஸ்லிம்களை வேரறுக்கும், அமெரிக்கா, ஐரோப்பா ஒரு புறம், இனவாத வேள்வித்தீயின் ஆதிக்கத்தில் ஆட்சி புரியும் இந்தியா, அமெரிக்காவை முந்திவிடும் அளவிற்கே முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், அதுவும் புரட்சி, போர்க்களம் துரிதமாக வளரும் தொழில் நுட்பம் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு அதன் எல்லை கடந்த பாதுகாப்புக்காக நேரடியாக திருகோண மலைத் துறைமுகத்தில் அதன் ஆதிக்கம் ஆளுமை ஆகியனவற்றை பிரயோகிக்க ஆவன செய்ய.

இருபது வருட கெரில்லாப் போர்முறையில் சர்வதேச ரீதியில் வியப்புக்குறிகளோடு தன்னை அடையாளப்படுத்திய புலிகள் அதன் பொருளாதாரத்தை மையப்படுத்திய தளமாக திருகோணமலையை வைத்து செயற்பட, இவர்களும் முன்னயவர்களை விட சற்றும் குறையாமல் முஸ்லிம்களின் உயிர் உடமை போன்றனவற்றை ஈவிரக்கமின்றி சூறையாடி இருக்க,

இன்னும் இலங்கையின் ஆளும் எந்தப் பேரினவாத தலைமையும் காலகாலமாக முஸ்லிம்களுக்கு குழிதோண்டுவதில் பரீட்சயமாய் இருக்க -

இவ்வாறு மேல் அனைத்துத் தரப்பும் அசுர வேகத்தில் முஸ்லிம் தேச கரையோரங்களில் நேரடி மற்றும் மறைமுகமான போராட்டத்தில் குதித்திருக்க

சற்றும் சர்வதேச பார்வையில்லாத ஒரு பிரதேச சபைக்கான ராஜதந்திரம் கூடக் கைவரப்பெறாத முஸ்லிம் காங்கிரசும் முஸ்லிம் தலைமையும், சுழியோடும் சர்வதேசத்தோடும் சுற்றிவரப் பாசிசத்தோடும் தலையை நுழைத்து நகைப்பிற்கிடமாவதற்கு முன், முஸ்லிம் புத்திஜீவிகளும் சமூகவியலாளர்களும் முஸ்லிம் தேசத்தின் சர்வதேசப் பார்வையை கூர்மையாக்குவது உடனடித் தேவை ஒன்றாகும்.

**- பாஷா**

அன்றாட வாழ்வியல் இயக்கமெல்லாம்
அடிக்கடி அமுலாகும் ஹர்த்தாலால்
அடங்கியும்
ஒடுங்கியும் போயிற்று!

**ஹர்த்தாலும் காலாவதியாகும் வாழ்வும்**

பயணிக்கும்
பாதைகள் எல்லாம்
பயணிகளும் வாகனங்களுமின்றி
வெறிச்சோடிக் கிடக்கலாயிற்று!

சந்தைகள் அனைத்திலும்
சனநடமாற்ற மற்றுப் போயிற்று!
முஸ்லிம் தேசத்தின் பொருளாதாரம்
முற்றும் முடங்கிப் போகும் முனைவுகள்
முற்றுப் பெறலாயிற்று!

கல்விக் கலாசாலைகளின்
கல்வி நதி
கவலை வாய்க்கால்களுக்குள்
கட்டுண்டு கிடக்கிறது!

காலாவதியான கருத்துக்களுக்குள்
தேசம்
சோரம் போய்க் கொண்டிருக்க
சிற்றின்ப சகதிக்குள்
வெற்றி வீரர்கள் சிக்கிக் கொண்டிருப்பர்!

முயற்சிகள் முடக்கப்பட்டும்
முயல்வுகள் தடுக்கப்பட்டும்
நகர்வுகள் மறிக்கப்பட்டும்
இன்னும்
நாமிருக்கப் போவது எத்தனை நாளோ?

அடக்கிய கரமறுத்து
பூட்டிய விலங்குடைத்து
விடுதலை வேட்கைகளுடன்
வெளியேறப்போகும் நாட்கள்
வெகுதூரத்திலில்லை.

ஓட்டமாவடி யூ.எல்.எம்.நஜீப்

## விழித்தெழு தோழா விடுதலைக்காய்!

விடியலை நோக்கி விரைந்திடு தோழா
விடைபெறும் போதும்... நீ
வீர வேங்கையாய் கிளர்ந்தெழு தோழா...
கோளையென்று உன்னை அந்நியன்
நினைத்திட்டான் தோழா
கொடும்பாவிகள் நம் மீது
அடிமைசாசனம் எழுதிட்டான் தோழா

எம் மானம் மரியாதை
மாற்றான் கையில்
எம் அரசியல்வாதிகள்
தாரை வார்த்துவிட்டார்கள் தோழா
இனியும் உன் வீரத்தின்
சுவாலைகள் எழ வில்லையா தோழா
போராட்டம் என்பது
நமக்கொன்றும் புதுமையல்ல தோழா
போராட்டம்தான் நம் முன்னோரை
வாழவைத்தது தோழா

நம் எதிர்கால சந்ததிகள்
வாழ வேண்டும் தோழா
எதிரியோடு போராடுவது
நியதியென்றால் தோழா
வீர மரணம் எய்வதுதான்
எம் கடமை என்றால்
உனக்காக சுவர்க்கம்
ஆசி கூறி வரவேற்கும் தோழா
விடுதலைக்காக நீயும் விழித்தெழு தோழா.

**மு.க. பைஸர்**
காங்கேயனோடை.

## கவிதை

### தேசம்

இனப் பேய்பிடித்து
ஈனச்செயல் புரிந்து
வெண் புறாவில்
செங்குருதியையும் கொப்பளித்து
இயல்பு வாழ்வையும்
சாக்காடாக்கியது போதும்

இனவாதம்
மொழிவாதம்
நிலத்தகராறு
இந்து முட் குப்பைகளை
எல்லோரும் கூடி
கூட்டி குழிதோண்டிப் புதையுங்கள்

பேதங்களை
விதைத்து விதைத்து
துரோதங்களையும்
கொலைக் களம்களையும்
அறுவடை செய்து குடிட்டது போதும்

இனியாவது
அன்பையும்
அமைதியையும் விதையுங்கள்
வயல்களில் புனல்களாய்
மனித நேயங்களை ஓடவிடுங்கள்

இனவாதக் களைகளையும்
மொழிவாதப் பூச்சிகளையும்
இருந்த இடம்தெரியாமல்
அழித்தொழியுங்கள்
அவைகளுக்கு யாரும்
அஞ்சலி செலுத்த வேண்டாம்

இது வசந்தகாலம்
அறுவடை செய்யுங்கள்

**-றகுமான் ஏ.ஜமீல்**
மருதமுனை

## கவிதைகள்

### மனம் திருந்த வழியிலையோ!

வீடெல்லாம் தொலைக்காட்சி
விடியும்வரை திரைக்காட்சி
நாடெல்லாம் இக்கூத்து

நலவென்ன கண்டனரோ!
பெற்றோரும் பிள்ளையுமாய்
பக்கத்தில் இருந்திடுவர்
தோற்ற முறும் படமெல்லாம்
துயிலாது இரசித்திடுவர்!

விடிகாலை யான போது
வேலைக்கும் முழுக்குவிழும்
படிக்கின்ற பாப்பாவும்
பாடசாலை விடுமுறைதான்!

மனைவிக்கும் சோம்பல் வர
மல்லாந்த படுக்கைதான்
உணவுண்ண வழியில்லை
எல்லோரும் பட்டினிதான்!

ஒரு நாளா இரு நாளா
ஒவ்வொரு நாள் இதுவேதான்
திருந்துமா இச்சமூகம்
சீர் தூக்கிப் பாரீரோ!

பாடக் கல்வி பதியும் நெஞ்சில்
படப்பாட்டில் இசைவெள்ளம்
கூடவரும் நண்பருக்கும்
கூறி மனம் மாற்றிடுவர்!

சினிமாவின் சீர்கேட்டை
சிந்திக்க மனமிலையோ
மனிதனுக்கு இது அழகோ
மனம் திருந்த வழியிலையோ!

மூதூர் கலைமேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு அரசியலில் இடைக்கால நிர்வாகம் எதனை நோக்கி?

கிழக்கில் தமிழ்ப்பேரினவாத அரசியல் தன் முகத்தை கொடூரமான முறையில் வெளிப்படுத்தி, முஸ்லிம்கள் மீது வன்முறைக் கட்டவிழ்ப்புகளை மேற்கொள்கிறது. இந்நடவடிக்கையானது இன்று நிலவும் இலங்கையின் சமாதானம் குறித்து முஸ்லிம்களிடையே ஒரு பெருத்த ஏமாற்றத்தையும், அவலத்தையுமே ஏற்படுத்தி இருக்கிறது. இதற்குரிய உடனடிக் காரணமாக அமைவது, இலங்கையின் இனப்பிரச்சினை குறித்து (அரச-புலி) இருதரப்பாரிடமும் இருந்து வருகின்ற தவறான அணுகுமுறையே ஆகும். இந்தப் பிறழ்வான அணுகுமுறைகளே இன்று கிழக்கில் தீவிரம் பெற்றிருக்கும் தமிழ் முஸ்லிம் மோதல்களுக்கு முக்கிய பின்புலமாக அமைந்திருக்கிறது.

இதுவரை காலமும் இலங்கை இனப்பிரச்சினையை சிங்கள - தமிழ் எனும் இருதரப்புப் பிரச்சினையாகவே கருதப்பட்டும், நோக்கப்பட்டும் வந்திருக்கிறது - வருகிறது. மூன்று தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டுக்குள் நிலவும் இனமுரண்பாட்டில், ஒரு இனத்தை முற்றாக நிராகரித்து, இரு இனங்களின் பிரச்சினையாக மட்டுமே அதனைக் கட்டமைக்க முயல்வதும், அதனையே கருத்தில் கொண்டிருப்பதும், இன முரண்பாடுகளுக்குரிய ஒரு உண்மையான தீர்வை எட்டுவதில் தடையாக அமையும்.

இது மென்மேலும் இனமுரண்பாடு வலுத்துக் கொண்டு போவதற்கு வழிவகுக்கும். இவ்வாறு இரு தரப்புப் பிரச்சினையாக மட்டும் அதனை அணுகுவதால் ஏற்படும் விளைவு என்ன? என்பதற்கு அண்மைக்காலமாக கிழக்கில் தமிழ் ஆதிக்க சக்திகளால் அரங்கேற்றப்பட்டுவரும் தீய நிகழ்வுகள் நல்ல உதாரணங்களாகும். இன்றுள்ள சமாதானம்தான் கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மோதலில் பாரியதொரு பாய்ச்சலை ஏற்படுத்தி இருக்கிறது என்பது தவிர்க்க முடியாத சோகமான வரலாறாகவுள்ளது.

காலனித்துவ நாடான பிரித்தானியா 1948இல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கியபோது, அந்நிகழ்வினை தமிழ் அரசியலாளர்கள் "இலங்கைக்கு பிரித்தானியா வழங்கிய சுதந்திரமானது, தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க சிங்கள இனவாத அரசுக்கு பிரித்தானியா வழங்கிய உத்தரவாதப்பத்திரம் அதாவது "லைசன்ஸ்" என்று விபரித்தார்கள்.

இதேபோன்றுதான் வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டு தமிழ் மக்களுக்கு மாத்திரம் உரிய தீர்வு வழங்கப்படுமாயின், அது "முஸ்லிம்களை அடக்கி ஒடுக்குவதற்கு புலிகளுக்கு அரசாங்கம் வழங்கிய லைசன்ஸ்" என்றுதான் இன்றைய இனப்பிரச்சினைத் தீர்வானது நாளை விபரிக்கும். இந்த விபரிப்பு தவிர்க்க முடியாதது என்பதைத்தான் கிழக்கில் அண்மையில் முஸ்லிம்களுக்கெதிராக புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள் எமக்கு முன்னறிவிப்புச் செய்கின்றன. சமாதான காலத்திலேயே பாஸிசத்தன்மையை புலிகள் கடைப்பிடித்திருப்பது, எதிர்காலத்தில் இவர்களின் நிர்வாகத்தின்கீழ் முஸ்லிம்களால் எவ்வகையிலும் வாழ முடியாது என்பதையே அவை மீளவும் வலியுறுத்துகின்றன.



வடக்கு கிழக்கு முஸ்லிம்களும் இடைக்கால நிர்வாகமும்

இந்நிலையில் இடைக்கால நிர்வாகம் பற்றி ஆழ்ந்த அவதானம் செலுத்தப்பட வேண்டிய நிலைமையும் உருவாகி விட்டது. வடக்கு கிழக்கில் அரசியல், பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு, கலாசாரம், ஆள்புலம் என்பவற்றோடு தங்களின் வாழ்வியலை தாங்களே தீர்மானித்துக் கொள்ளும் நிர்வாக அதிகாரங்களையெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிவரை தற்காலிகமாக அவர்களே முன்னெடுத்துச் செல்லும் அரசியல் அதிகாரமே புலிகள் கோரி நிற்கும் இடைக்கால நிர்வாகமாகும். (புலிகள், இலங்கையில் தனித்தமிழீழம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான முன் முயற்சி என்றும் அதனைக் கருதலாம்.) தங்களின் பிரதான கோரிக்கையாக தற்பொழுது "இடைக்கால நிர்வாகசபை" முன்வைத்து இயங்கி வரும் புலிகளின் இக்கோரிக்கையை அரசும் வேறு வழியின்றி ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்நிலையில், இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படும் செயற்பாடானது அது தொடர்பான பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது.

வடக்கு கிழக்கு தமிழ் - முஸ்லிம் மக்களின் தாயகம். இங்கு தமிழர்களைப் போலவே முஸ்லிம்களுக்கும் பூர்வீகம், தனித்துவம், அடிப்படை உரிமைகள் உண்டு. இலங்கை வரலாற்றில் இதுவரை காலமும் இங்கு தமிழ்-முஸ்லிம் மக்களே செறிந்து வாழ்கின்றனர். 1980 களுக்குப் பின் இலங்கையின் இன முரண்பாடு கூர்மையடைந்த பிறகு வடக்கு கிழக்கிலும் தமிழ்-முஸ்லிம் உறவிலும் பாரிய விரிசல் ஏற்பட்டது. இந்த விரிசலுக்குக் காரணமாக அமைந்தது இலங்கை இனவாத அரசின் திட்டமிட்ட செயற்பாடுகளும், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையுமாகும். இதனால் தமிழ்-முஸ்லிம் மக்களின் நல்லுறவானது பெரிதும் பாதிக்கப்பட்டதோடு, இவ்விரு இனங்களுக்கும் மத்தியில் நிலவிய பரஸ்பர புரிந்துணர்வுகளும் அற்றுப் போய்விட்டது.

இந்த நிலைமைகளினூடு இவ்விரு இனங்களும் ஒன்றையொன்று எதிர்க்கும் அவல நிலைக்கு ஆளாகிவிட்டிருந்தது.
அக்காலப்பகுதியிலிருந்து, இன்று வரை புலிகள் முஸ்லிம்களை தமது பிரதான எதிரியாகக் கருதியே செயற்பட்டு வருகின்றனர். வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மீது இதுவரைக்கும் விடுதலைப் புலிகள் கடைப்பிடித்துவரும் அதிகாரம் தழுவிய மேலாதிக்க அரசியல் இன்று பல்வேறுபட்ட பரிமாணங்களைப்பெற்று விசுவரூபமெடுத்துள்ளது.

தமிழ் ஆதிக்க சக்திகளினால் முஸ்லிம்கள் சந்தித்துவரும் இழப்புக்கள் கணிசமானவை. உயிர், உரிமை, உடைமை இழப்புகள், இவற்றில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. விடுதலைப் புலிகளின் இத்தொடர் நடவடிக்கைகள் கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவை இரு துருவங்களாகப் பிரித்திருக்கின்றன.

இந்நிலையில், இடைக்கால நிர்வாகம்

பாலை நகர் முகம்மத் ஜிப்ரி

புலிகளுக்குக் கையளிக்கப்படுமாயின் அது முஸ்லிம்களின் வாழ்வுரிமைகளை பேணுவதற்கானதன்றி, அவர்களின் அடிமைச் சாசனமாகவே இருக்கும். புலிகள் முன்வைக்கப்போகும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பானது முஸ்லிம்களது வாழ்வுரிமையில் எந்தளவுக்குக் கவனஞ் செலுத்தும் என்ற நியாயமான கேள்விகளும் எழத்தான் செய்யும்.

எனவே, இடைக்கால நிர்வாக சபையை புலிகளுக்குக் கையளிப்பதற்கு முன்னர், இலங்கை சமாதான சமூகம் பல்வேறு கருமங்களை ஆற்ற வேண்டி இருக்கிறது. அடிப்படையில், வடக்கு கிழக்கு இனப்பிரச்சினை என்பது தமிழ்-முஸ்லிம் மக்களோடு தொடர்புபட்டது. இவ்விரு சாராருக்குமிடையில் காணப்படும் முரண்பாடுகளையும், குரோதங்களையும் முதலில் அகற்றி ஒரு சமாதான சூழலை இங்கு தோற்றுவிக்க வேண்டும். இவ்விருசாராருக்குமிடையில் இங்கு நல்லிணக்கம் ஏற்படாதவரை வடக்கு கிழக்கில் 'அமைதி' எனும் சொல் அர்த்தமிழந்துவிடும்.

எனவே, இலங்கை அரசியலாளர்கள் தீவிரமாகச் சிந்தித்து, முதலில் வடக்கு-கிழக்கில் சமாதான சூழலொன்றை ஏற்படுத்தி, ஒவ்வொரு சமூகமும் தனித்துவமாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தி அவற்றையே உள்ளடக்கியதுமான 'இடைக்கால சபை'யே இங்கு பொருத்தமானதாக அமையும். இங்கு நீண்டகாலமாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்கு ஒரு மெய்த்தீர்வாக அமையும் அதேவேளை, அதுவே நிலைத்து நிற்கக்கூடிய சமாதான ஏற்பாடுமாகும்.

---

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை 13

குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

## அத்தியாயம் 6

பெரிய மேம்பாலம் கீழாக ஓடியது. வர வர கட்டிடங்கள் குறைந்தன. மறுபடி ஒரு பெரிய சுற்றுவட்டம்! முத்து முகம்மது ஒன்றும் விளங்காமல் பயத்துடன் சும்மா இருந்தான். இதுவா.. வழி? தலைவரின் வீடு...? இதுவா.. அதுவா... திடீர் திருப்பங்களில் ஓடி ஒரு ரயில் பாதையை ஊடறுத்து, ஒரு சிலையைக் கடந்து ஓடி நின்றது. வீதியில் சனநடமாட்டம் குறைவாக இருந்தது. என்ன இடம் இது? ஒரே ஒரு பெட்டிக் கடை தெரிந்தது.

'ஹரி! பன்ஸல ஹந்திய! நொம்பர் எக்கசீய ஹத்தர! மேக்காய்! வஹிண்ட.. டக்கெலா.. சல்லி கண்ட..'

'.....க்... இது யூக்கேட லொச்....'

'அடோ வஹிண்ட பாங்!'

'.........'

சாரதி கோபமாக இறங்கிவந்து முத்துமுகம்மதின் தோள்களைப் பிடித்து வெளியே இழுத்தான். யாஸீனும் இழுபட்டு இறங்கினான்.

'ஏய்! மகே சல்லி? கண்ட சல்லி.. தெஸீயய்'

'.........'

'சல்லி' என்பது மட்டுமே விளங்கியது. எவ்வளவு என்றுகேட்கவும் தெரியவில்லை. முத்துமுகம்மது பயத்துடன் சேர்ட் பக்கட்டுக்குள் கைவிட்டு மைமுனாவின் பேர்ஸை எடுத்தான். உள்ளே ஐம்பது ரூபா இருந்தது. அதனைக் கொடுத்தான். சாரதி உக்கிரமாகப் பார்த்தான்.

'தெஸீய... தெஸீய..' என்றான்

'இம்பட்டுந்தான் இரிக்கி' - முத்துமுகம்மது பைகளைக் காட்டினான்.

சாரதி திடீரென முத்துமுகம்மதின் சேர்ட்டைப்பிடித்து குலுக்கி பைகளைச் சோதித்து ஏமாற்றமடைந்தான். கோபத்தில் பளீரென அறைந்தான். யாஸீன் வீறிட்டான். உடனே சாரதி அவனுக்கும் பளாரென அறைந்தான். முத்துமுகம்மதின் கையைப்பிடித்து முறுக்கினபோது... கைக்கடிகாரம் இடறவே, அதைப் பலவந்தமாய் பறித்தான்... மணி 10:34 என்றது. கையில் கீறி இரத்தம்.

'என்டம்மோவ்! அடிக்காண்டோ.. ஓடியாங்கடோ!'

'ஹூத்திகே புத்தோவ்! சல்லி நெத்துவ வாகனவலின் நகிண்டத... வள்ளோ! சாரதி சட்டென ஓட்டோவில் ஏறிச் சீறிப் பறந்துவிட்டான்.

முத்துமுகம்மது விதிர்விதிர்த்துப் போனான். சப்புச்சுல்தானின் நயவஞ்சகம் காலம் கடந்து உறுத்தியது. அடிபட்ட கன்னம் வலித்தது... இந்நேரம்... மைமுனா..? மாமி...? இனம்புரியா இடம்.. என்ன செய்ய... ஏது செய்ய...? கையில் ஒரு சதமும் இல்லை. அந்நிய இடம்... அந்நிய மொழி.. மனிதர்கள்.....

'முத்தும....ச்...சான்..... என்டம்மோவ்!'

'கத்தாதடா சில்வித் தலப் பண்டய்...'

யாஸீனை ஓங்கி குட்டினான். நின்ற இடத்தைச் சுற்றிலும் பார்த்தான். சற்றுத் தள்ளி ஒரு பெட்டிக்கடை தெரிந்தது. அதில் இரண்டு சிங்களப் பெண்கள். அவர்களிடம் போனான். இருவரும் புன்னகைத்தனர்.

'வழி தப்பி வந்துட்டம் அக்கா! யூக்கேட லொச்சி.. எந்தப்பக்கம்?

'உக்கட..? பக்கட..?' - பெண்கள் சிரித்தனர். ஆத்திரம் வந்தது.

'இஸிலாங்கட்சித் தலவரு.. இஷாக் எம்பிர ஊடு எது?'

'தேமளத? தெர்ர்ரியம்.. ல்லா..!'

'எம்.பி... எம்.பி. எம்பிட கெதற?

'எம்பி? எம்பித? கவ்தஹொத் தண்நே. பளயாங்!'

'..........'

வாங்கமுத்துமச்சான் போவம்!'

'எங்கடா... போக சில்லித்தலையா......?'



இனி நிற்பதில் பிரயோசனமில்லை. முச்சக்கரம் வந்த வழியே திரும்பி நடக்க ஆரம்பித்தான். யாஸின் அழுதபடியே கூடவே வந்தான். எந்தப்பக்கம் இது.. என்ன இடம்... எப்படி.. யார்.. யார்.. நடந்த பாதை நாற்சந்தி ஒன்றில் வந்து முடிந்தது. திக்கு விளங்கவில்லை. சிங்கள அறிவித்தல் பலகை.. தமிழ் அழிக்கப்பட்டிருந்தது. கிட்டப்போய் ஊன்றிப் பார்த்த போது 'உவாட் இடம்' என வாசிக்க முடிந்தது. புரியவில்லை.

சப்புநாயே..! அடுக்குமாடா இது? அல்லாக்கு பொறுக்குமாடா இது? லொட்ஜில மைமுனா..! மாமியை எங்க கொண்டு போய் விட்டானோ.. அல்லாவே... உயரமான கட்டிடங்கள்.. திமுதிமுவென்று வாகனங்கள்.. பல மனிதர்கள்.. சிங்கள ஒலிகள்.. யாரிடம் கேட்பது.. நடை தொடர்ந்தது.. திடீரென ஒரு தபாற்காரன் சைக்கிளில் வந்தான். முத்துமுகம்மது நம்பிக்கையாய் ஓடி-

'பியோன்! பியோன்! அண்ணேய்!' என்று கூப்பிட்டான். தபாற்காரன் சைக்கிளை நிறுத்தினான்.

'அண்ணேய், வழி தப்பிட்டம்! யூக்கேட லொச்சி எங்கால பக்கம்?

'மொகத்த? தெமளத?'

'இஸாக் எம்பிர ஊட்டு அட்றஸ்?'

'அட்றஸ்? ஏக் கியன்னே.. அநே .. முக்குத் தேருண்நே மட்ட. மெ. அத்தன டிக்கக் துரட்ட தெமள கோவிலெக்க எத்தி.. யண்ட..'

தபாற்சேவகனும் போய்விட்டான். என்ன மசிருக் கொழும்பு? பியோனுக்கே 'அட்றஸ்' தெரியாத ஊரு.. தாகமெடுத்தது. பயமாக இருந்தது. கையில் ஐந்து சதமும் இல்லை. யாஸீன் அழுகையை நிறுத்தி, சவமாய் நடந்து வந்தான்.

சுலுத்தான் செஞ்ச கறுமம்... ஆள் ஆளா பிரிச்சிட்டான். லொட்ஜில மைமுனா.. சுல்தான்... முடஉதுமாண்ட பொஞ்சாதிக்கு... பயத்தில் நெஞ்சு காய்ந்தது. மூத்திரம் பொத்துக் கொண்டு முடுக்கியது. உயரமான பத்தடிச் சுவர்கள்.. விளையாட்டு மைதானம்.. ஒரு திடீர்ச் சிறுகாடு... எங்கோ போகும் பஸ்கள்.. பஸ்ஸில் ஏறுவமா? காசி.. அதிசயம் நிகழ்ந்து சுல்தான் வரமாட்டானா?

'தண்ணி ஒடாய்க்குது மச்சான்! மூத்திரம் முடுக்குது மச்சான்!'

'வாடா!'

ஒரு தேனீர்க்கடையருகே வந்து சேர்ந்தனர். காலை மணி 11:20 என்றது. வெயில் சுள்ளெரித்தது. சிங்களப் பாடல் கர்ணகரேமாயிருந்தது. முதலாளி, ரீசேர்ட்டுக்குள் காற்பந்தொன்றை வைத்தது போன்ற தொப்பையுடனும், ஹெல்மட்டு மொட்டையுடனும் சிரித்தான். சும்மா சும்மா கமுக்கட்டை சொரிந்தான்.

'முதலாளி! தண்ணி! குடிக்க தண்ணி'

முதலாளி கிளாஸ் நிறைய நீர் கொடுத்தான். ஆவலாய்ப் பருகி மரணதாகம் தீர்ந்தபின்-

'தங்க மொதலாளி, நாங்க இஸாக் எம்பிர ஆக்கள்.. கொளும்புல வழிதப்பிட்டம்.. யூக்கேட லொஜ்ச்சில நிக்கிறம். அங்க போகனும். காலப்புடிச்சன்...'

'அடோ.. அடோ.. கக்குள... கக்குள... பளயாங் வள்ளோ?

முதலாளி அலறியபடி ஐந்து ரூபாய் நாணயத்தை விட்டெறிந்தான். காசைப் பிடித்த யாஸின் உடன் அங்கேயே பணிஸ் வாங்கிச் சாப்பிட்டான்.

'பளயாங்.. பளயாங்..'

'முத்துமச்சான்! லாத்தாவும் ம்மாவும் தேடுவாஹ... வாங்க போவம்'

'எப்பிர்ரா போற பே மொக்கா! வழி தப்பிற்றா!'

'தெரிஞ்ச ஆக்களுட்ட கேளன் மச்சான்'

'சிங்களம் தெரியுமாடா எனக்கு சில்லித்தல மண்டயா?'

(இன்னும் வரும்)

---

# வரலாறு தொல்பொருள் ஆய்வுகளை இஸ்லாம் மறுக்கின்றதா?

## பிர்அவ்னின் அழியாத உடல் 4

நபி மூஸா (அலை) அவர்கள் காலத்தில் வாழ்ந்த பிர்அவ்ன் எனும் கொடிய அரசன் பற்றியும் அவனுக்கும் நபி மூஸா (அலை) அவர்களுக்குமிடையில் நடந்த பல்வேறு வாக்குவாதங்கள், அற்புதமிகைத்தல்கள் பற்றியெல்லாம் விபரித்ததோடு, பிர்அவ்னை அத்தாட்சியாக ஆக்கியதாகவும் குர்ஆன் தெளிவுபடுத்துகின்றது. அது இன்று ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருப்பதையும் பின்வரும் சான்றுகள் ஊர்ஜிதம் செய்கின்றன.

*"எனவே, இன்று உன்னை - உன்னு(டைய, பிர்அவ்வுனு)டைய (வெற்று) உடலோடு உனக்குப்பின்னுள்ளவர்களுக்கு நீ ஒரு படிப்பினையாய் இருப்பதற்காக நாம் பாதுகாப்போம்" (குர்ஆன் - 10:92)*

"பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வுப் பணிகளின்போது, அவ( னது-பிர்அவ்வி)னது பாதுகாக்கப்பட்ட உடல் கண்டு பிடிக்கப்பட்டது. இதன் மூலம் குர்ஆனின் ஒரு முன்னறிவிப்பு உண்மையாக்கப்பட்டு உறுதிப் படுத்தப்பட்டது"

### வாழ்க்கையை உணர்த்தி, மறுமைக்குத் தயார்படுத்தல்

இஸ்லாமிய பார்வையில் வரலாறு, தொல்பொருள் ஆய்வுகள் எவ்வாறு கொள்ளப்படுகின்றன என்பதை மிகவிரிவாகவும், சரியாகவும், அறிவுபூர்வமாகவும் ஜாமிய்யா நளீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்கள் தனது இருவேறு தலைப்பிலான கட்டுரைகளில் தொட்டுக்காட்டியுள்ளார்கள். அவற்றின் சில பகுதிகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

எம்.எம்.எம். நூறுல்ஹக் சாய்ந்தமருது 05.

"வரலாறு என்பது அறிவியல் போன்ற மிகத்தெளிவான, பிரத்தியட்சமான, உறுதியான காரணங்களின் அடிப்படையில் எழுப்பப்பட்ட கலைகள் பிரிவில் சேர்க்கமுடியாத சமூக கலையைச்சார்ந்த ஒரு கலையாகும். எனவே, வரலாற்றைப் பொறுத்தளவில் அதனோடு தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறித்த பல்வேறு ஆய்வாளர்களினதும் முடிவுகள் மிக அரிதாகவே. ஒத்ததாக அமையும். ஏனெனில், இத் துறையில் ஈடுபடுகின்ற எல்லா ஆய்வாளர்களுக்கும் ஒரே தன்மையுடைய தகவல்களையும், ஆதாரங்களையும், ஆவணங்களையும் பெறமுடியாத நிலை பெரும்பாலும் அமைவதோடு, கிடைத்த தகவல்களையும், ஆதாரங்களையும் அடிப்படையாக வைத்து ஒவ்வொருவரின் விளக்கங்களும், முடிவுகளும் கூட வித்தியாசமாகவே அமையும்.

எனவே "ஒவ்வொருவரும் அடிப்படையாக கொண்டுள்ள தகவல்களும், ஆதாரங்களும் ஒன்றாக அமைந்தாலும், அவரவர்களின் முடிவுகள் வேறாக அமையலாம். சில போது சிலர் புதிய தகவல்களின் அடிப்படையில் பழைய முடிவுகளை முற்றிலும் மாற்றவும் இடமுள்ளது" *(நன்றி : இஸ்லாமிய சிந்தனை மலர் 16, 02 ஜன-மார்ச் 1994)*

மனிதனின் தோற்றம் பூர்வீகம் பற்றி ஓர் எல்லைக்கும், வரையறைக்கும் உட்பட்ட அவனது அறிவின் அடிப்படையில் நிகழ்த்தப்படும் ஆய்வுகள் என்றும் ஊகங்களாகவும், அனுமானங்களாகவுமே அமையுமே அன்றி முடிந்த முடிவுகளாக அமைய மாட்டாது.....

தொல்பொருள் கண்டுபிடிப்புக்கள் இஸ்லாமிய நோக்கில் அணுகப்படும்போது, பல பயனுள்ள உண்மைகளைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெளிவுபடுத்தியுள்ளதை வரலாறு உணர்த்துகின்றது. அல்லாஹ்வின் தூதராகிய மூஸா (அலை) அவர்களுக்கும், எகிப்தை ஆட்சி புரிந்த பிர்அவ்னுக்கும் இடையே நடந்த வரலாற்றுச் சம்பவங்கள் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்".
*(நன்றி : இஸ்லாமிய சிந்தனை மலர் 14, இதழ் 01 ஒக்டோபர் -டிசம்பர் 1991)*

மனித வரலாற்றில் தோன்றி வளர்ந்துள்ள அறிவியல், மானுடவியல் கலைகள் அனைத்தும் பிரத்தியட்சமாகக் கண்ணுக்குப் புலப்படுகின்ற மனிதனின் பகுத்தறிவின் வட்டத்திற்கு உட்பட்ட இப்புற உலகுபற்றிய அவனது அறிவைக் கட்டியெழுப்புவதற்குத் துணைபுரிந்துள்ளன. இஸ்லாத்தின் அழைப்பு, புலன்களுக்கு உட்பட்ட இந்த புற உலகைத் தாண்டி மறைவான உலகை நோக்கி பயணம் செய்வதற்கான அழைப்பாகும்.

எனவே, தொல்பொருள் ஆய்வு தொடர்பான இஸ்லாமிய கண்ணோட்டமானது மனிதனுக்கு வாழ்க்கையின் நிலையற்ற தன்மையை உணர்த்தி, மறுமை வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்தப்படும் உயர் வாய்ப்பாக இவ்வுலக வாழ்க்கையை அணுகும்படி அவனைப் பணிக்கின்றது. இந்த அணுகு முறையானது மனிதன், பிரபஞ்சம், இயற்கை ஆகியவற்றை பின்னிப்பிணைத்துள்ள தௌஹீத் எனும் ஒருமைப்பாட்டை உணரும் மகத்தான பேற்றை அவனுக்கு அளிக்கின்றது.

இந்த வகையில் தொல்பொருள் ஆய்வில் குர்ஆனை மையமாகக் கொண்ட அணுகுமுறை அதற்கு ஒரு புதிய பரிணாமத்தையும் வட்டத்தையும் வழங்குகின்றது.
*(நன்றி : இஸ்லாமிய சிந்தனை, மலர் - 14 இதழ் : 2 ஜனவரி - மார்ச் 1992)*

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மற்றவரின் கீழ் வாழ நாம் தயாரில்லை!

> "கருணா கூறுவதைப் போன்றுதான் அனைத்தும் நடக்கும் என்றிருந்தால், இன்றுடன் அரசியலுக்கு முழுக்குப் போட்டு விட்டு கடலில் போய் பாய வேண்டியதுதான். முஸ்லிம்களுக்கு உரிய உரிமையை தராவிடில் கடலில்தான் பாய வேண்டும். போர் நிறுத்த பேச்சுவார்த்தையை புலிகளும் அரசும்தான் மேற்கொள்ள வேண்டும். ஆனால் போருக்கு அப்பால் சென்று நிரந்தரச் சமாதானத்தை நிறுவுவதற்காக பேச்சு வார்த்தை நடத்தப்படுமானால் நம் அனைத்துத் தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.'
>
> **ஃபேரியல் அஷ்ரஃப்**

*உங்கள் கட்சியின் முன்னாள் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் மூன்றாம் வருட ஞாபகார்த்தத்தின் போது மு.கா. யின் தற்கால தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட கலந்து கொண்டவர்களுக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டமொன்றை காணக்கூடியதாக இருந்தது. அஷ்ரஃப் அவர்களின் இறப்பின் உண்மையான காரணத்தை கண்டுபிடிக்காமல் அதிகாரத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதாக அங்கே கூறப்பட்டது. அந்தக் குற்றச் சாட்டை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?*

கிழக்கில் அத்தகையதொரு எதிர்ப்பைப் பற்றி எனக்குத் தெரியாது. அஷ்ரஃப் அவர்களை நினைவு கூர்ந்து கல்முனையில் அன்னதானம் வழங்கப்பட்டது. பாடசாலைகளும், கடைகளும் அடைக்கப்பட்டன. நீங்கள் குறிப்பிடும் எதிர்ப்புகள் அங்கே இடம்பெறவில்லை. ஆனால், கொழும்பில் முத்திரை வெளியிடும் போது எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆனால் எனக்கு எதிராக யாரும் குரல் கொடுக்கவில்லை.

*ஆனால் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் அமர்ந்திருந்த மேடையில் வைத்தே கிழக்கில் வாழும் இளைஞர் ஒருவர் பேசும்போது அஷ்ரஃப் அவர்களின் இறப்பின் இரகசியத்தை கண்டுபிடிக்க ஒருவரும் முனையவில்லை என்று குற்றஞ்சாட்டினார். இது பற்றி...?*

யாருக்கும் எப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் முன் வைக்க முடியும். அந்த இறப்பைப் பற்றிக்கண்டு பிடிக்க ஜனாதிபதியினால் விஷேட குழுவொன்று அமைக்கப்பட்டது. அதன் அறிக்கையொன்று எனக்கும் தரப்பட்டது. ஆனால் அந்த அறிக்கை இன்னும் பிரசித்தப்படுத்தப்படவில்லை. காரணம் எனக்குத் தெரியாது. எனக்கு தரப்பட்ட அறிக்கையில் அஷ்ரஃப் அவர்கள் பயணம் செய்த ஹெலிகெப்டரில் குறைபாடு இருந்ததாகவும், அதன்காரணமாக இயந்திரக்கோளாறு ஏற்பட்டு விபத்து நேர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. வேறு விடயங்கள் எங்களுக்குத் தெரியாது. ஆனால் அஷ்ரஃப் அவர்களின் மரணம் எங்களுக்கு இன்னும் மர்மமாகவே உள்ளது. ஆனால் நியாயத்தை வழங்குமாறு நாம் யாருக்கு எதிராக குரல் கொடுப்பது? அப்படி உண்மையை கண்டு பிடித்து தரக்கூடிய ஒருவர் இந் நாட்டில் உள்ளாரா?

*மு.கா. யிலிருந்து நீங்களும் உங்கள் குழுவினரும் விலக்கப்பட்டுள்ளீர்கள். ஆனால் அண்மையில், மு.கா. யின் தலைவர் உங்களுக்கும், குழுவினருக்கும் மு.கா. யின் கதவு திறந்துள்ளதாக குறிப்பிட்டிருந்தார். உண்மையில் அப்படியொன்றை நீங்கள் காண்கிறீர்களா?*

அவர் எங்களுக்காக கதவை திறந்தாலும், சாத்தியிருந்தாலும் எங்களுக்கு அது ஒரு பிரச்சினையல்ல. கதவு திறந்துள்ளது என்பதற்காக உள்ளே நுழைவது, பண்பான செயலல்ல. உள் நுழைவதற்கு ஏதேனும் ஒரு காரணமோ, அழைப்போ இருக்க வேண்டும். அதே போன்றுதான் இந்தக் கதவையும் நாங்கள் பார்க்கிறோம். மு.கா.யில் நாங்கள் இணைவதா, இல்லையா என்பதை கதவு திறப்பதனால் தீர்மானிக்க முடியாது. அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும்.

*எதிர்வரும் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம்களுக்கான ஒரு தனித்தரப்பாக தாங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று கூறி முஸ்லிம் எம்.பிக்களுக்கு இடையில் கூட்டணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் புலிகளின் கிழக்குப் பிராந்திய ஆயுதக் குழுத்தலைவர் கருணா, முஸ்லிம்களை தாங்கள் தனித்தரப்பாக அங்கீகரிக்கவில்லை எனக் கூறுகிறார். அத்தகையதொரு பின்னணியில் உங்களுடைய எதிர்கால செயற்பாடுகள் எப்படி அமையும்?*

நம்பிக்கையின்றி செயற்படுவதாக இருந்தால் நாளைய தினத்தைப் பற்றிச் சிந்திப்பதும் முட்டாள் தனமாகும். ஏதோ ஒரு நம்பிக்கையின் அடிப்படையில்தான் நாம் வாழ்கிறோம். இந் நாட்டில் நிரந்தர சமாதானமொன்று ஏற்படும் என்று நம்புகிறோம். கருணா கூறுவதைப் போன்றுதான் அனைத்தும் நடக்கும் என்றிருந்தால், இன்றுடன் அரசியலுக்கு முழுக்குப் போட்டு விட்டு கடலில் போய் பாய வேண்டியதுதான். முஸ்லிம்களுக்கு உரிய உரிமையை தராவிடில் கடலில்தான் பாய வேண்டும். போர் நிறுத்த பேச்சுவார்த்தையை புலிகளும் அரசும்தான் மேற்கொள்ள வேண்டும். ஆனால் போருக்கு அப்பால் சென்று நிரந்தரச் சமாதானத்தை நிறுவுவதற்காக பேச்சு வார்த்தை நடத்தப்படுமானால் நம் அனைத்துத் தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.






வடக்கு, கிழக்கில் வாழும் சிங்கள - முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்காமல் ஒரு போதும் சமாதானத்தை உருவாக்க முடியாது. வடக்கு கிழக்கில் எமது செறிவு 1/3 ஆகும் . நாம் சிறுபான்மை அல்ல. கிழக்கில் நாம் 40% பிரதிநிதித்துவப்படுத்துகிறோம். இப்பிரதிநிதித்துவத்தைப் புறக்கணித்துவிட்டு செயற்படுவதால் சமாதானத்தை நிலைப்படுத்த முடியாது. நாம் சமாதானப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டு எதையும் பறித்தெடுக்க முனையவில்லை. எங்களுடைய தனிப்பட்ட கருத்துக்களை முன்வைக்க ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறே வேண்டுகிறோம்.

*ம.வி.மு. கடந்த காலங்களில் ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களில் நீங்களும் பேச்சாளராக இருந்தீர்கள். ஆனால் அண்மைக் காலத்தில் உங்களை அவர்களின் மேடையில் காண முடியவில்லை ஏன்? ம.வி.மு.-ஐ வெறுத்து விட்டீர்களா?*

அவர்களைக் கண்டு நான் வெறுக்கவில்லை. இந்நாட்டின் ஜனநாயக கட்சிகளை நாம் வெறுக்கமாட்டோம். நான் ம.வி.மு. மேடைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் முஸ்லிம்களுக்கு விளைந்த அநியாயங்களைப் பற்றியே பேசினேன். அந்த இடத்தில் எங்களுக்குள் ஒரு பொது உடன்பாடு இருந்தது. நாமனைவரும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எதிர்த்தே இருந்தோம். அந்த விடயத்தில் நாம் இன்னும் உடன்பட்டே இருக்கின்றோம். அந்த ஒப்பந்தம் முறைகேடானது என்று தற்போது அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். ம.வி.மு. யினர் அனைத்தையும் ஏற்றுக் கொள்வதாக இருந்தால் கட்சிகள் இரண்டு எதற்கு? நான் செய்வது, சொல்வது அனைத்தும் சரியென்று அவர்கள் நினைப்பார்களானால், அவர் தே.ஐ.முன்னணியில் இணைந்து கொள்ளலாம்தானே. நாம் இரண்டு கட்சிகளில் இருக்கக்காரணம் எங்களுக்குள் உடன்பாடும் முறண்பாடும் இருப்பதனால்தான்.

இடைக்கால நிர்வாகமொன்றை தனிப்பட்டவருக்கு வழங்கப்படக்கூடாது. அது மக்களுக்கே வழங்கப்பட வேண்டும். மேலும் அது புவியியல் ரீதியில் பிரித்து வழங்க முடியாது. மக்களுக்கு அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டும். அவ்வாறு அதிகாரப்பகிர்வை வழங்கும்போது அதனை ஆயுதக்குழுக்கோ, கட்சிகளுக்கோ வழங்க வேண்டிய அவசியமில்லை. தமிழர்கள் தமது அழிவுகளில் இருந்து வெளியேற இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கேட்கின்றனர். எனின் அதனை வழங்குமாறு நாமும் கேட்டுக் கொள்கிறோம். ஆனால் இடைக்கால நிர்வாகமொன்றை வழங்குவது யாருக்கு என்ற பிரச்சினை உருவாகும். அந்தப்பிரதேசத்தின் மக்களுக்கே அது வழங்கப்பட வேண்டும். இடைக்கால நிர்வாகத்தை பொறுத்த வரையில் நாம் அதனை எதிர்க்கவில்லை.

*லங்கா தீப 6.10.2003*
*தமிழில் : ரீ.ஜே.அகமத் ஜான்*


**'முஸ்லிம் குரல்' பத்திரிகையில் பங்காற்றுவதற்கான பதவி வெற்றிடங்கள்**

+ கம்பியூட்டர் டைப் செட்டர்
+ (டைப்செற்றிங்கில் விரைவும், பக்க அமைப்பில் அனுபவமும் இருக்க வேண்டும்)
+ ஒப்புநோக்குனர் (Proof Reader) (மொழித்தேர்ச்சியும் வாசிப்பு அனுபவமுள்ளவர்)

எமது நிறுவனத்தில் மேற்படி பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளன. முஸ்லிம் சமூகத்தின் மீதான உணர்வும், உணர்ச்சியுமிக்கவர்களிடமிருந்து பங்காற்றலை எதிர் பார்க்கிறோம். தகுதியான ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கும் பதவிக்குரிய அனுபவங்களும், சான்றிதழ்களும் உள்ளடக்கியதாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு இருவாரங்களுக்குள் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய அகம்**

**ஆளணி முகாமையாளர்**
'முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்'
இல. 181/1, மாளிகாகந்த வீதி,
மருதானை, கொழும்பு 10.



முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

**சந்தா விபரம்!**

3 மாதங்கள் - (12 இதழ்கள்) 250/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்)- 500/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 1000/-

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Kural Publiction Slave Island Post office எனக் குறிப்பிடவும்.


# பிரதமரின் அமெரிக்க ஆதரவு இலங்கையின் சர்வதேச உறவுகளை தகர்க்கிறது!

ஐக்கிய முன்னணி அரசின் வெளிநாட்டுக் கொள்கையினைத் தாக்கிய ஜே.வி.பி. இலங்கையினைச் சர்வதேச சமூகத்தினிடையில் தனிமைப்படுத்தியதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

"இது பாரதூரமான ஒரு விடயம். ஏகாதிபத்தியக் கொள்கையினை முன்னெடுத்துச் செல்லவோ, இந்நாட்டைச் சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தவோ இந்த அரசாங்கத்திற்கு மக்கள் அதிகாரமளிக்கவில்லை. நேற்றும் கொழும்பில் நடந்த ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு கூறினார் ஜே.வி.பி. பாராளுமன்றக் குழுத் தலைவரும் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ச

அமெரிக்க, பிரித்தானிய படைகள் ஈராக்கின் மீது தாக்குதல் நடாத்தியதை அங்கீகரித்து பிரதமர் ரணில் விக்கிரம சிங்க 58வது மாநாட்டில் சொற்பொழிவாற்றியுள்ளார். அமெரிக்காவும், நேச நாடுகளும் ஈராக்கின் மீது ஆக்கிரமிப்பு நடாத்துவதை விட வேறு வழியொன்றும் இருக்க வில்லையெனக் கருதியவர்களில் நாமும் அடங்குகிறோம் என ரணில் விக்கிரம சிங்க கூறுகிறார். ஐ.நா. சபையின் இயலாமை காரணமாக அமெரிக்காவிற்கு உலகின் பொலிஸ்காரன் போன்று செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டதெனஅவர் கூறியுள்ளார். இக் கூற்று உலக அமைப்பு என்ற வகையில் ஐ.நா. சபையினைக் கொச்சைப்படுத்துகிறது. இதனால் ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் இலங்கைக்கு வருவாரா என்ற சந்தேகம் எம்முள் எழுகிறது.

பிரதமரின் இவ்வுரை அனைத்து முஸ்லிம் நாடுகளுடன் எமது நாடு கொண்டுள்ள நட்புறவை வெகுவாகப் பாதிக்கும். இன்று அனைவரும் அமெரிக்க, பிரித்தானியப்படைகள் ஈராக் மீது ஆக்கிரமித்ததைக் கண்டிக்கின்றனர்.

அமெரிக்க, பிரித்தானிய நாடுகளின் மக்கள் கூடத் தமது தலைவர்களைக் கண்டித்து வீதிகளிற் குழுமுகிறார்கள். இப்போது இலங்கையின் பிரதமர் இந்த ஆக்கிரமிப்பை ஆதரிப்பதானது உலகின் அண்மைக்கால வரலாற்றில் ஏற்படுத்தப்பட்ட ஒரு தழும்பாகும்.

பிரதமரின் இக்கொள்கையினை ஆதரிக்கிறீர்களா என இந்த அரசாங்கத்தை ஆதரிக்கும் முஸ்லிம் அமைச்சர்களிடம் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் கேட்கின்றோம்.

போர்த்துக்கேயர் இந்நாட்டை ஆக்கிரமித்து 500 ஆண்டுகள் நிறைவு பெறுவதை நினைவு கூறும் முகமாக நடக்கும் வைபவங்களுக்காக போர்த்துக்கல் அரசின் தலைவர்களை அழைத்திருப்பதை வீரவன்ச ஏளனமாகச் சுட்டிக் காட்டினார்.

போர்த்துக்கேயர் 1505ல் எமது நாட்டுக்கு வந்து எமது மக்களை அடிமைப்படுத்துவதற்காக ஒரு



அரசை நிறுவினர். அதன் மூலம் அடுத்த நூறு ஆண்டுகளுக்கு நாம் காலனித்துவ ஆதிக்கத்துக்கு உட்படுத்தப்பட்டோம். தமது தோல்வியினைக் கொண்டாடுவதற்காக நாட்டுக்கு இப்படி நுழைந்த ஒரு தரப்பினரை அழைத்த நாடு உலகில் வேறு எங்கும் இருக்க முடியாது.

இப்போது நாம் மேலைத்தேய நாடுகளின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப செயலாற்றும் ஒரு நாடாக மாறியுள்ளோம்.

எமது நாட்டின் இப்போதைய வெளிநாட்டுக் கொள்கை உலக நாடுகளின் போக்குக்கு மாற்றமானதாக உள்ளது.

ஆக்கிரமிப்பையும், சுரண்டலையும் அமெரிக்க, பிரித்தானிய மக்கள் கண்டிக்கும் அதே சமயம் பிரெஞ்சு, ஜெர்மனியர்கள் கூட அமெரிக்காவின் கொள்கையை எதிர்த்துள்ளனர். பிரதமரும் அவரது அரசாங்கமும் தோல்வியடையும் ஒரு கொள்கையினைப் பற்றிப் பிடித்துக் கொண்டுள்ளனர்.

- சமன் இந்திரஜித்

## முதியோரை மறக்க வேண்டாம்! ஒக்டோபர் 01 அனைத்துலக முதியோர் தினம்

மனித இனத்தின் வயது ஏறிக்கொண்டே செல்கிறது. ஒவ்வொரு மாதமும் சுமார் 10 இலட்சம்பேர் 60 வயதைத் தாண்டுகின்றனர். 1950 ஆம் ஆண்டு தொடக்கம் சராசரி வயதெல்லை 20 ஆண்டுகளால் அதிகரித்துள்ளது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இந்த அதிகரிப்பு காணப்படுகின்றது.

இலங்கையிலும் முதியோரின் வயதெல்லை அதிகரித்து வருவதனால் அடுத்த 25 ஆண்டுகளில் சனத்தொகை அமைப்பில் மாற்றம் ஏற்படலாம். உலகில் எந்த ஒரு நாட்டையும் விட இலங்கையில் மக்கள் தொகையில் முதியோர் தொகை அதிகரித்து வருகிறது என நிபுணர்கள் கூறுகின்றனர். காரணம்; பாலர் இறப்பில் குறைவு, நீண்ட ஆயுள் போன்றன ஆகும். இத்துறையில் அரசாங்கம் மட்டுமன்றி, அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகம், குடும்பங்கள் போன்றோரினதும் பங்கு சரிவர அமையப்பெறின் இப்பிரச்சினையினை ஓரளவு அணுகமுடியும்.

ஏழைக்குடும்பங்களிலேயே முதியோர்கள் அதிகம் உள்ளனர். எனவே முதுமைக் காலத்தில் அவர்கள் பொருளாதாரத்தில் உறுதியுடையோராக இருக்க வேண்டும் என விரும்புவது இயல்பே. வறுமையும், தனிமையும் அவர்களை வாட்டும் இரு விடயங்களாகும். போஷாக்குள்ள உணவைப் பெறுதல், உடநலம், போதிய வீட்டு வசதி, போக்குவரத்து, பொருட்கொள்வனவு போன்றவை அவர்கள் முன்னோக்க வேண்டிய பிரச்சினைகளாகும்.

இலங்கையில் முதியோர்களில் பெரும்பாலானோர் பெண்களாவர். இப்போது முதியோர்களில் பெண்களின் வயது 76, ஆண்களின் வயது 72 ஆகும். 2025 இல் இது முறையே 80, 75 ஆகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதியோர்களுக்கு அறிமுக அட்டை வழங்கல் போக்குவரத்துத் துறையில் சலுகைக் கட்டணம் என்பன தற்போது பரிந்துரைக்கப்படுகிறது.

இலங்கையில் அதிகமான குடும்பத்தினர் தொழில் காரணமாக பொலிசிலும், வெளிநாடுகளிலும் உள்ளதால் அவர்களது பிள்ளைகள் பற்றிய பொறுப்பும் முதியோர்களிடமே விடப்படுகிறது.

மனிதனின் பெரும் ஆசை நற்சுகத்துடன் வாழ வேண்டுமென்பதே. உடற்சுகம் பாதிக்கப்படின் பிற பல செயல்களும் பாதிக்கப்படுகின்றன. மனிதனில் வயது தொடர்பான உடற்பிரச்சினைகள் மத்திய வயதில் தொடங்கி மூப்பு வயதில் தலைகாட்டுகின்றன. இத்துடன் நவீன வாழ்க்கை முறையின் சவால்களும் ஒன்று சேர்ந்து பல உளவியல் பிரச்சினைகள் தலையெடுக்கின்றன.

கனணிகளைப் பின்னணியில் கொண்ட இன்றைய இளைஞர்கள், முதுமையின் முதிர்ச்சி தரும் பாடங்களை மதிப்பதில்லை. எனினும் சமூகம் இளைஞர்களுக்கு முன்னிடம் அளித்து முதியோர்களை பின்தங்க வைத்துள்ளது. பல முதியோர்கள் உடற்சுகம், சுதந்திர வாழ்க்கை, அடுத்தவர் மீது தங்கியிராது வாழ்தல் என்பதே அவர்களது விருப்பம். வாழ்க்கையின் சூழ்நிலைகளுக்கு எற்ப அவர்களை மதித்து வாழப் பழகிக்கொள்வது இன்றைய இளையவர்களின் கடமையாகும்.


ரெடி மேட், மற்றும் சல்வார், சாரி வகைகள், ஆண்களுக்கான சேட்டிங், சூட்டிங்
சகல விதமான ஆடைத் தெரிவுகளுக்கும் காத்தான்குடியில் சிறந்த ஆடையகம்
**சுப்பர் செலக்ஷன்**
28, பிரதான வீதி, காத்தான்குடி 03.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




முஸ்லிம்குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி, இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை, முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.

## சமூகப் பற்றுள்ள ஒரு சகோதரியிடமிருந்து..

முஸ்லிம் குரலில் வெளியிடப்பட்டிருந்த முஸ்லிம் தேச ஆவணப்படுத்தல் தொடர்பான விபரத்தை படித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனெனில் எமது முஸ்லிம் சமூகத்தில் பலர் குரல் கொடுத்தார்கள் என்ற ஒரு காரணத்துக்காகவும், முஸ்லிம் என்ற காரணங்களுக்காகவும் எவ்வித கேள்விகளுமின்றி ஒரே நேரத்தில் ஒரு குடும்பத்திலேயே ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடையவர்கள் அநியாயமான முறையில் கொல்லப்பட்டும், கடத்தப்பட்டும், ஊனமாக்கப்பட்டும் உள்ளனர். எனினும் எமது பிரதேசத்தில் இதற்கான எந்தவித ஆவணப்படுத்தல்களோ, அது தொடர்பான தரவுகளோ இதுவரையில் பதிவாக்கப்பட வில்லை. இந்நிலை தொடருமாயின் காலப்போக்கில் எமது முஸ்லிம் சமூகம் இவ்வாறான எத்தனை எத்தனை முஸ்லிம் தலைவர்களையும், நாளைய சமுதாயத்தின் இளந்தலைவர்களையும் இழந்துள்ளது என்பது கூட மறக்கடிக்கப்பட்டுவிடும்.

தற்போதும் முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்திற்கு இத்தகவல்களை சேகரித்துக் கொண்டிருக்கிறேன். எமது இந்த 'அல்-அமானா' மகளிர் சங்கமானது எந்தவித பொருளாதார வசதியும் இல்லாத நிலையில் இயங்கிவருகிறது. இருப்பினும் என்னால் முடிந்தளவு எனது பிரதேசத்திலுள்ள தகவல்களைத் திரட்டி வருகின்றேன். இன்னும் சில தினங்களில் அத்தகவல்களை ஆவணக் காப்பகத்திற்கு அனுப்பி வைக்கவுள்ளேன். முழுத்தகவல்களையும் ஒரே நேரத்தில் தபாலிடும் வசதி எனக்கில்லை. எனவே படிப்படியாக இத்தகவல்களை அனுப்பி வைப்பேன் என்பதனை தெரிவித்துக் கொள்வதோடு, ஆவணக் காப்பகமானது எமது சங்கம் சார்பில் சில விண்ணப்பப்படிவங்களையாவது வழங்கி உதவுமாயின் நான் பெரு நன்றியுடையவளாயிருப்பேன் என்பதை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

எனது பிரதேசத்தைப் பொறுத்தவரை என்போன்ற இளம்யுவதிகள்கூட இவ்வாறான செயற்பாடுகளில் முன்வராமை மிகவும் வேதனைக்குரிய விடயமே! எனினும் நான் இம்மகளிர் சங்கத் தலைவி என்ற வகையிலல்லாமல் எனது தனிப்பட்ட முயற்சியினாலேயே "எனது எழுத்து மூலமாகவே" இவ்வாறான தகவல்களை திரட்டிவருகின்றேன். மேலும் ஆவணக்காப்பகத்திற்கு தேவையான பல தகவல்களையும் நான் திரட்டித் தருவதில் எப்போதும் தயாராகவுள்ளேன் என்பதனையும் உண்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செல்வி. எம்.எல்.என். நஸ்வின்**
தலைவர் அல் - அமானா மகளிர் அமைப்பு
வாழைச்சேனை 05.



முகம்மட் இஸ்மாயீல் முஹம்மட் பாயிஸ் 22/8, அகமட் பரீட் மாவத்தைகாத்தான்குடி06. பிறந்த திகதி 04.07.1970. மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது. மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 650



முகம்மது இஸ்மாயீல் முகம்மது ஜாபீர், 22/8, அகமட் பரீட் மாவத்தை, காத்தான்குடி 06. பிறந்த திகதி 01.03.1966. சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : குருக்கள் மடம். 12.07.1990 மரணம் பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது. மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 653



சாகுல் ஹமீட் அசார், 58, ஆஷாத் நகர், கிளிவெட்டி. பிறந்த திகதி 17.09.1969. சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : மேங்காமம் பாரதிபுரம் 05.08.2000 விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டார்.

சதக்கத்துல்லா முஹம்மது றெசாலிகு, இக்பால் நகர் 07, தோப்பூர்.



பிறந்த திகதி 30.07.1956 சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : இக்பால் நகர் 07, பம்மான் குளத்தடியில் மரணம் இனந்தெரியாதவரால் நிகழ்த்தப்பட்டுள்ளது. மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 1206.

அப்துல் கபூர் அப்துல் றகுமான்,



நூறாணிய்யா மாவத்தை, புதிய காத்தான்குடி 06. பிறந்த திகதி 23.12.1968 சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : புதிய காத்தான்குடி 22.03.1988 மரணம் பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்டு ள்ளது. மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 668.

முஹம்மது இஸ்மாயீல் முகம்மது சிறாஜீதீன்



நெய்தல், நகர், மூதூர். பிறந்த திகதி 1969.10.08 சம்பவம் இடம்பெற்ற திகதியும் இடமும் : பால நகர் மூதூர் 02. 17.06.1990 மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் : 946

## அஷ்ரஃப்பின் மரணத்தை துலக்கி வைப்பதே அவரது நினைவு கூர்தலை அர்த்தமாக்கும்!

மறைந்த தலைவர் பயணம் செய்த விமானம் விபத்திற்கு (?) உள்ளான வேளையில் மரணம் சம்பவித்ததாக கூறப்பட்டு இவ்வாண்டுடன் 3 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. ஆனால் அவரது அரசியல் வாரிசுகளும், உறவினர்களும் என்று கூறிக் கொண்டிருக்கும் நீங்கள் இதுவரை அதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? விசாரணைகள் கூட எந்தளவில் உள்ளன? என்பதையாவது அறிந்து வைத்துள்ளீர்களா?

தேர்தல் காலங்களில் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் மறைவு, திடுக்கிடும் விடயங்கள் எல்லாம் தம்மிடம் இருப்பதாகப் பகிரங்க மேடைகளில் பறைசாற்றியவர்களும், அதற்கான விசாரணைகளை சுதந்திரமாக ஆரம்பிக்க ஐக்கிய தேசிய முன்னணியை ஆதரிக்கும் படியும் கூறிச் சென்றவர்கள் இன்று பொறுப்புள்ள அமைச்சுக்களிலும் அதிகாரங்களிலும் இருந்தும் ஏன் இந்த விடயங்களைத் தட்டிக் கேட்கவில்லை. உங்கள் அமைச்சுப்பதவிகட்கும், ஆடம்பர வாழ்க்கைக்கும் ஆபத்து வந்து விடும் என்பதினாலா?

இன்னும் எதிர்க்கட்சிகளில் இருக்கும் முந்நாள், இந்நாள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களும் ஏன் வாய்மூடி மௌனியாய் இருக்கின்றீர்கள்? நீங்கள் முன்பு போல ஆட்சி மாறட்டும் அது செய்வோம், இது செய்வோம் என இன்னும் ஏமாற்ற முடியாது. ஏனெனில் கடந்த பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியிலும், இன்றைய ஐக்கிய தேசிய முன்னணி அரசிலும் அதிகாரங்களையும், அமைச்சுக்களையும் பகிர்ந்து பங்காளிகளாக இருந்துள்ளீர்கள். இருக்கின்றீர்கள். இன்று இந்த விடயம் தொடர்பாக கேள்வி கேட்க முடியாதாயின் எப்போது கேட்கப் போகின்றீர்கள். அறிக்கை விடுகின்றீர்கள். பின்னர் அடங்கி விடுகிறீர்கள். உங்கள் பதவிகள் பறிபோகும் போது மட்டும் பதறி விடுகின்றீர்கள். இவை ஏன் என்பது எங்களுக்கு விளங்காமலில்லை.

இன்னும் உங்கள் அரசியல் வாழ்க்கையிலும் எதிர்காலத்திலும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று மரணங்கள் ஏற்பட்டால் பின்வருபவர்களும் இவ்வாறு பேசாமடந்தைகளாக வாய் மூடி மௌனிகளாக இருக்க அனுமதிக்கப் போகின்றீர்களா? மேலும் இலங்கை முஸ்லிம்களுக்கென ஒரு தனியான கட்சியை அமைத்து அவர்களுக்காக குரல் கொடுத்த ஒரு மாபெரும் தலைவனின் மரணமே இதுவரை எதுவித பதிலும் இன்றி முடங்கிக் கிடந்தால், எப்படி? நீங்கள் ஒரு சாதாரண பொதுமகனின் மரணம் பற்றிக் கேட்கப் போகின்றீர்கள் என்ற கேள்வி எங்கள் மனங்களில் எழாமல் இல்லை.

மூன்று வருடங்களாக அவரது அரசியல் வாரிசான நீங்களும் உறவினர்களான பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏன் எது வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. சாதாரண பொது மக்கட்கு மறைந்த தலைவனின் மரணம் தொடர்பான மர்மத்தில் இருக்கும் அக்கறை கூட இது வரை உங்களுக்கு எழவில்லையா? சற்று சிந்தியுங்கள். உங்கள் அரசியற் பாதையிலும் ஓய்வு வரும். அப்போது உங்கள் வயதும், வாழ்வும் முதுமை அடையும் அவ்வேளை உங்கள் வாழ்வின் இரைமீட்டல்களில் மறைந்த தலைவனின் கனவுகள் வந்தாவது மனதை உறுத்தும். நிம்மதி இழக்கச் செய்யும். உங்கள் அனைவரையும் உயர்த்தி சமூகத்திற்கு இனம் காட்டிச் சென்ற அந்த உயர்ந்த ஆத்மா பற்றிச் சிந்திக்க இன்று உங்களது அரசியல் அலுவல்களும், ஆடம்பர வாழ்க்கையும் Busy ஆக இருந்தால் முதுமையில் அல்லது அரசியல் வாழ்வின் ஓய்வுக்காலங்களில் நல்லதோர் ஓய்வு கிடைக்கும். அப்போது



அனுபவிப்பீர்கள்.

எனவேதான் ஓர் அரசியற் தலைவனுக்கு தன்னைக் சாட்டிக் சொன்ன களமமைத்துக் கொடுத்த அந்த மதீனா உம்மா தன் மகனது மரணம் பற்றித் தெரியாமலே மரணித்தும் போய் விட்டார். இப்படி எத்தனை தாய்மார்கட்கு நிகழ்த்தப் போகின்றீர்கள். ஆகவேதான் 'தலைவரின் பெயரால்' என கண்காட்சிகளையும், கந்தூரிகளையும் ஏற்பாடு செய்து மக்களை திசை திருப்பாது, அந்த அஷ்ரஃப் எனும் அற்புதப் புத்தகத்தின் இறுதிப்பக்கத்தில் உறைந்து கிடக்கும் உண்மைகளை சமூகத்திற்கு, மக்களின் மனங்களிற்கு கொண்டு வர முயற்சி செய்யுங்கள். அது அவரோடு ஒட்டி உறவாடிய உங்களுக்கும், அந்தத் தலைவனை இன்னும் எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கும் உள்ளங்கட்கும் ஓர் விடியலைக் காட்டிய நன்மையைப் பெறுவீர்கள்.

எனவேதான் மறைந்த தலைவரின் வாரிசுகள் என்பது அவரது அமைச்சுப் பதவியை மீண்டும் பெறுவதிலேயோ,அதனை அனுபவிப்பதிலேயோ அல்ல, மாறாக அவரது மரணம் பற்றிய மர்மங்களை மக்களுக்கு துலக்கி காட்டுவதிலேயே உள்ளது.

**முபிஸால் அபூபக்கர்**
**கல்முனை**

## நாட்டின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

ஆசியாவின் முத்தென அழைக்கப்பட்ட நம் தாய் நாட்டை சுதந்திரம் அடைந்த நாள்முதல் தொடர்ந்து ஆட்சி செய்து கொண்டு வந்த அரசுகளின் பதவி மோகத்தினால் இனங்களுக்கிடையே வேற்றுமையை வளர்த்து, நீதி, நேர்மை, அர்ப்பணம், உரிமைகள், சகோதரத்துவம், ஒழுக்கம், அபிவிருத்தி, சமூக அமைப்பு, விவசாய முன்னேற்றம், சுதந்திரத்தின் பெறுமதி, கல்வியின் தேவை போன்றவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், சம உரிமைகள் மறுக்கப்பட்டு அரசியல் லாபம் பெற மேற்கொண்ட நடவடிக்கைகளினால் நாட்டில் இனவாதம், வகுப்புவாதம், பிரிவினை வாதம், சுயநலம், பொய், களவு, கொலை, கொள்ளை, பொறாமை, மது, சூது, விபச்சாரம் போன்றன மெலிந்து நிறைந்துவிட்டன.

நம் நாட்டு மக்கள் வழிபடும் நான்கு பிரதான மதங்களும் நல்லவற்றையே போதித்துள்ளது. அதன்படி நடந்தால் விமோசனம் கிடைக்கும் என்கின்றது. ஆனால் எல்லா மதத்தைச் சார்ந்தவர்களிலும் அவரவர் மதக் கோட்பாடுகளை கடமைகளை சரிவர உணர்ந்து அதன்படி வாழ்க்கையை நடாத்தாததினால்தான் நாடு பயங்கர நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இஸ்லாத்திற்கு முரணான கொள்கையுடன் நமது நாட்டு ஆட்சி நடைபெறுவதினால் இஸ்லாத்தின் சட்டதிட்டத்துடன் வாழ வேண்டிய முஸ்லிம்களே அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர். உதாரணத்திற்காகச் சிலவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

இன்று நம்நாட்டில் இயங்கும் அத்தனை ஸ்தாபனங்களும், வங்கிகளும், வட்டியுடன் சம்பந்தப்பட்டே நடைபெறுகின்றன. இது இஸ்லாமிய சட்டப்படி மிகவும் பாவமான, வெறுக்கப்பட்ட, அநீதியான, முன்னேற்றம் இல்லாத அழிவைக் கொண்டுவரும் மன்னிக்கப்படாத குற்றமான ஒன்றாகும். இதிலிருந்து விடுபடாமல் தொடர்ந்தும் செயல்பட்டால் நாட்டில், அமைதி, நிம்மதி, அபிவிருத்தி போன்றவை எப்படிக் கிடைக்கும். நிச்சயம் கிடைக்காது. மாறாக கொலை, கொள்ளை, விபச்சாரம், இயற்கை அனர்த்தங்கள், பொருளாதார வீழ்ச்சி, நிம்மதியற்ற வாழ்க்கை, கடன் தொல்லை, களவு, பொய், ஏமாற்று, பொறாமை இன்னும் சொல்லப்போனால் இங்கு நடைபெறும் சகல விபரீதங்களுக்கும் முக்கிய காரணம் வட்டியே என்று ஆணித்தரமாகக் கூற முடியும். இதனை அரசாங்கங்கள் உணருமா?

மது அருந்தக் கூடாது என்று எல்லா மதங்களும் கூறிக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் எல்லா மதத்தினரும் அரசாங்கமும் மதுவை விடுவதாகத் தோன்றவில்லை. இஸ்லாம் கூறுகிறது எல்லாவிதமான பாவங்களுக்கும் முதற்காரணியாக இருப்பதால் அதைத் தீண்டாதீர்கள் என்று விலக்கப்பட்டுள்ளது. இந்து மதத்தவர்களும் "குடி கெடுக்கும் குடி" என்று அதைக் குடிக்கக்கூடாது என்கிறது.

**அல்-ஹாஜ் எம்.எஸ்.எம். ராஸீக்,**
**நாபாவெலை**

பௌத்த மதமும் அவர்கள் வணங்கும் நேரங்களில் காலை, மாலையில் "சுராமேரே மஜ்ஜபமா தஸ்டானா வேரமணி சிக்காபதம் சமாதியாமி" மதுவைக் கடுகளவேனும் தீண்டமாட்டேன் என்று சத்தியம் செய்கிறார்கள். அப்படி என்றால் இது பௌத்த நாடு, பௌத்த அரசாங்கம், பௌத்தர்கள் 70 வீதத்திற்கு மேல் வாழும் நாடு அப்படி இருந்தும் ஏன் மதுபானம் உற்பத்தி செய்ய வேண்டும்? இறக்குமதி செய்ய வேண்டும்? ஏன் எல்லா போதைதரக்கூடிய மது வகைகளுக்கும் கடும் தண்டனை விதித்து தடைசெய்யமுடியவில்லை. மதுவைக் கடுகளவேனும் தீண்டமாட்டோம் என்பவர்கள் ஏன் மதுவை உற்பத்தி செய்கிறார்கள்.

இஸ்லாத்தைப் பொறுத்தவகையில் மது உற்பத்தி செய்தாலும், எடுத்துச் சென்றாலும், விற்பனை செய்தாலும், அதற்கு உதவி செய்தாலும் குடித்ததிற்குச் சமமென்று கூறுகிறது. ஆகையால் முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் மதுவுடன் தொடர்பில்லாமல் இருப்பது இஸ்லாத்தில் போதிக்கப்படும் மது சம்பந்தமான விபரீதங்களை உணர்ந்து நடப்பதாலாகும்.

மதுவை முற்றாக ஒழித்து, கள்ளச் சாராயங்களும், அபின், கஞ்சா, தூள் போன்ற சகல விதமான மது மற்றும் சிகரட் போன்றவைகளையும் தடை செய்தால் மனிதன் மனிதனாக வழி பிறக்கும். மதுவை உற்பத்தி செய்து கொண்டு, ஏனைய மது வகைகளுக்கு கடும் தண்டனை கொடுக்காமல், சிகரட் உற்பத்தியை தடை செய்யாமல் இப்படியே தொடர்ந்து செயல்பட்டால் நிச்சயம் நாடு அழிவுப்பாதையில் இருந்து விடுபடவே முடியாது என்பதை அரசாங்கங்கள் உணருமா?

எமது நாட்டில் எதை எடுத்துக் கொண்டாலும் அதில் சூது கலந்துள்ளதைக் காணலாம். அபிவிருத்தி லொத்தர், சனிதா வாஸனா, மஹஜன சம்பத, ஆரோக்கிய சாலை சுவீப், சுரண்டும் சுவீப்கள் போன்று இன்னும் எத்தனையோ லொத்தர்கள், இதன் மூலம் பல இலட்சம் பேர் சரியான தொழில் செய்யாமல், சோம்பேறியாக இருந்து கொண்டு சுவீப்பில் நம்பிக்கை வைத்து ஏழையாகவும், ஏமாளியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், பல இலட்சம் பேர் ஏமாந்து, ஒரு சில பேர் பணக்காரர்கள் ஆகிறார்கள். அதிலும் சிலரது வாழ்க்கை ஆபத்தாக முடிந்த நேரங்களும் உண்டு. நாட்டில் உள்ள சகல லொத்தர்களையும் தடைசெய்து தொழில் வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்தால் மக்கள் பிரச்சினை இல்லாமல் வாழ வழி பிறக்கும்.

இன்று முஸ்லிம்களின் பொருளாதாரத்தை நசுக்க சகலவிதமான சூழ்ச்சிகளும் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. முஸ்லிம் தலைவர்கள், கல்விமான்கள், புத்தி ஜீவிகள் அரசாங்கத்தையோ, காபிர்களின் உதவியையோ எதிர்பாராமல், வருங்காலத்தில் முஸ்லிம்களுக்குப் பிரச்சினைகள் இல்லாமல் தொழில், உத்தியோகம், வியாபாரம், அரசியல், மதக்கோட்பாடுகள் போன்றவைகளை சீராக அமைத்துக்கொள்ள எல்லோரும் கலந்து ஆலோசனை செய்து எதிர்காலம் நல்ல முறையில் அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து
நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்
தொடர்புக்கு
விளம்பர முகாமையாளர்
முஸ்லிம் குரல்
181/1 Maligakanda Road
(White Park) - Colombo 10 - Phone : 0777 389127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு முஸ்லிம்களின் கல்வி நிலை சிந்திக்க வேண்டிய சில கருத்துக்கள்

தலை நகரத்து முஸ்லிம்கள் மேலெழுந்த பார்வைக்கு, வளத்தோடும், நலத்தோடும் வாழ்பவர்களாகவே தோற்றமளிப்பர். ஆனால் உண்மைநிலை அதுவல்ல. பொதுவாகவே கொழும்பு முஸ்லிம்கள் ஆடம்பர - "ஜிகினி தர்பார்" வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்கள் என்பதால் அப்படி எண்ணவும், எடைபோடவும் வைக்கிறதே தவிர உண்மையில் அன்னவர்களின் வாழ்க்கைத்தரம் மிகத்தாழ்வாகவே உள்ளது என்பதை ஆழ்ந்து சிந்திப்போர் மறுக்கப் போவதில்லை. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம்தான் என்ன?




கல்வியில் கொழும்பு வாழ் முஸ்லிம்கள் ஏனைய மாவட்ட முஸ்லிம்களைவிட மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதே காரணமாகும் என்பதை புரிந்து கொள்ள முடியும். கொழும்பு நகரில் குறிப்பிட்டுச் செல்லும்படியாக, கல்வி சாதனை புரியும் ஒரு முஸ்லிம் பள்ளிக்கூடத்தையேனும் தொட்டுக்காட்ட முடியாதிருப்பது இதனாலேயாகும்.

கொழும்பு மாவட்டம் கல்விக்கான வளங்கள் நிறைந்த முதன்மை மாவட்டமாகும். இந்த கல்வி வளங்களைப் பயன்படுத்தி, ஏனைய இனத்தாரின் பாடசாலைகள்-வித்தியாலயங்கள் எல்லாம் முன்னேறும்போது, நம் முஸ்லிம் பாடசாலைகள் மட்டும் முன்னேறாமல் இருப்பதுஏன்? முஸ்லிம் எம்பி மார்களும், அமைச்சர்களும் தத்தம் காலங்களில் கொழும்பு முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கென சேவையாற்றவே செய்கின்றனர். அப்படியிருந்தும் கல்வித்தரம் உயரா தது ஏன்?

அவ்வப்போது கல்வி தொடர்பான மாநாடுகளும், கருத்தரங்குகளும், இலவச போதனை வகுப்புகளும் கொழும்பு முஸ்லிம்களைத் தொட்டு, தலைநகரில் நடைபெற்று வரத்தான் செய்கின்றன; தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவே செய்கின்றன. இருந்தும், கல்வித்தரம் கூடவோ, சாதனை நோக்கி நகரவோ இல்லை இது ஏன்?

இந்தக் கேள்விக்கு விடை கலந்த விளக்கம் பெற சமீபத்தில் மாளிகாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையத்தில், கொழும்பு முஸ்லிம்களின் கல்வித் துறையுடன் சம்பந்தப்பட்ட கல்வி ஈர்ப்பினர்கள் பங்கேற்ற கருத்தரங்கொன்று நடந்தது. அதில் வழமைபோன்று ஒருவரையொருவர் குறைகூறும் விதமாக கருத்துக்கள் பொதுவில் சபைப்படுத்தப்பட்டாலும், ஒருவர் கூறிய கருத்துக்கள் முல்லாவின் சிந்தனையைத் தொட்டுத்தடவின.

கொழும்பு, வாழைத்தோட்டம், அல் மஸ்ஜிதுன் நஜ்மி ஜும்ஆப் பள்ளிவாயலின் தர்மகர்த்தாக்களில் ஒருவரான அல்ஹாஜ் எம். பிரோஸ்தீன் என்பவரே, சமுதாயம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய பிரஸ்தான கருத்துக்களை சிந்தனைக்கு விருந்தாகப் படைத்தவராவார். முல்லா அந்த கருத்துக்களை சார்ந்து சில சிந்தனைகளை வாசகர்களுடன் பரிமாறிக் கொள்ள விழைவு கொள்கிறேன். பரிமாறலாமா....?

சன்மார்க்க நெஞ்சங்களே- கொழும்பு நகரில் சுமார் இருபது-இருபத்தைந்து வருடங்களுக்கு முன், எத்தனை பள்ளிவாசல்கள் இருந்தன என்பதை அசைபோட்டுப் பாருங்கள் அதே கால கட்டத்தில் இதே கொழும்பில் எத்தனை முஸ்லிம் பாடசாலைகள் இருந்தன என்பதையும் எண்ணிப் பாருங்கள்.

இன்றைய நிலை என்ன....? அதாவது 20-25 வருடங்கள் கடந்து சென்று விட்ட இன்றைய சூழலில், நம் கொழும்பு மாநகரில் எத்தனை பள்ளிவாயல்கள் இருக்கின்றன? எத்தனை முஸ்லிம் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன? பள்ளிவாசல்கள் - பள்ளிக்கூடங்கள் இரண்டையும் ஒப்பிட்டுப்பார்க்கையில், பல பள்ளிவாசல்கள் புதிதாகத் தோன்றியுள்ள மகிழ்ச்சியும், முஸ்லிம் பாடசாலைகள் ஒன்றுதானும் கூடாமல் அதேயளவு முஸ்லிம் பாடசாலைகளே இருந்து வரும் வீழ்ச்சியும் கவலைக்குரிய ஒன்றே.

பெருகியுள்ள இறையில்லங்களில் பல, கட்டடப் புனர் நிர்மாணஞ் செய்யப்பட்டு, ஜும்ஆப் பள்ளிவாசல்களாக கம்பீரமாக எழுந்து நிற்கும் எழிற்கோலங்களில், " ஹாதா மின் ப.ஃழ்லி ரப்பி..." (இது இறைவன் அளித்த நன்கொடை) என வாய்விட்டுச் சொல்லிய வண்ணம் தன்னை மறக்கும் சன்மார்க்க சகோதரர்களை காண்கிறோம். அதே வேளை-நாளிலும், பொழுதிலும் துவேஷம் துளிர்விடத் துவங்கி, வளர்ந்து விட்ட நிலையில் சட்டம் சம்மதம் தெரிவித்தாலும், நடைமுறையில் புதிய பள்ளிவாசல்கள், புதிய முஸ்லிம் பாடசாலைகள் உருவாக்க முடியுமா? என்ற வினா, நீண்டகாலமாக நிமிர முடியாமல் வளைந்தேயிருக்கிறது. அதனால் ஏற்கனவே இருக்கின்ற-அதாவது முன்னமே கட்டப்பட்ட பள்ளிவாசல்கள், தேவைகருதி விஸ்தீரணம் பெறும் நோக்கில், கட்டடப் புனர்நிர்மாணம் பெற்று அகலப்படுத்தப் படாமல் மாடிகளாக உயர்ந்து எழுந்துள்ளன என்பதுவும் இங்கு சிந்திக்கப்படவேண்டிய நடைமுறை உண்மையாகும்.

முஸ்லிம் பாடசாலைகளோ... அந்தோ பரிதாபம் எனச் சொல்லுமாப்போல் எதோ ஓரிரு இடங்களில் அரசின் கருணையினால் ஓரிரு கட்டிடங்கள் எழுந்துள்ளனவே தவிர, "ஆஹோ.... ஓஹோ" எனச் சொல்லும் நிலையில், எந்தக் கட்டடமும் முஸ்லிம் பாடசாலை வளவுகளில் தோன்றவில்லை என்பதும் மறுக்க முடியாத யதார்த்தமாகும்.

கடந்த 20-25 வருடங்களில் நலைநகரில் புதிய மசூதிகளாக கட்டடப் புனர் நிர்மாணம் கண்ட பல பள்ளிவாசல்களுக்கு, கட்டடத் தேவைகளுக்காக அரசு பணம் கொடுத்து உதவியதா? அல்லது முஸ்லிம் சமய கலாசார அலுவல்களுக்கான திணைக்களம், பள்ளிவாசல் கட்டடப் புனர் நிர்மாணங்களுக்கென விஷேட திட்டங்கள் தீட்டி, பணம் வசூலித்து வழங்கியதா? அரசு தரப்பில் எவ்வித உதவியும் கொழும்பில் எழுந்துள்ள எந்தப் பள்ளிவாசலுக்கும் பெறப்படவில்லை என்பதே சத்திய மொழியாகும்.

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம், ஆண்டுதோறும் நடத்தி வரும் தேசிய மீலாத் விழாவையொட்டி, விழா நடைபெறும் ஊரிலுள்ள பள்ளிவாயல்களுக்கு நிதியுதவி செய்யப்படும் திட்டம், சமீபத்தில் சில வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தமையும், இன்றைய பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் சென்ற யூஎன்.பி. ஆட்சியில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சராக சேவை செய்த காலப்பிரிவில், ஹஜ் முகவர்களிடமிருந்து அறவிட்டு, நாட்டில் இடம்பெற்ற வன்செயலில் பாதிக்கப்பட்ட பள்ளிவாசல்களுக்கு, ஏப்ரல் முதலாம் திகதியை மஸ்ஜித் - மத்ரஸா தினமாகப் பிரகடனஞ் செய்து, பாதிக்கப்பட்ட-படாத பள்ளி வாசல்கள் பலவற்றுக்கு நிதியுதவி அளித்ததையும் முல்லா இவ்விடம் சுட்டிக் காட்டுதல் பொருத்தமாகும்.

இது தவிர கொழும்பு நகரிலுள்ள மஸ்ஜித்கள் கட்டடப் பொலிவுக்கென எவ்வித பண உதவிகளையும் பெறவில்லை. அப்படியானால் இந்த சன்மார்க்கப் பணிகளுக்கு கட்டடப் புனர் நிர்மாணக் காரியங்களுக்கு பண உதவி செய்தவர்கள் யார்? எவர்? இதற்கான பதில் மிகத் தெளிவானது. பொதுமக்களிடம் நிதி வசூல்-பொது ஸ்தாபனங்களிடம் உதவி அரபுலகில் தொழில் வாய்ப்புப் பெற்று சென்றுள்ள நம் சமுதாய உடன்பிறப்புகள் தமக்கிடையே வசூலித்த பணஉதவி போன்றவற்றின் மூலமாகவே, நம் கொழும்பு மஸ்ஜித்கள் மலர்ச்சி கண்டுள்ளன. இப்போதும் கூட, ஜும்ஆத் தொழுகையை அடுத்து, சில மஸ்ஜித்களின் கட்டடப் பணிகளுக்காக நம்மவர்கள் வேகும் வெய்யிலில் 'சகன்'களையும் அறிவிப்பு அட்டைகளையும் ஏந்தியவாறு வசூல் செய்வதை காண்கிறோம்.

இதிலிருந்து தெரிவதென்ன? மசூதிகளின் கட்டடப் புனர் நிர்மாணப் பணிகளுக்கு- அதன் மூலம் சன்மார்க்கத் தேவைகளுக்கு, அரசினை எதிர்பார்த்து காலத்தைக் கடத்தாமல், சமூகத்தில் வாரி வழங்கும் வள்ளல்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்த்துமாப்போல், சமுதாய வசூல்வழி காரியங்களை முடித்துக் கொண்ட பண்பு புரிகிறதன்றோ?

பள்ளிவாசல் விடயங்களில் நடைமுறையாகும் இப்பண்பு, சரீஆ கட்டாயக் கடமையாக வலியுறுத்தும் கல்வி விடயத்தில்- அதனை கற்பிக்கும் பள்ளிக்கூட விவகாரத்தில் ஏன் காட்டப்படுவதில்லை? இன்றைய கொழும்புவாழ் முஸ்லிம்களின் வருங்காலத்தலைவர்களான மாணவமணிகள், கல்வித்துறையில் பின்தங்கியிருப்பதற்கு அடிப்படை காரணமென்ன? கல்வி வளர்ச்சிக்கான வளங்கள் கொழும்பு மாவட்டத்தில் கொட்டிக் கிடந்தும் அவற்றை நம் முஸ்லிம் வித்தியாலயங்களால் பயன்படுத்தப்பட முடியாமை; அனுபவிக்க இயலாமை.

கூட்டிக் கழித்துப் பார்த்தால், போதிய பொருளாதார அனுசரணை கிடைக்காமையேயாகும். பள்ளிவாசல் விடயங்களுக்கு வாரி வழங்கும் சன்மார்க்க இதயங்கள் பள்ளிக்கூட விடயங்களுக்கு அள்ளிக் கொடுக்காவிட்டாலும், நுள்ளியாவது கொடுப்பதில்லை. இதற்கான காரணம் எதுவாக இருக்கும் என்று யோசிக்கும் போது நம் உலமாக்களாகிய மார்க்க அறிஞர்களையே, பொறுப்பைத் தட்டிக் கழித்த குற்றவாளிகளாக கணிக்க வேண்டியுள்ளது.

ஏறத்தாழ அரை நூற்றாண்டை கடந்து விட்ட, மிம்பர்களில் தமிழ் குத்பா நிகழ்த்தப்படும் பாரம்பரியத்தில், நம் உலமாக்கள் பள்ளிவாசல்கள் பற்றி பிரஸ்தாபித்த அளவிற்கு பள்ளிக்கூடம் பற்றி உச்சரிக்கவில்லை என்றே கூறவேண்டும். "பள்ளிவாசல் கட்டினால் சுவர்க்கத்தில் இன்னின்ன இன்பங்கள் கிடைக்கும்" எனக் கூறும் கத்தீப்மார்கள், "கல்விப் பணியில் ஒரு பாடசாலைக்கு உதவினால், சுவர்க்கத்தில் என்னென்ன இன்பம் கிடைக்கும்" என்பதை வரிசைப்படுத்தி, சபைப்படுத்தி இந்த சமுதாயத்தின் கண்ணோட்டத்தை கல்வியின் பால் திசை திருப்பத் தவறிவிட்டனர் என, அப்பெரியார் சுமத்தும் குற்றச்சாட்டை முல்லாவும் முழுமனசோடு ஏற்றுக் கொள்கிறேன்.

சமுதாயம் எந்தெந்தத் துறைகளில் எல்லாம், பின்னடைவு கண்டுள்ளதோ, அவ்வத்துறைகளின் வளர்ச்சி கருதி, நம் உலமாக்கள் வாராந்த ஜும்ஆ குத்பாக்களில் குறிப்பிடும் பழக்கம் அற்றவர்களாகவே உள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். குறிப்பிட்ட ஒரு விடயம் பற்றி, எல்லா ஜும்ஆ பள்ளிகளிலும் குத்பா உரைகளில் உச்சரிக்கப்பட்டால், அதுவே ஒரு பொதுசன அபிப்பிராயத்தை-குறிப்பிட்ட 'அந்த' விடயத்தின்பால் உருவாக்கி விடுமே! அது சமுதாயத் தெளிவை ஏற்படுத்துமே!

இன்ஷா அல்லாஹ், இனியாவது தேவையான துறைகளைத் தெரிவு செய்து பேசுவோமாக. இந்த சிந்தனைகள், கொழும்பு முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி, முழு சமூகத்துக்கும் பொருந்தும்.

---

## திடீர் தெளபீக் எம்.பி. யின் தொலைபேசி இலக்கம் தேடும் திருமலை மாவட்ட மக்கள்



திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீட அங்கத்தவரும், திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும், ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான டாக்டர். கே.எம். திடீர் தௌபீக்கின் தொலைபேசி இலக்கம் இப்போதெல்லாம் யாருக்கும் தெரியாது. இருவரைத் தவிர.
ஒருவர் கிண்ணியாவின் செயலாளராகச் செயற்படும் அவரது மனைவியின் சகோதரன், மற்றவர் மூதூரின் செயலாளராக செயற்படும் அவரது சகோதரன்.

தொலைபேசி இலக்கம் அவ்வளவு சிதம்பர இரகசியமாக இருப்பதற்குக் காரணம் மக்கள் சேவையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட?! மக்கள் பிரதிநிதியை மக்கள் தேவையில்லாமல் பயன்படுத்தி விடுவார்கள் என்பதனால்தான் என்று கூறப்படுகிறது.

தொலைபேசி இலக்கம் தேடி தொலைபேசி விபரக்கொத்து-2002/2003 இல் புரட்டினால் வரும் 0262236391 உடன்தொடர்பு கொண்டால், 'எம்.பி. கொழும்புக்குச் சென்றுவிட்டார்' தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியுமா என்று கேட்டால், ஆம் அவரது மூதூர் செயலாளரிடம் 0262238241 உடன் அல்லது கிண்ணியா செயலாளரிடம் 0262238207 உடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுங்கள் என்பதாக பதில்வரும்.

அவ் இலக்கங்களில் தொடர்பு கொண்டால் 'சேர் இல்லை அவர் இப்போதுதான் 'கொன்ரக்ட்' வேலைகளைப் பார்வையிடச் சென்றுள்ளார்.' 'அவர் பொருட்கள் வாங்கிவர கொழும்புக்குச் சென்றுள்ளார்' என்றவாறு பதில்கள் வரும். அவசரத் தேவைக்கு செயலாளர்களையோ, பாராளுமன்ற உறுப்பினரையே பிடிக்க முடியாது, அவர்கள் இப்போது வெரி பிசி.

இவர்கள் இப்போதெல்லாம் இவ்வளவு பிசியாக இருக்கக் காரணம், இப்போது கிழக்கு அபிவிருத்திக்கான நிதி திருகோணமலை மாவட்டத்திற்கும் வரத் தொடங்கிவிட்டதும், எம்.பியின் குடும்பத்தவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த சகல ஒப்பந்த வேலைகளும் இவர்கள் ஊடாகவே நடைபெறுவதுமாகும்.

பதச்சோறாக ரூபா 8 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் மாவட்டப் பாடசாலைகளின் அலுவலகத் தளபாடங்கள் கொள்வனவு செய்ய கிண்ணியா செயலாளர், ரூபா 5 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பினாமிகளை வைத்து மூதூரிலுள்ள வீதிகளை புனரமைப்புச் செய்ய மூதூர் செயலாளர். இத்தனைக்கும் மேலாக அவரது வெற்றிக்கு இரவு பகலாக சாப்பாடு, தூக்கம், குரல் எல்லாவற்றையும் தியாகம் செய்து உழைத்த எம்.பி.யின் அனைத்து தேவைகளுக்குமான செயலாளர் மாப்பிள்ளை...... அவருக்கு மூதூர் ஜாயா வித்தியாலயத்திற்கான ரூபா 15 இலட்சம் பெறுமதியான தளமாடிக் கட்டிடத்தின் ஒப்பந்தம் எனத்தொடர்கிறது.

இவர்கள்தானா? முஸ்லிம்களுக்கு தனி அலகு பெற்றுத்தரப் போகிறவர்கள். காலம் நிச்சயம் பதில் சொல்லும்.

இப்படிக்கு
ஓட்டுப்போட்டவர்கள்

---

## முஸ்லிம் தேச ஆவணப்படுத்தலுக்கும், நஷ்டஈட்டுக் கோரிக்கைகளுக்குமான மாதிரி விண்ணப்பப் படிவம்.

முஸ்லிம் தேச
ஆவணக் காப்பகம்
181/1, Maligakanda Road,
(White Park)
Colombo - 10
Phone : 0777 389127

(A) 01. விண்ணப்பதாரியின் பெயர் :..............................

02. முகவரி :..............................

03. அடையாள அட்டை இல :.............................. 04. தொலை பேசி இல :..............................

05. விண்ணப்பதாரிக்கும் (மௌத்தானவருக்கும் / காணாமல் போனவருக்கும் / அங்கவீனமுற்றவருக்கும்) இடையிலான உறவு முறை :..............................

மௌத்தானவர்கள் / காணாமல் போனவர்கள் / அங்கவீனமுற்றவர்கள் பற்றிய விபரம் :

(B) 01. முழுப் பெயரும் முகவரியும், சம்பவம் இடம்பெற்ற, இடமும், திகதியும்:

02. கிராம சேவையாளர் பிரிவு :.............................. 03. தேர்தல் தொகுதி :..............................

04. பிரதேச செயலாளர் பிரிவு :.............................. 05. மாவட்டம் :..............................

06. பிறந்த திகதி : .............................. 07. அடையாள அட்டை இல..............................

08. சம்பவம் யாரால் நிகழ்த்தப்பட்டது :..............................

09. மரண அத்தாட்சிப்பத்திர இல :..............................

10. மரண அத்தாட்சிப்பத்திரம் இல்லையாயின் காரணம் :..............................

11. அங்கவீனமாயின் அங்கவீனத்தின் தன்மை :..............................

12. காணாமல் போனவரின் தற்போதைய நிலவரம் :..............................

13. கல்வித் தகைமை :..............................

14. தங்கிருப்போர் தொகை : .............................. ஆண்:.................. பெண்:..................

15. இதுவரையில் பெற்றுக் கொண்ட நஷ்டஈட்டுத் தொகை ரூபாவில் :..............................

16. உருவ புகைப்படப் பிரதி ஒன்றையும் மரண அத்தாட்சிப்பத்திரத்தின் போட்டோ பிரதி ஒன்றையும் இணைக்கவும்.

..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம். திகதி:..................

---

## அனைத்திலும்


01. அனைத்திலும் நல்லுபதேசி மனச் சாட்சியாகும்
02. அனைத்திலும் அதிகக் கஷ்டம் தரக்கூடியது கடனேயாகும்.
03. அனைத்திலும் பெரும்பாக்கியம், சந்தோஷமும், நோயற்ற வாழ்வுமாகும்.
04. அனைத்திலும் நல்லது உள்ளதைக் கொண்டு திருப்தி கொள்வதேயாகும்.
05. அனைத்திலும் ஆன்மாவிற்கு சாந்தியும், புத்துயிரும் அளிப்பது இறை நாமத்தை திக்ர் செய்வதேயா்கும்.
06. அனைத்திலும் நற்பெயர் தருவது கொடை கொடுப்பதேயாகும்.
07. அனைத்திலும் அழியாப் பெருஞ் செல்வம் கல்வியேயாகும்.
08. அனைத்திலும் பெரிய சக்தி வாய்ந்தது இனிய பேச்சும் இரக்கமும் ஆகும்.
09. அனைவரிலும் பெரிய வீரன் கோபத்தை அடக்குபவனேயாகும்.
10. அனைவரிலும் மோசக்காரன் நயவஞ்சகனே.
11. அனைவரிலும் அதிகக் கெட்டவன் புறம் பேசுபவனேயாகும்.

## இந்து சமுத்திரத்தைப் பற்றி அறிந்து கொள்வோம்

உலகிலுள்ள 05 பிரதான சமுத்திரங்களுள் பசுபிக் சமுத்திரமே மிகவும் பெரியதாகும். மூன்றாவது இடத்தை இந்து சமுத்திரம் வகிக்கிறது. இது அமெரிக்கக் கண்டத்தை போன்று ஐந்து மடங்கு பெரியதாகும்.

இந்து சமுத்திரத்தின் நீளம் 6000 மைல்களாகவும், அகலம் 6500 மைல்களுமாகும்.

அந்தமான் கடல், அரபிக்கடல், வங்காள விரிகுடா, கல்ப் கடல், ஜாவா தீவுகள், மொசம்பிக் ஓடை, செங்கடல், மலாக்கா, ரீமோர் கடல் ஆகியவை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளன. இந்து சமுத்திரத்தின் அதி கூடிய ஆழம் 24.000 அடிகளாகும். சாதாரண ஆழம் 16000. அடிகளாகும்.




உலகின் மசகு எண்ணெய் உற்பத்தியில் 40% சதவீதமானவை இந்து சமுத்திரத்திலிருந்தே பெறப்படுகிறது. சென்னை, கொழும்பு, டர்பன், ஜகர்த்தா, கல்கத்தா, மெல்பர்ன், ரிசர்ட், டும்பியா ஆகியவை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள துறைமுகப் பட்டினங்களாகும்.

ஜப்பான், தென்கொரியா, தாய்வான், ரஷ்யா ஆகியவை இந்து சமுத்திரத்தில் கடற்தொழில்களில் பாரியளவில் ஈடுபடுகின்ற நாடுகளாகும்.

## புத்தகங்கள்

01. ஓரஞ்சு புத்தகம் - நெதர்லாந்து அரசின் அலுவலக வெளியீடுகள்.
02. நீலப் புத்தகம் - பிரிட்டிஷ் அரசின் அலுவலக அறிக்கை.
03. பச்சைப் புத்தகம் - இத்தாலி மற்றும் பெர்சிய நாட்டின் அலுவலக வெளியீடுகள்.
04. மஞ்சள் புத்தகம் - பிரெஞ்சு அலுவலகப் புத்தகம்.
05. சாம்பல் புத்தகம் - ஜப்பான், பெல்ஜிய அரசுகளின் அலுவலக அறிக்கைகள்.
06. வெள்ளைப் புத்தகம் - ஜேர்மனி, போர்த்துக்கல், சீனா ஆகிய நாடுகளின் அலுவலக அறிக்கை வெளியீடுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு பிரிப்பு பிழை என்றால் தமிழ் முஸ்லிம் இனப்பிரிவுகள் சரியா?

**அரசியலில் : கட்சி அரசியல்**

1960களில் வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் பலர் தமிழ் அரசுக் கட்சியில் சேர்ந்து தேர்தலில் போட்டி போட்டது மட்டுமல்லாமல் அக்கட்சியில் போட்டி போட்ட பல தமிழ் அன்பர்கள் முஸ்லிம்களின் வாக்குகளினாலேயே எம்.பி.யும் ஆனார்கள். அவர்களில் சிலரை குறிப்பிடுதல் பொருத்தம். மன்னாரில்: வி.ஏ. அழகக்கோன். வன்னியில்: எக்ஸ்.எம். செல்லத்தம்பு; திருகோணமலையில் ராஜவரோதயம் கற்குடாவில் பி. மாணிக்க வாசகம்; பட்டிருப்பில் ஆர். ராசமாணிக்கம்/ எதிர்மன்னசிங்கம் போன்றோர் ஆவர். அக்காலத்தில் தமிழர்களை முஸ்லிம்கள் நம்பினர். அதே கட்சியானது தமிழர்களுக்காக மட்டும் குரல் கொடுக்கவும். தமிழர்களின் விடுதலையை முன்நிறுத்தியும் தமிழர் விடுதலைக் கூட்டணியானது. இச்செயற்பாடு காரணமாகத்தான் 'தமிழ்' என்பது தமிழர்களாக மாற்றப்பட்டு இனச்சாயம் பூசப்பட்டது. இப்போதே தமிழ்-முஸ்லிம் உறவில் நம்பகத்தன்மை கீழிறங்கி விரிசல் ஏற்படலாகியது.

**- மருதமுனை மூாஹிர் -**

**ஆயுதப் போராட்டம் :**

தமிழீழமாக வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கில் புலிகளுடன் சேர்ந்து விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தியாகங்கள் பல செய்த: அமைப்புக்கு விசுவாசமான பல இளைஞர்கள் சண்டையில் தங்கள் உயிரையும் துறந்தனர். புலிகளின் தலைமை என்ன நினைத்ததோ தெரியாது. புலிகளின்அமைப்பில் இருந்த ஆயுதப் பயிற்சி பெற்ற அனைத்து முஸ்லிம் இளைஞர்களையும் இனச் சுத்திகரிப்பின்மூலம் கொடூரமாகக்கொலை செய்தது. (மறைமுகமாக) தமிழர் விடுதலைக்கூட்டணிபோல் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாறும் தனித் தமிழ் ஆனது.

**நில புலம் : (வதிவிடம்)**

வடக்கில் பாரம்பரியமாக தமிழர்களுடன் வாஞ்சையுடன் வாழ்ந்த முஸ்லிம் மக்களை இரண்டு மணித்தியாலயத்தினுள் யாழ் மண்ணைவிட்டு வெளியேறுமாறு புலிகள் கட்டளை இட்டதன் காரணம்: கிழக்கில் இருந்து வடக்கிற்குச் சென்ற மட்டுப் பொறுப்பாளர் கூறிய இனக்குரோதக் கருத்தான "கிழக்கில் தமிழர்கள் முஸ்லிம்களால் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தமிழ் யுவதிகள் முஸ்லிம் காமுகர்களால் கற்பழிக்கப்படுகின்றனர். இவர்கள் (முஸ்லிம்கள்) எப்படி இங்கு வாழ முடியும்" என்பதாகும். உண்மையில் யாரால் தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர் என்பது மட்டுப் பொறுப்பாளருக்குத் தெரியாமல் இல்லை. 'எப்படி ஊதினால் ஆடுவர்' எனும் கபட நாடகமும் புலிகளுக்குக் கை வந்த கலை. முடிவு: வட மாகாணம் சுத்திகரிக்கப்பட்டது. தொடர்ந்து கிழக்குமாகாணங்களில் சில முஸ்லிம் கிராம மக்களை அக்கிராமங்களை விட்டகலும் படியாக எச்சரிக்கைகளை துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும், பொது அறிவித்தல் மூலமாகவும் புலிகள் செய்தனர்.

**நிர்வாகத்தில் :**

வடக்கு கிழக்கு மாகாண சபை ஆட்சியின் போதும் ஆட்சிக்கலைப்பின் பின்பு ஏற்படுத்தப்பட்ட அதிகாரிகளின் நிருவாகத்தின் கீழும் வேலை வாய்ப்பில் முஸ்லிம்களுக்கான இன விகிதாசாரம் பேணப்பட்டதா? அல்லது "முஸ்லிம்களின் சில உரிமைகள் மறுக்கப்படுகின்றது" என எந்த ஒரு தமிழ்த்தலைவராவது குரல் கொடுத்தனரா? மாறாக முஸ்லிம்களுக்கான நன்மைகள் அரசால் வழங்கப்படப் போகின்றது என்றால் தமிழர் மகா சபை அதனை எதிர்த்து அறிக்கை விடுவது. தவிரவும் வடக்கு கிழக்கில் ஒவ்வோர் முக்கிய துறைகளிலும் இரு பிரிவுகள்: கல்வி; சுகாதாரம்; நிருவாகம் போதாக்குறைக்கு கூட்டுறவாக இருக்க வேண்டிய கூட்டுறவுச் சங்கத்தில் கூடப்பிரிவு. இப்பிரிவினைகளை ஏற்படுத்தியவர்கள் யார்?

இன ஒற்றுமை பற்றியும், பிரிவு ஏற்படக்கூடாது எனக் கொக்கரிப்பவர்கள் இச் செயற்பாடுகளை ஏன் கண்டிக்கவில்லை. உதட்டளவிலும்: பத்திரிகை அறிக்கைகள் மூலமும் இன உறவுகளை வெளிக்காட்டி, திரை மறைவில் இன உறவுகளுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் யார் என்பதை முஸ்லிம் மக்கள் அறியாமலில்லை. இவ்வாறான இனக்குரோதச் செயல்களுக்கெல்லாம் ஆணி வேராக இருந்த அரசியல் வாதிகளும் புலிகளும் கூறும் கூற்றுக்களான "முஸ்லிம்களுக்கான உரிமைகள் விடயத்தில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அவர்களுக்கான தேவைகள் கொடுக்க வேண்டியகாலம் வந்தால் நாம் வழங்கியே தீருவோம்" என்பதானது தேவ வாக்கல்ல முஸ்லிம்களுக்கு. இது இவ்வாறிருக்க கிழக்கு பிரிக்கப்படல் வேண்டும் என்ற சலசலப்பு அண்மைக்காலமாக அரசியலில் சில அரசியல் தலைவர்களால் கூறப்படும் கோரிக்கை. இக் கோரிக்கையானது தமிழ் அரசியல் தலைவர்களிடையேயும், புலிகளின் பொறுப்பாளர்களிடையேயும் பலமான எதிர்ப்பைத் தோற்றி இருக்கின்றது. இந்தக் கோரிக்கைக்கு எதிரானவர்களே; வடக்கு கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் செயற்பாடுகள் இனத்துவமாக இரு பிரிவுகளில் நடைபெற முன்நிற்பவர்கள். இந்நடைமுறையை தேசிய ரீதியாக மேற்கொள்ள வேணடும் என அகில இலங்கை இந்து வாலிபர் சங்கச் செயலாளர் கோரிக்கை விடுத்திருக்கின்றார். வடக்கு கிழக்கு பிரிக்கப்படக் கூடாது என்ற கோரிக்கை தவறானது என்றால் மேற்படி பொதுச் செயலாளரின் கூற்று நியாயமானதா? முஸ்லிம்கள் தமிழர்களை விட்டு விலகி வாழ வேண்டும் என ஒருபோதும் எண்ணியது கிடையாது. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் தமிழர்களைப் பிரிந்து செல்லத் தூபமிட்டவர்கள் தமிழ் அரசியல் சக்திகளே. தோழமையுடன் வாழ வேண்டும் புலிகள் நம்மை அரவணைத்தே செல்வர் என எதிர்பார்த்து மாவீரர் தின உரையை செவிமடுத்த முஸ்லிம்கள் இலவுகாத்த கிளிகளாயினர். முஸ்லிம்கள்பற்றி இது வரை எந்தக் கருத்தும் தெரிவித்திருக்காத தலைமையை நம்புவதா அல்லது கருணாவின் கூற்றினை நிராகரிப்பதா? எனப் பலவிதமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள்.

# முஸ்லிம் கிராமத்தில் அந்தோனியார் சிலுவையும் அதனை சட்டவிரோதமாக ஆலயமாக்குகையில் ஏற்பட்ட கலவரமும்

நூறுவீத முஸ்லிம்களைக் கொண்ட எருக்கலம்பிட்டி பிரதேச சபை பகுதிக்குள் அமைந்துள்ள ஊசிமுக்கான் துறை எனும் இடத்தில் 1984ம் ஆண்டு பள்ளிமுனை பிரதேச வாசிகளால் அவர்கள் ஊரில் இருந்து கிட்டத்தட்ட 4மைல் தொலைவில் உள்ள இப்பகுதியில் அந்தோனியர் சிலுவை ஒன்று வைக்கப்பட்டது. அன்றிலிருந்து இரு கிராமத்தவருக்கும் இப்பிரச்சினை இருந்தே வந்தது. இருப்பினும் இவர்கள் தொழிலுக்குச் செல்லும் வேளையில் அவ்விடத்திற்குச் சென்று அந்தோனியாரை எவ்வித பிரச்சினையுமின்றி தரிசித்தே வந்தனர். இவ்வாறு நிலமை இருந்து கொண்டிருந்த வேளையில் சில நாட்களுக்கு முன்பு இரவோடு இரவாக சட்ட அனுமதி எதுவுமின்றி அச்சிலுவையை 15-20 பேர்வரை நின்று வணங்கக்கூடிய அளவில் ஆலயம் ஆக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. ஆலயம் எங்கு அமைப்பதானாலும் மாவட்ட ஆயர். இக்கிராம பங்குத்தந்தை என்பவர்களின் அங்கீகாரத்துடன்தான் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை அறிந்த எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஒருசிலர் ஊரில் யாவருக்கும் தெரியாமல் முன்பு இருந்த அச்சிலுவையைத் தவிர்த்து ஆலயம் ஆக்குவதற்காக கட்டப்பட்ட சுவர்களை உடைத்து விட்டார்கள். இதுதான் நடந்த சம்பவம். இதனைத்தான் திரிவு படுத்தி அந்தோனியார் ஆலயத்தை முஸ்லிம்கள் உடைத்து விட்டார்கள் என்று முழுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் அபாண்டமாக பழியை சுமத்தியது மட்டுமல்லாமல் ஒரு சில பத்திரிகைகள் கூட தமது பத்திரிகை தர்மத்தேயே மறந்து ஒருபக்கச் சார்பாக செய்தியை எழுதியுள்ளார்கள். இதன் மூலம் மன்னார் மாவட்ட முஸ்லிம்கள் மனதை பெரிதும் புண்படுத்தியும் உள்ளார்கள். இதன் பிறகு பள்ளிமுனையைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் யாவரும் எருக்கலம்பிட்டி கிராமத்திற்கு சென்று ஒரு சில தனக்கு ஆதரவான பொலிஸ் காரர்களின் உதவியுடன் அக்கிராம வாசிகளுடன் அடிதடியில் ஈடுபட்டனர். இதனால் இரு முஸ்லிம்களும். ஒரு கிறிஸ்தவரும் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதன் பிறகு முழு மொத்த மன்னார் மாவட்ட கிறிஸ்தவர்களும் நகரின் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் மூலம் ஊரில் போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டு. பெரிதும் பதட்டமும். பீதியும் காணப்பட்டது. சோனகர்களின் கடைகள் பூட்டப்பட வேண்டுமென்று ஒலி பெருக்கியில் அறிவித்தார்கள். இதன் பிறகு கூட்டம் கூட்டமாக எமது முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தும் வார்த்தைகளை எல்லையின்றிப் பாவித்ததுடன், ஒவ்வொரு முஸ்லிமின் கடைகடையாகச் சென்று நீ சோனகரா அல்லது இது சோனகக் கடையா என்று கேட்டுக் கேட்டு எல்லா முஸ்லிம்களின் கடைகளையும் பயமுறுத்தி மூடவைத்தார்கள். இதில் முஸ்லிம்களின் கடைகளை மூட வைத்ததில் தமிழ் பொலிஸ்காரர்களின் பங்கு பிரதானமானது. அப்பொலிஸ் காரர்கள்கூட ஒரு பக்கச் சார்பாக முஸ்லிம்களுக்கு எதிராக நடந்து கொண்ட விதத்தை அவதானித்த முஸ்லிம்கள் பயத்துடன் வாயடைத்துப்போய் நின்றனர்.

இதன் பிறகு தமிழர்களின் கடைகளும் பூட்டப்பட்டது. எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த ஒருசிலர் பிரச்சினையில் ஈடுபட, முழு முஸ்லிம்களையும் தரக்குறைவாக பேசியதுடன், முஸ்லிம்கள் எல்லோருக்குமாக செயற்பட்டு இனக்கலவரமாக அதை மாற்ற முற்பட்டது எந்த வகையில் நியாயம் என்று சமையப் பெரியார்கள். பராளுமன்ற உறுப்பினர்கள். அரச அதிகாரிகள். தமிழீழ விடுதலைப்புலிகள் ஒருவர்கூட தட்டிக்கேட்கவும் இல்லை அதை தவிர்க்க முற்படவுமில்லை. மாறாக பிரச்சினையைக் கட்டுப்படுத்தி சமாதானமாக போகவேண்டிய பள்ளிமுனையைச் சேர்ந்த பங்கு தந்தையே பிரச்சினைக்கு தலைமை வகித்திருக்கிறார் என்பதுதான் வேதனை தரும் விடயமாக காணப்படுகிறது. இதில் அமைச்சர் நூர்தீன் மசூர் பாராளுமன்ற உறுப்பினர்களான, செல்வம் அடைக்கலநாதன். இராசந்தி ஆனந்தன். மன்னார் மாவட்டசெயலாளர். இராணுவ உயர் அதிகாரிகள். எருக்கலம் பிட்டியைச் சேர்ந்த ஐயர். பள்ளிமடுவைச் சேர்ந்த ஐயர். மன்னார் மறை மாவட்ட ஆயர். எல்லோரும் கலந்து கொண்ட கலந்துயைாடல் ஒன்று மன்னார் கச்சேரியில் நடைபெற்று, இரவு 10.00 மணியளவில் சமாதானமாக முடிவுற்றது. இதன் பிறகு சாலை மறியலில் ஈடுபட்ட பள்ளிமுனையைச் சேர்ந்தவர்கள் கலைந்து தனது, ஊருக்கு செல்லுகையில் இடையில் உள்ள முஸ்லிம் கிராமமான உப்புக்குளத்தை கடந்து செல்லும் வேளையில் அங்கு பயத்துடன் குளுமியிருந்த முஸ்லீம்களைப் பார்த்து முழுமொத்த முஸ்லிம் சமூகத்தையே கேவலப்படுத்தும் விதமாக மிகமிக மோசமான வார்த்தைகளால் கூக்குரலிட்டுச் சென்றார்கள். இதனைக் கேட்ட உப்புக்குள ஊர் முஸ்லிம்கள் கால காலமாக ஒன்றாக வாழ்ந்த கிறிஸ்தவ நண்பர்களா நமது மனதை புண்படுத்திவிட்டு போகிறார்கள் என்று வேதனை கலந்த ஆச்சரியத்துடன். நோக்குகின்றார்கள். அவ்வேளையில் இப்பகுதி பிரதான முஸ்லிம் பள்ளி வாயல்களுக்கும் முஸ்லிம் கிராமங்களுக்கும் இராணுவமும். பொலிஸும் காவலில் ஈடுபட்டு இன்று வரை பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

எச்.எம்.எம். சிஜாவ்
உப்புக்குளம்

## இ ன் று

நீ உயிர் தரித்திருக்கின்றாய். ஆயினும் நீ உயிர் வாழ்வதில்லை. (You Exsist, but you don't Live)

ஏனெனில் நீ இன்றில் இருப்பதில்லை. ஒன்றில் நேற்றின் கவலையில் நெக்குருகுகிறாய். அன்றில் நாளையின் பயத்தில் நடுங்குகிறாய்.

நேற்றின் கவலைகளும். நாளையின் பயங்களும் உன் இன்றின் மகிழ்ச்சியை இல்லாமலாக்கி விட்டன.

ஆதலால் உயிர்த்துடிப்பு மிகுந்த இன்றை நீ தரிசிக்கத் தவறி விடுகிறாய்.

நேற்றின் பிணங்களை இனியும் சுமந்து திரியாதே-புதைத்து விடு. நாளையின் பேய்களைக் கண்டு இனியும் அஞ்சி நடுங்காதே-விரட்டிவிடு. கன்னிமை கழியாத இன்று உனக்காகக் காத்துக் கிடக்கிறது-அனுபவி. அதனை அரவணைத்து ஆலிங்கனம் செய்து ஆனந்தம் கொள்.

நேற்றயக் கிண்ணம் உடைந்துவிட்டது. நாளையக் கிண்ணம் கிட்டுமென்று நம்பிக்கை கொள்ள முடியாது. இன்றையக் கிண்ணம் ஒன்றுதான் இப்போது உன் கரங்களில் இருக்குது.

இன்று என்பது. இறைவன் வழங்கிய புத்தம் புதிய வெற்றுக்கிண்ணம்.
ஏன் அதை நேற்றின் கண்ணீரால் நிரப்புகிறாய்?
ஏன் அதை நாளையின் ரத்தத்தால் நிரப்புகிறாய்?
அந்த வெற்றுக் கிண்ணத்தை உன்வேர்வை கொண்டு நீ நிரப்பு. அப்போது அது வெற்றிக் கிண்ணம் ஆகும்.

## ஒரு காட்டின் கதை

அது-
ஒரு காடு
அழகுக்கும்
அமைதிக்கும்
பேர் பெற்ற காடு.
●●●
அந்தக் காட்டில்
எருமையும்.
மாடும், ஆடும்
ஒற்றுமையாக
வாழ்ந்தன.
●●●
அங்கே
ஆதிக்கம் செலுத்திய
வெள்ளை நரிகளை
விரட்டியடித்தன.
●●●
எல்லாம் முடிந்த
பிற்பாடு
எருமை யோசித்தது:
"எல்லோரையும் விட
எண்ணிக்கையில்
நானே அதிகம்
ஆக.அரியாசனம்
எனக்கே சொந்தம்.
●●●
சிம்மாசனத்தில்
அமர்ந்த
எருமை சிலிர்த்தது:
சீறிச் சினந்தது-
"நான் தான் சிங்கம்.
சிங்க புத்திரன்"
●●●
பக்கத்திலிருந்த
மாட்டைக்
கடித்துக் குதறியது.
காயப்பட்ட மாடு
உறுமியது:
"நீ சிங்கமானால்
நான் தான் புலி.
வேங்கையின் மைந்தன்"
சிங்கமும் புலியும்
சளைக்காது
சண்டையிட்டன.
●●●
வெறி பிடித்த வேங்கை
சும்மா இருந்த ஆட்டையும்
கடித்துக் குதறியது.
●●●
அடி பட்ட ஆடு
வெகுண்டெழுந்து
வேங்கையைத் தாக்கியது-
"அவன்-சிங்கம்.
நீ-புலி
ஆயின்
நான்தான் - ஓநாய்.
ஓயாது என்போராட்டம்"
●●●
மூர்க்கம் கொண்டது
மூன்றாவது ரத்தம்.
மூண்டது - ஒரு
முக்கோண யுத்தம்
●●●
அது-
ஒரு காடு
அழகுக்கும் அமைதிக்கும்
பேர் பெற்ற காடு.
●●●
இன்றோ....
அது-
யுத்தத் தீ
கொழுந்து விட்டெரியும்
சாம்பல் மேடு

**உஸ்மான் மரிக்கார்**



**வாசகர் கவனத்திற்கு**

முஸ்லிம் குரலின் 1-15 இதழ்கள் தேவைப்படுவோர், ரூபா. 200/-க்கான காசுக்கட்டளை/ காசோலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

# உங்களைச் செவிமடுக்கச் சிறுவர்களுக்கு அவகாசமளியுங்கள்

வெற்றிகரமான. பெற்றோர்கள் சரியான நிலைமைகளை உருவாக்கி அதன் மூலம் தம் பிள்ளைகளைத் தமது உரையாடல்களைச் செவிமடுக்க வைக்கின்றனர்.

*குறைவாகப் பேசுக:-*

திறந்த பேச்சுவார்த்தை போன்று காணப்பட்டாலும் பல சமயங்களில் பிள்ளைகளின் காதுகளையும். வாய்களையும் மூட வைப்பது எமது பேச்சுகளாகும்.
"நான் உங்களுடைய வயதுடையவனாக இருந்த போது என அவ்வுரை தொடர்கிறது.

அவரின் முன் சிறுவர். சிறுமிகள் கவனமற்று உட்கார்ந்து கொள்கின்றனர். அவர்களது கண்கள் அவர் திறந்துள்ள போதிலும் அவர்கள் தம்முன்னுள் எத்தகவலையும் நோக்காது அமைதியாக உட்கார்கின்றனர்.

எதிர்காலத்தைப்பற்றிச் சொற்பொழிவு நடத்துவதும் பயன்தராது. எனவே உங்களது செயலுக்கான நேரடிக் காரணத்தை விழக்குங்கள். அன்றேல் வாழ்க்கைக்குத் தேவையானவை பற்றி மனறமுகமாக உரையாடுங்கள்.

*சூடான வார்த்தைகள் வேண்டாம் :-*

எமது உணர்வுகளுக்கும் பிள்ளைகளின் நலன்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு உண்டு. எனவே பெற்றோர்கள் அமைதியாக உள்ள சந்தர்ப்பம் குறைவு. எனவே அதிகமான சந்தர்ப்பங்களில் உங்களையறியாமலே, வேண்டாத வார்த்தைகள் வெளிவரலாம். கட்டுப்படுத் தப்படமுடியாத நிலைமையேற்படின், விடயத்தைப் பிறகு பார்ப்போம் எனப் பிள்ளைகளிடம் கூறி விடுங்கள்.

பிள்ளைகளுக்குச் செவி மடுங்கள். இறுதி வரை செவி மடுங்கள். எது செய்யப்பட்டாலும் பரவாயில்லை.

முழுமையாகச் செவிமடுப்பதை நீங்கள் இடைநிறுத்தினால் மன்னிப்புக் கோரத் தயாராக இருங்கள். உங்களது பிள்ளை சொல்லக்கூடிய யார். என்ன. எங்கே. எப்போது. ஏன் என்பவற்றை அறியாமல் ஆலோசனை/புத்திமதி கூற வேண்டாம்.

*அன்புடன் உரையாடுங்கள்:*

அன்பு. பேச்சுவார்த்தையில் மென்மை. அமைதி போன்றன உறுதியான குடும்பங்களில் காணப்படும். உங்கள் அன்பு பற்றிப் பிள்ளை அறிந்திருக்கும் என ஊகிக்க வேண்டாம். உங்களது அன்பு அவர்களது வெற்றியுடன் இணைந்து இருக்கும் என அவர்கள் அடிக்கடி ஊகிப்பர்.

*பிள்ளைகளின் கருத்து:-*

பிள்ளைகள் எவ்வளவு வெறுத்தாலும் சில தீர்மானங்களில் பெற்றோர்கள் தீவிரமாக இருப்பர். எனவே தீர்மானம் மேற்கொள்வது என்பது பிள்ளைகளை அனுசரியாது விடுவதாகிறது. ஆகவே அவர்களது கருத்துக்களுக்கும் இடம் அளியுங்கள்.

அவர்களுடன் கலந்தாலோசித்து எடுக்கப்படும் முடிவை சிறுவர்கள் ஆதரிப்பர். எனினும் சில விடயங்களில் பெற்றோர் என்ற வகையில் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமை உங்களுக்குண்டு.

நன்றி - டெய்லி மிறர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளத்திற்கு முஸ்லிம் எம்.பி. ஒரு கதை கேளுங்கள்

புத்தளத்து அரசியலைப்பற்றி : புத்தளத்து மக்கள் அரசியல் அநாதைகளாகியது பற்றி சிலர் புலம்புகிறார்கள். ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்கிறார்கள். பிறகு எல்லோரும் சேர்ந்து வாக்காளர்களைக் குற்றம் சாட்டுகிறார்கள். இதனை "சூர்" ஊதும் வரையிலும் தொடருவார்களே ஒழிய; அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை தத்தமக்கு சார்பாக சொல்வார்களே தவிர, தெளிவான தீர்வொன்றில்லை. இப்போது மீண்டும் கச்சை கட்டுகிறார்கள். பெரும்பான்மைக் கட்சிகளிலுள்ள பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் வீச்சுவலையை மன்னிக்க வேண்டும் மடி வலையை (அப்பதான் எல்லா மீனையும் பிடிக்கலாம்) சுத்தம் பண்ணச் சொல்லி தமது கட்சியின் ஏஜன்டுகளிடம் சொல்லியுள்ளது போல் தெரிகிறது. வழமை போல எச்சில் முள்ளுகளெல்லாம் ரெடி. பெரும்பான்மை அரசியல் வாதிகளும், தனித்துவ அரசியல்வாதிகளும் அவர்களது ஏஜன்டுகளும் சதைக்கட்டியை எவ்வாறு தமக்குள் பகிர்ந்து கொள்வது என குசுகுசுப்பது ஆரம்பித்துள்ளது போல தெரிகிறது. இந்த நிலையில் புத்தளத்து வாக்காளர்கள் என்ன செய்ய வேண்டும் என்று யோசித்த போது; யோசித்துக் கொண்டே நித்திரை கொண்ட போது; கண்ட கனவிலே கதையொன்று தோன்றியது. அது இதுதான்.

ஒரு ஊரில் ஒருத்தன் இருந்தான். அந்த ஊரிலே இரண்டு பெண்கள்தான் திருமணமாகாதவர்கள். வெளியூர் பொம்பிளைகளை முடிக்கக் கூடாது என்ற எண்ணம் அவனுக்கு. என்ன இருந்தாலும் பொரத்தி பொரத்திதான் அது எப்ப சரி புத்தியைக் காட்டிவிடும் என்ற உண்மையை அவன் உணர்ந் திருந்தான். ஆனால் ஒரு சிக்கல் என்ன தெரியுமா? ஒரு பெண் இருமல் வருத்தம் உள்ளவள், மற்றவள் குசு விடுபவள். யாரோ ஒருத்தர் மை பார்க்கிறார் என்று கேள்விப்பட்டு, போனான் அவரிடம், கேட்டான் மை பார்த்துவிட்டு அவர் சொன்னார் "தம்பி அனுமான் சொல்லுது. இருமுற பொம்பிளைய எடுத்தால் சப்தம் மட்டும்தானாம். ஆனா குசு விர்ர பொம்பளைய எடுத்தா சப்தமும். நாத்தமுமாம். வெளியால உள்ள பொம்பிளைங்கள நம்ப ஏலாது என்று சொல்ற. உள்ளதே ரெண்டு பொம்பிள. மிச்சம் என்ன செய்ய வேணுமெண்டு அனுமான் சொல்லாமல் சொல்லுது. சரி சரி காச காட்டு" என்றதும் தும்மல் வந்து விட்டது. விழித்துக் கொண்டேன்.

### உப்புத்தளத்தான்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அதே நேரம் ஏதோ புரிவது போலவும் இருந்தது. கனவுக்கு ஏதோ காரணமாயிருக்காமே. நானும் ஒரு அப்பாவியிடம் போனேன். அவர் வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார். போகிற அவசரம் அவருக்கு. எனது கனவைக் கேட்டுவிட்டு சிரித்தார் நானும் இப்பதான் அதே கனவைக் கண்டேன். ஆனா அனுமான் எனக்கு முழுமையா சொல்லிச்சு. (பாழாய்ப் போன தும்மல்) தம்பிக்காக சொல்றன். இங்குள்ள அரசியல்வாதிகள் ஒருத்தரை ஒருத்தன் ஊழல் ண்டு சொல்றான் (பாம்பின் காலை பாம்பு தானே அறியும்) அதால யாருமே சுத்தமானவங்க இல்ல. சரியா? அதேநேரம் புத்தளம் இருக்கிற நிலைமைல அரசியல்வாதிகளுக்கு நம்மட சமூகத்த காப்பாத்திற துணிச்சலும் வேணும். இல்லியா தம்பி? துணிச்சல் இல்லாத, ஊழல் உள்ளவன் குசு விர்ர பொம்பளயாம். ஊழல் இருந்தாலும் சமூகத்திற்காக தனித்து நிற்பவன் இருமுற பொம்பிள மாதிரியாம். அனுமான்கள்தான் சொல்லிச்சு. என்ன ஏதாவது பட்டுதா? "எனக்கு பட்ட மாதிரியும் இருந்தது. படாத மாதிரியும் இருந்தது." அப்ப இருமுற பொம்பளயாவது பரவாயில்லை என்டு அனுமான் சொல்லிச்சா? " என்று கேட்க, அப்பாவி "கதையோட கதையா நேரம் போயிட்டுது. சும்மா கண் சிகிச்சை முகாம் நடத்துறாங்களாம். எனக்கு கண் இன்னும் நல்லா தெரியுது. ஆனா சும்மா குடுக்கிறதால வாங்கி வச்சா பொறவு யாருக்காவது ஒதவுந்தானே" அப்பாவி விரைந்தார். நேரத்தைப் பார்த்தேன் டியுசனுக்கு டைம் சரி. விசுக்கென்று திரும்பி நடந்தேன். அப்பதானே என் ஊட்டு அடுப்பு புகையும்? நான் கதைக்கவில்லை. மனது கேட்டது " அப்ப இருமுற பொம்பிளயயா நம்மட கனவுல வந்தவன் முடிக்கோனும்? "என்னட கேக்க வாணா. அனுமான்ட கேளு" நான் நடந்தேன்.

# வாரமொரு உரைகல் - மருதூர் மெய்யொளி

## 'ஜிஹாத்' உணர்வுள்ளவர்களே முஸ்லிம்களாவர்!

நம்மவர்களில் பலர் இன்று "ஜிஹாத்" எனும் சொல்லை உச்சரிப்பதற்கும், அதனை அனுசரித்துக் கொள்வதற்கும் தயக்கம் காட்டும் ஒரு நிலை காணப்படுகின்றது. அதே நேரம், முஸ்லிம் அல்லாதவர்களிடம் "ஜிஹாத்" எனும் சொல் மிகவும் அச்சுறுத்தலுக்குரிய ஒன்றாகவும், இச் சொல்லை மொழிபவர்களை 'மோசமானவர்கள்' என வரையறுத்துக் கொள்கின்ற ஒரு நிலையும் பரவலாகக் காணப்படுகின்றது.

"ஜிஹாத்" எனும் சொல் உண்மையில் மேற்படி புரிதல்களுக்குள் அகப்பட்டுக் கொள்ளும் ஒன்றல்ல; மாறாக ஒவ்வொரு முஸ்லிமிடமும் எக்கணமும் உள்ளத்திலும், செயலிலும் இருந்துவர வேண்டிய ஒன்றாகும். ஏனெனில், நம்மைப் பொறுத்தவரை ஜிஹாத் எனும் உணர்வு நமது வாழ்வோடு மிகவும் நெருங்கி இருக்கின்றது. நமது அன்றாட செயற்பாடுகளில் ஒன்றாகவும் இணைந்திருக்கின்றது. நமது உள்ளம், உடல் எனும் இரு பகுதிகளின் தொழிற்பாட்டிலும் ஜிஹாத் தொடர்பு பட்டிருக்கின்றது.

நம்மில் எழுகின்ற ஷைத்தானிய உணர்வுகளுக்கும், உணர்ச்சித் தூண்டல்களுக்கும் எதிராகப் போராடி, நமது வாழ்வை செம்மையாகவும், இறை விருப்பிற்குரியதாகவும் மாற்றியமைப்பதும் ஒரு வகையான ஜிஹாத்தாகவே இருக்கின்றது.

நயவஞ்சகத்தனத்தின் பண்புகள் எம்மிற் சிறிதளவேனும் ஒட்டிவிடாதளவில் பாதுகாத்துக் கொள்வதற்கும் ஜிஹாத் உணர்வைப் பிரயோகிப்பதை இஸ்லாம் விதந்துரைக்கின்றது.

இன்னொருபுறம் நமது மார்க்கத்திற்கும், நமது இருப்பிற்கும் எதிராகத் தொடுக்கப்படும் அத்தனை எதிர்ப்புக்களையும் எதிர் கொண்டு முறியடித்து வெற்றி கொள்ளும் பக்குவங்களையும், தயார் நிலைகளையும் என்றும், எப்போதும் சித்தப்படுத்திவைத்திருக்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் முதற்தர மூலாதாரமான குர்ஆன் முன்மொழிகின்ற நடைமுறையாகும்.

அடுத்தவர்கள் எம்மீது அநீதியாக நடந்து கொள்கின்ற போது அதனை பொறுமையாக சகித்துக் கொண்டிருப்பது மட்டும் உயர்வான பக்குவம் என இஸ்லாம் பகரவில்லை. நாம் பலமுடையவர்களாக இருந்து அதனை எதிர் கொள்வதும் உயர்வான பக்குவம் என்றும் இஸ்லாம் கூறுகின்றது.

பொதுவாக எந்த வகையான ஜிஹாத்தின் தேவையின் போதும் பின்வாங்குதல்-புறமுதுகு காட்டுதல் கீழ்த்தரமான பண்பென்று இஸ்லாம் பறை சாற்றுகின்றது. ஆயின், பலஹீனமான நிலையினை கூடிய முயற்சி எடுத்து தவிர்த்து பலமுடையவர்களாக நாமிருக்க வேண்டும்.

ஆகவே, நீதியோடும், நேர்மையோடும், சீரோடும் நாம் சிறப்புற்று வாழ்வதற்கு ஜிஹாத் உணர்வு நம்மில் என்றுமே வேரூன்றி இருக்க வேண்டும். அப்போதுதான் நற்பேற்று வாழ்வை ஈருலகிலும் நாமடைந்து கொள்ள முடியும். இதனாற்தான் ஒரு முஸ்லிமின் வாழ்வில் உறுதியான மரணம் வரும்வரை ஜிஹாத் உணர்விலிருந்து விலகி வாழ முடியாது என்பதை கீழ்வரும் நபி மொழி மிக வலுவாகத் தெளிவு படுத்துகின்றது.

*"ஜிஹாத் செய்யாமலும், அதைப்பற்றிய சிந்தனையே உள்ளத்தில் எழாமலும் எவர் மரணமடைகின்றாரோ அவருடைய மரணம், நயவஞ்சகத்தின் ஒரு பிரிவுடன் தான் போய் முடியும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.*

*(அறிவிப்பவர் :- அபூ ஹுரைரா (ரழி) ஆதாரம் :- முஸ்லிம், மிஷ்காத்)*



சிறுகதை

# மண்ணுக்குள் விழுந்த விதை

ஓட்டமாவடி இப்னு உமர்

பாத்தும்மா மனமுடைந்து போய்க் கிடந்தாள். அவளால் அவளுடைய ஊர் விதானையார் அப்படி நடப்பார் என்று கனவிலும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. "சே என்ன மனிசனிவன் மக்காவுக்கும் போய் வந்து காணாததற்கு நாகூருக்கும் போய் வந்தவன் இப்படி கேவலமாய் நடப்பதா?" அவள் மனது அடிக்கடி கேள்வி கேட்டுக் கொண்டேயிருந்தது.

பாத்தும்மாவிற்கு மிஞ்சிப் போனால் முப்பத்திரண்டு வயதிருக்கும். அவளொரு விதவை. 1990 ஆம் ஆண்டு படித்து விட்டு வேலைக்காக விண்ணப்பங்களை அனுப்பிக் கொண்டும் பக்கத்திலிருந்த பாடசாலையொன்றில் வலன்றியா டீச்சராகவும் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருந்தவளை அவளுடைய முரட்டுத்தந்தையும் குடும்பமும் முஸ்தபாவுக்கு கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைத்தனர். முஸ்தபா நல்லவன், நேர்மையானவன் அநீதியை கண்டால் அமைதியாய் இருக்கத் தெரியாதவன். திருமணம் நடந்து நான்கு மாதமிருக்கும், கோங்குளை வயலுக்கு சென்றவனை கொடிய புலிகள் கடத்திச் சென்று கொன்று கிடப்பதாக நன்றியுணர்வுள்ள தமிழன்பர் ஒருவரால் தகவல் அனுப்பப்பட்டிருந்தது. மரணச் செய்தி கேட்டு அடியற்ற மரமாய் பாத்தும்மா வீழ்ந்தும் அழுதும் விரக்தியுற்றும் கிடக்கலானாள். அவளுடைய இரு சகோதரிகளும் மூன்று நானாமாரும் தோழியரும் முடியுமான வரை ஆறுதலளிக்க முயற்சித்துக் கொண்டிருக்க பெரிய பள்ளிவாயல் தலைவர், ஊர்பெரியவர்கள் ஆகியோர் காகிதாலை இராணுவ பிரிக்கேடியருடன் தொடர்பு கொண்டு பல நூறு இராணுவத்துடனும் பல நூறு ஜமாத்தாருடனும் பல டிரெக்டர்கள், வேன்களுடன் சென்று ஜனாஸாவை கொண்டு வந்து விட்டனர். அழுகைச் சத்தங்களுடன் ஊராரின் பிரார்த்தனைக்கு மத்தியில் முஸ்தபா நல்லடக்கம் செய்யப்பட்டார்.

நான்கு மாத மணவாழ்வுடன் பாத்தும்மாவின் இல்லற வாழ்வு கேள்விக் குறியுடன் முடிவடைந்திருந்தது. இத்தாவுடைய காலம் முடிவடைந்ததும் பாத்தும்மாவை பலர் மறுமணம் செய்ய எத்தனித்தனராயினும் அவள் அக்கோரிக்கைகளை நிராகரித்து விட்டிருந்தாள். அன்று கிட்டத்தட்ட இருபது வயதுகளை பூர்த்தி செய்த இளமையையும் அழகும் நிறைந்தவளாகவும் இங்கிதம் நிரம்பியவளாகவும் பாத்தும்மா விளங்கினாள். அவளிடம் வாழ்க்கையின் வைராக்கியத்தைப் பெற்றோரும் பயங்கரவாதிகளும் ஏற்படுத்தி இருந்தனர். அவள் திருமணத்திற்கு மனதளவில் ஆயத்தமாகும் முன்பு கல்வி வாழ்வை தடைப்படுத்தி பெற்றோரும் குடும்பமும் செய்வித்த திருமணத்தில் அவள் உடன்படவில்லை. திருமணம் நடந்தபின் தன் தலைவிதி இதுவென்றால் இறைநாட்டமும் இப்படி என்றால் வேறு என்னதான் செய்வது என்று கணவனுடன் ஒத்தும் ஒருமித்தும் வாழ்வதற்கு நான்கு மாதங்களுக்குள்ளும் மாறியிருந்தாள். அந்த வாழ்வையும் ஈவு இரக்கமற்றவர்களும் மிலேச்சத்தனமுள்ளவர்களுமான புலிகள் பறித்துக் கொண்டனர்.

காலங்கள் யாருக்காகவும் காத்துக் கிடப்பதில்லையே! காலத்தைப் பயன்படுத்தி கொண்டவர்கள் தான் வெற்றியாளர்களாகவும் இலட்சியங்களை அடைந்தவர்களாகவும் மிளிர்கின்றனர். பாத்தும்மா சில மாதங்களின் பின்னர் பெற்றோரிடமும் தனது கணவரின் பெற்றோர்களிடமும் அனுமதி பெற்றுக் கொண்டு தொடர்ந்தும் பக்கத்து பாடசாலைக்கு வலன்றியா டீச்சராக போய் கற்பிப்பதிலும் மாணாக்கர்களின் புறக்கிருத்தி நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதிலும் ஈடுபட்டாள். அவள் அத்துடன் சும்மாவிருக்கவில்லை. பாடசாலை அபிவிருத்தி சங்கம் வழங்கிய சிறுதொகையுடனும் மாலை நேர வகுப்புக்கள் நடாத்துவதனால் கிடைக்கும் சிறு வருமானங்களுடனும் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் கலைப்பிரிவின் வெளிவாரிப் பட்டப்படிப்பிற்காக தன்னை பதிவு செய்து கொண்டு படிக்கலானாள்.

யாரும் அவளை அனாவசியமாக தொந்தரவுபடுத்துவதை தவிர்த்திருந்தனர். 1990 ஆம் ஆண்டிலிருந்து முஸ்லிம் சமூகத்தில் பல பாத்தும்மாக்களை பயங்கரவாதம் உருவாக்கியிருந்தது. அத்தகைய பாத்தும்மாக்களின் துயரங்களின் வகையும் தொகையும் ஆளுக்காள் மாறுபட்டும் வேறுபட்டும் கிடந்தன.

பாத்தும்மாவிற்கு நன்கு தையல் வேலை தெரியும் ஆனால் சொந்தமாக தையல் மெஷின் அவளிடமிருக்கவில்லை. எனவே தையல் மெஷினொன்றை வங்கி மூலம் பெற்று இதற்கான கடனை மாதாந்தம் தவணை அடிப்படையில் செலுத்துவதற்கான சிபார்சை பெற்று கொள்வதற்காகவும் தனது கணவன் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டமைக்கான நஷ்டயீட்டுக்கு விண்ணப்பிக்கவுமே பாத்தும்மா அன்று காலையில் அவளுடைய கிராமப் பிரிவின் கிராம உத்தியோகத்தரை சந்திக்க சென்று இருந்தாள். கிராம உத்தியோகத்தர் அவளுடைய பிரச்சினைகள் என்ன என்றோ அல்லது அவளுடைய கோரிக்கை என்னவென்றோ கொஞ்சமும் கேட்காமல் அவளுடைய இளமையை விலை பேசினார். அவளுடைய தேகம் நடுங்கிற்று, ஆத்திரம் உடம்பெல்லாம் பரவிற்று. "சீ நீங்களெல்லாம் மனிதர்களா? மிருகங்களா? கிராமத்தின் பொறுப்பு வாய்ந்த பதவியிலிருக்கும் நீங்க அந்நிய சமூகத்தால் பாதிக்கப்பட்டு ஆயிரம் சோகங்களையும் ஆயிரங்கவலைகளையும் சுமந்து தத்தளிக்கும் என் போன்றவரிடம் மானத்தை விலை பேசுகின்றீர்களே! வெட்கமாயில்லை. நீங்களெல்லாம் மக்காவுக்கு போனால் என்ன? நாகூருக்கு போனாலென்ன? திருந்தமாட்டீர்களா?" என சீற்றத்துடன் கத்தினாள். கிராம அதிகாரி அசனார் அதிர்ந்து போனார். ஏனென்றால் அவருடைய வீட்டில் வைத்து அவரை எந்தப் பெண்ணும் இப்படி கேட்டதுமில்லை. சத்தமிட்டு கத்தியதும் இல்லை. அவருக்கு எதிரானவர்களை அவர் சும்மா விட்டதும் இல்லை. கிராம அதிகாரி அசனார் "நான் விளையாட்டுக்குத் தான் புள்ள கேட்டன். நீ ஒன்றும் மனதில வைச்சிக்காதே வேற யாரிட்டயும் சொல்லியும் விடாதே! நான் தையல் மெசினுக்கு சிபாரிசு செய்துதாரன் 1000 காசை கொண்டு வந்து தா. உன்ட புருஷன்ட நஷ்ட ஈட்டை செய்து தாரன்டா எப்படியும் 10,000 தரவேண்டும். மற்றவங்க இப்படி குறைஞ்ச காசு கேக்கமாட்டாங்க! நான் அப்படி பெரிசா கேட்டு வாங்குகிறதில்ல. அதோட நீயும் எனக்கு சொந்தமானவள் தான்" என்று கூறிமுடிக்க முன்பே பாத்தும்மா வெடித்தாள். "தூ நாயே! மானத்தை கேட்குறாயா? உன்னைப் போன்ற மக்கள் துரோகிகளை ஒழித்துக் கட்டினால் தான் எங்களைப் போன்றவர்களுக்கு விடிவு கிடைக்கும். உன்ட சிபார்சும் உதவியும் எனக்குத் தேவையில்லை. என்னைப் படைத்த அல்லாஹ் எனக்கு உதவி செய்யப் போதுமானவன்" என்று முழங்கி விட்டு விறுவிறென்று வீடு வந்தாள். அப்படி வந்தவள் தான் மனமுடைந்து போய்க் கிடக்கின்றாள் காலை வேளை அன்று சனிக்கிழமையாக இருந்ததனால் வயது போன தாய் கூட, மகள் கட்டிலில் புரண்டு புரண்டு படுப்பதைப் பற்றி பெரிதாக கவனத்தில் எடுக்கவில்லை. பாத்தும்மா தனது பகுதி கிராம அதிகாரிக்கு எதிரான வியூகங்களை வகுத்துச் செயற்பட தீர்மானித்தாள். எனவே அன்று பின்னேரம் சமூகப் புரட்சியாளனாக கருதப்பட்டு வந்தவனும் அவளுடைய பாடசாலை தோழனுமான ஹனீபாவை சந்திக்க விரும்பினாள். தனது தாயிடம் தனது நண்பியான ஹனீபாவின் சகோதரி ஆயிஷாவை சந்திக்கச் செல்வதாக சென்று விட்டு தனது ஆறுவயது தம்பியுடன் ஹனீபாவின் வீட்டிற்கு சென்றாள்.

ஹனீபா அவ்வார "முஸ்லிம் முரசு"ப் பத்திரிகையில் மூழ்கிப் போயிருந்தான். "அஸ்ஸலாமு அலைக்கும் பிரதர்" என்ற ஒலிவந்த திசையில் திரும்பியவன் அங்கு பாத்தும்மா நின்றிருப்பதைக் கண்டு உடனே எழுந்து "ஆயிஷா! ஆயிஷா! இங்க வாங்க! யார் வந்திருக்கிறாங்க என்று பாருங்க" என்று தனது தங்கையைக் கூப்பிட்டவனாக "வாங்க பாத்தும்மா! உள்ளே வாங்க! என்று அழைக்கும் போதே ஆயிஷாவும் வந்து சேர்ந்தாள். "அஸ்ஸலாமு அலைக்கும்" எப்படி ஆயிஷா சுகமா? என்று பாத்தும்மா வினாவினாள். "வஅலைக்கும் முஸ்ஸலாம், வந்ததே மேலதிக சுகந்தான். இருங்க! எங்க வீட்டுப் பக்கம் வரவும் மனம் வந்ததே! பெரிய விஷயந்தான்" என்றாள் ஆயிஷா. அதன் பொருளை நன்கு புரிந்து கொண்ட பாத்தும்மா "மனவுளைச்சலாக இருந்தது அதான் உங்களிடமும் உங்க நாநா ஹனீபா சேரிடமும் கொஞ்சம் பேசி விட்டு போகலாம் என்று தான் வந்தேன்" என்றாள். ஹனீபா ஒரு கல்விக் கல்லூரியினால் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியனாக கடந்த ஒரு வருடமாக செயலாற்றி வருகின்றார். அத்துடன் பொது மக்களின் நலன்களை கவனிப்பதற்காக மக்கள் நலன்புரி ஒன்றியம் என்னும் பெயரில் ஒரு அரசசார்பற்ற அமைப்பொன்றை அமைத்து முற்போக்கு சிந்தனையும் தைரியமும் உள்ள இளைஞர்களை நெறிப்படுத்தி சமூகத்திற்கு பல்வேறு வகையான வழிகாட்டல்களையும் உதவிகளையும் செய்து வருபவர் அந்த அமைப்பின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார். எவர் தப்புச் செய்தாலும் அதனைத் தட்டிக் கேட்பதற்கு பின் நிற்கமாட்டார். மூன்று பாஷைகளில் நல்ல தேர்ச்சியும், நிர்வாக அறிவும், சிறந்த அணுகுமுறைகளும் அவரின் சிறப்பம்சங்களாகும். அப்படியான ஹனீபா ஆசிரியரால் பாத்தும்மாவின் பூடகமான பேச்சில் ஏதோ நடந்திருப்பதை உணரமுடியாமல் இருக்கவில்லை.

எனினும் அதன் விளக்கங்களை அவள் சொன்னால் தானே அறிந்து கொள்ளலாம். என்ன மனவுளைச்சல் என்று அறியலாமா? என்றான். பாத்தும்மா நடந்த விடயங்களை தெளிவாகக் கூறினாள். அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த ஹனீபா "பாத்தும்மா எங்களுக்கும் அசனார் ஜி.எஸ்.ஓ. வைப் பற்றி நிறைய முறைப்பாடு கிடைத்துள்ளது. அவர் ஏற்கனவே பல ஊழல்களையும் மோசடிகளையும் செய்திருப்பது தெரிய வந்த விடயந்தான். 1992, 1994 ஆம் ஆண்டுகளில் பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான மீளக்குடியமர்வு கொடுப்பனவு ரூபா 2000 வழங்கப்பட்ட போது ஒரு குடும்பத்திற்கு 500 ரூபா படி வாங்கியுள்ளார். தொழில் பாதிப்பிற்கான கொடுப்பனவு ரூபா 2000 வழங்கப்பட்ட போது, ஒரு குடும்பத்திற்கு 1000 வீதம் மொத்தம் 750 குடும்பங்களிடம் இலஞ்சம் பெற்றிருப்பதற்கான ஆதாரங்களையும் சேகரித்துள்ளோம். பயங்கரவாதிகளால் உடைக்கப்பட்ட வீட்டுரிமையாளர்களுக்கு வீடமைப்பு உதவியாக ரூபா 25,000 வழங்கப்பட்ட போது சுமார் 150 குடும்பங்களிடம் 5000 படி வாங்கி வந்ததும் உங்களை போல கணவன்மார்களை புலிகளால் இழந்தவர்களுக்கு ரூபா 50,000 வழங்கப்பட்ட போது 27 பேர்களிடம் 10,000 ரூபா படி பெற்றிருக்கிறார். இதுபோல அவருடைய இலஞ்ச விளையாட்டுக்கள் ஏராளமுள்ளன. வளைகுடா யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டு இலங்கை திரும்பிய பணிப்பெண்கள் தொழிலாளர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நஷ்ட ஈடு வழங்கும் போது அவர்களின் தேசியடையாள அட்டை கடவுச்சீட்டு வதிவிடம். ஆளடையாளப்படுத்தலுக்காக சுமார் 60 போகளிடம் 10,000 ரூபா முதல் 52,000 ரூபா வரை பெற்றிருப்பதையும் அதற்கான முகவர்களாக ஆதம்பாவாவும் பதற்கடையன் நியாசும் இருந்துள்ளதையும் அறிய முடிந்துள்ளது. இவ்விடயம் பற்றி பிரதேச செயலாளரிடமும் மாவட்ட அரசாங்க அதிபரிடமும் பேசியுள்ளோம். அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளனர். அது எவ்வளவு தூரம் நடக்கும் எனத் தெரியாது. ஏனென்றால் அசனார் ஜி.எஸ்.ஓ. ஆளுங்கட்சியின் சப்போட்டராம். அவர் பணத்தால் எதையும் சமாளித்து விடும் வல்லமை உள்ளவரென்றெல்லாம் கதையடிபடுகிறது என அசனார் கிராம உத்தியோகத்தர் பற்றி ஹனீபா ஆசிரியருக்கு அன்று வரை கிடைக்கப் பெற்ற தகவல்களையும் ஆதாரங்களையும் அவரும் அவர் சார்ந்த அமைப்பும் அதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளையும் விபரித்தார்" இந்த அணுகுமுறைகளால் மக்களையும் பொதுச் சேவையையும் பாதுகாக்கலாம் என்று நீங்கள் கருதுகின்றீர்களா? என பாத்தும்மா கேட்டாள்" இல்லை, ஆனால் இந்த நாட்டின் நிர்வாக அமைப்பு முறையும் அரசியல் சமூக சூழல்களும் இந்த அணுகுமுறைக்கப்பால் தற்போது செயற்பட நமக்கு உரிமையையும் அவகாசங்களையும் பாதுகாப்பையும் வழங்காது எனக்கருதுகின்றேன் என்றார் ஹனீபா. பாத்தும்மா சொன்னாள். "இஸ்லாம் ஒரு தீமை நடை பெறும்போது கரங்களைத்தான் முதலில் பயன்படுத்த சொல்கிறது. அதற்கடுத்த நிலையில் தான் வாயினால் தீமையெனக் கூறி விளங்க வைத்து தடுக்கச் சொல்கிறது. அதனாலும் பலன் கிடைக்காத நிலையில்தான் அந்தச் சூழலை வெறுத்தொதுங்கச் சொல்கிறது. அதன்படி இளைஞர்களும் ஊர்ப் பெரியவர்களும் இதனைப் போன்று செயற்படுபவர்களை தண்டித்து திருத்த முடியாதா எனக் கேட்டாள். "இன்று நாம் வாழும் நாடும் சூழலும் இஸ்லாமிய சூழலல்ல, இதுவொரு இஸ்லாமிய நாடுமல்ல. இஸ்லாமிய நாடுகளில் பலவற்றிற் கூட பாவச் செயல்களும் ஊழல் மோசடிகளும், அனாச்சாரங்களும் இடம்பெற்றே வருகின்றன. காரணம் அங்கு பெயரளவில் தான் இஸ்லாம் உள்ளது.

உண்மையில் மேற்கத்தைய கல்வித் திட்டங்களின் மூலம் அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, போன்ற நாடுகளால் மூளைச்சலவை செய்யப்பட்டு இஸ்லாத்தையும் அதன் ஒழுக்கமாண்புகளையும் இழிவுப் பெறுமானத்தில் கருதக் கூடியவாறு உருவாக்கப்பட்ட நபர்களிடமும் அல்லது குழுக்களிடமும் அரசாங்கமுள்ளது. அதனால் இஸ்லாமிய கிரீடங்களுடன் பெரும்பாலும் முரண்பட்ட நிர்வாக அமைப்புக்கள் தான் அமுல்படுத்தப்படுகின்றன. நாம் பௌத்த நாடொன்றில் வாழ்கின்றோம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்களின் கழுத்தறுப்புக்கும் காழ்ப்புணர்வுகளுக்கும் முகம் கொடுப்பவர்களாகவும் உள்ளோம். இந்நிலையில் நமது மார்க்க அடிப்படைகளை பின்பற்றத்தக்க அதிகார அலகு வழங்கப்பட்டாலன்றி நீங்கள் கூறிய இஸ்லாத்தின் அடிப்படைகளை அமுல்படுத்த முடியாதிருக்கும். அல்லது அதனை அமுல்செய்ய முற்படும் போது இந்த நாட்டின் சட்டங்கள் நம்மை கைது செய்து குற்றவாளிகளாக்கி விடும். என ஹனீபா ஆசிரியர் விளக்கினார்.

எனினும் பாத்தும்மா விட்டு விடவில்லை. "நீங்கள் கூறுவதில் நான் 100 வீதம் உடன்படவில்லை. ஏனென்றால் பாதகமான சூழலில் வாழ நேரிடும் போது அச்சூழலை மாற்றியமைக்க வேண்டியது

⇨ 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கால இலங்கையின் அரசியல் நிகழ்வுகள் முஸ்லிம்களை ஒரு நிரந்தர போராட்டத்திற்குள் தள்ளிவிடுமா?

ஏ.எம்.எம். மூஸம்மில், பதுளை

கடந்த இருபது வருடகால ஒரு பாரிய யுத்தத்திற்கு முகங்கொடுத்த இலங்கை தற்போது நிரந்தர சமாதானத்துக்காக வேண்டி பல்பக்க முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது. இலங்கையின் எதிர் கால சமாதானமானது தமிழ் முஸ்லிம் சமுகங்களின் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது என்பது தற்கால நிகழ்வுகள் மூலம் நிரூபணமாகின்றது. இந்நிதர்சனமான உண்மையை உணர்ந்தும் ஜீரணித்துக் கொள்ள முடியாத இனவாத சக்திகள் வடக்கு - கிழக்கில் பரம்பரையாக வாழ்ந்து வரும் முஸ்லிம் தமிழ் சமூகங்களுக்கிடையே ஒரு நிரந்தர பிளவை உண்டுபண்ணும் நடவடிக்கைகளில் தற்போது களமிறங்கியுள்ளது.

இதில் குறிப்பாக புலிகளின் கிழக்கு தலைமைத்துவங்கள் மற்றும் தேசிய தமிழ் பத்திரிகைகளின் பங்கு மிகப்பிரதானமாக அமைந்துள்ளன. கடந்த வாரம் வெளிவந்த தமிழ் நாளிதழொன்றில்.....

"இலங்கை முஸ்லிம்கள் ஆரம்பத்தில் அரேபியாவில் இருந்து இலங்கைக்கு வந்து இலங்கையிலிருந்த சிங்களப் பெண்களை மணமுடித்தார்கள் என்பது பிழையான கூற்றாகும். அவர்கள் தமிழ் பெண்களையே மணமுடித்திருக்க வேண்டும். அதனால் தான் இன்றைய முஸ்லிம்கள் பெரும்பான்மையாக தமிழை தாய் மொழியாக கொண்டிருக்கின்றார்கள். ஆகையினால் அவர்களும் தமிழர்கள் தான். ஆகவே முஸ்லிம்கள் தனியான நிர்வாகமாவட்டம் கோருவதும், பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் பங்கேற்க வேண்டுமென்பதும் தமிழரின் தேசிய போராட்டத்தை கொச்சைப்படுத்துவதாகும்" என்று எழுதப்பட்டிருந்தது.

மேற்படி கருத்துப்படி முஸ்லிம்களும் தமிழர்கள்தான் என்றால் தமிழரின் கோரிக்கையை தமிழரால் மறுக்கப்படலாமா? என்பதே கேள்விக்குரியதாகும். ஒரு இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட முன்பே முஸ்லிம்கள் தொடர்ந்தும் விலை மதிக்க முடியாத பல கொடுமைகளுக்கும் இழப்புக்களுக்கும் முகங்கொடுக்க நேர்ந்துள்ளதையும் தொடர்ந்தும் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெற மாட்டாது என்ற உத்தரவாதமுமில்லை என்பதையும் எவராலும் மறுக்க முடியாது.

இலங்கை நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் அரசாங்கம் இன்னுமொரு நிரந்தர போராட்டத்துக்கான வாயில்களை திறந்து விடக்கூடாது என்ற முனைப்புடனேயே செயல்படவேண்டும். வரலாற்று நெடுகிலும் முஸ்லிம்களுக்கெதிராக நடாத்தப்பட்ட அனைத்து வன்முறைகளும் முழுமையாக ஆவணப்படுத்தப்படவேண்டும். இதை ஒரு பொதுவான "கமிஷன்" மூலமாக மேற்கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் இந்நிலைமைகளை தவிர்ப்பதற்கான காத்திரமான வழிமுறைகளையும் விதந்துரைப்புக்களையும் பெறப்பட்டு அவற்றை அமுல் படுத்தப்படல் வேண்டும்.

முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் இலங்கை முஸ்லிம்கள் பல் வகையிலும் ஓரங்கட்டப்பட்டு வரும் இவ்வேளையில், எமது தலைமைத்துவங்கள் அடுத்த கட்ட நகர்வுகளை மிக நிதானமாக மேற்கொள்ள வேண்டுமென்பது காலத்தின் தேவையாகும். கடந்த காலங்களில் முஸ்லிம்கள் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்ட போதெல்லாம் சில நிவாரணப் பொருட்களுடன் மக்கள் முன் தோன்றி ஒரு சில ஆறுதல் வார்த்தைகளை மாத்திரமே எமது தலைமைத்துவங்களால் வழங்க முடிந்தது.

முஸ்லிம்களின் பூர்வீக பூமியிலிருந்து ஒரு சில மணி நேரங்களில் விரட்டியடிக்கப்பட்ட மற்றும் மதவழிபாட்டில் ஈடுபட்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டது போன்ற வரலாற்று அசிங்கங்கள் எதிர் காலத்திலும் எழுதப்படக்கூடாது. எதிர்கால முஸ்லிம்களின் உயிர், உடமை, கல்வி பொருளாதாரம் போன்ற அம்சங்களில் அக்கறை கொள்ளும் எவரும் எதிர்காலத்தில் முஸ்லிம்களுக்கெதிராக வைக்கப்படும் நிகழ்கால பொறிகளை வேறு பிரித்தறிய வேண்டும்.

நடைபெறும் சமாதான பேச்சுவார்த்தைகளில் மூன்றாந் தரப்பினருக்கு எந்த வித பங்களிப்புமே இல்லை என்ற நிலை அரசாங்கத்தின் செயல்பாடுகளில் உள்வாங்கப் படுமாயின் அது இன்னுமொரு நிரந்தர யுத்தத்திற்கான வழியாகத்தான் அமையப் போகின்றது. என்பது இன்றியமையாததாகின்றது.

வரலாற்று நெடுகிலும் முஸ்லிம்களுக்கெதிராக நடாத்தப்பட்ட அனைத்து வன்முறைகளிலும் முஸ்லிம்கள் மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட வரலாறே சான்றுகளாகவுள்ளன. 1915 கம்பளை கலவரம் தொடக்கம் அண்மையில் நடந்த மூதூர் வாழைச்சேனை படுகொலைகள் வரை ஒரு இனத்தைப் பிரதிநிதிப்படுத்துவதும் ஆயுதப்படைகளின் அனுசரணையுடன் அல்லது அவற்றின் வழிகாட்டல்களின் கீழேயே நடந்தேறியுள்ளன.

குறிப்பாக மாவனல்லையில் முஸ்லிம்களுக்கெதிரான வன்செயல்கள், மாளிகாவத்தையில் நடைபெற்ற வன்முறைகள், மற்றும் வாழைச்சேனை மூதூர் படுகொலைகளும் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருக்கும் வேளையிலேயே நடந்தேறியுள்ளன என்று குறிப்பிட்டுக் கூறலாம்.


ஊரடங்கு சட்டமானது நாட்டிலேற்படும் கொந்தளிப்பு நிலமைகளின் போது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவே அமுல்நடத்தப்படுகின்றது. என்றாலும் மேற்படி நிலவரங்களை நோக்கும் போது ஊரடங்குச்சட்டத்தின் நோக்கம் தலைகீழாக மாற்றப்பட்டிருப்பதை துல்லியமாக விளங்கலாம்.

வாழைச்சேனை மூதூர் வன்முறைகள் இலங்கை இராணுவத்தின் கண்ணெதிரே நடந்தேறியதும் இதில் புலிகளே நேரடியாக தொடர்பு பட்டதற்கான அத்தாட்சிகளிருந்தும் எங்களின் தலைமைத்துவங்களால் பல சவால்களை மாத்திரமே விட முடியுமாயிருந்ததும் முஸ்லிம்கள் தனிமைப்படுத்தப்பட்டு விட்டார்கள் என்ற நிலைமை வெள்ளிடை மலையாகவே இருந்தது.

இலங்கை இராணுவத்தின் "கெமுனு" பிரிவுக்கு எதிராகவே புலிகளின் "எல்லாளன்" படை உருவாக்கப்பட்டது. முஸ்லிம்களுக்கு இலங்கை தேசிய இராணுவத்தில் ஏன் ஒரு "ஜாயா" பிரிவு என்றோ "சித்திலெப்பை" பிரிவு என்றோ உருவாக்கப்படக்கூடாது.

முஸ்லிம்கள் தமது தனிப்பட்ட வாழ்க்கையில் மார்க்க ரீதியான சில பிரத்தியேக நடைமுறைகளை பின்பற்றுவதில் பொதுவாக முனைப்பாகவே இருப்பார்கள். உதாரணமாக உணவு, வணக்க வழிபாடுகள் போன்றவற்றை குறிப்பிடலாம். இலங்கை இராணுவத்தில் மேற்படி நடைமுறைகளை பின்பற்ற முடியாத நிலை இருப்பதாலேயே முஸ்லிம்கள் இராணுவத்தில் சேருவதில் பின்னடைகிறார்கள். மேற்படி நிலைமைகளை கருத்தில் கொண்டு முஸ்லிம்களும் பிரதிநிதிப்படுத்தும் வகையில் இலங்கை தேசிய இராணுவம் மறு சீரமைக்கப்படுமாயின் எதிர்காலத்தில் சகல இன மக்களும் வேற்றுமைகளுக்கு மத்தியிலான ஒற்றுமையுடன் வாழவும் சிறுபான்மையினரின் தனித்துவம் பேணவும் வழி செய்யலாம். யுத்த காலத்தில் பகிரங்கமாகவே முஸ்லிம் விரோத போக்கை மேற்கொண்ட புலிகள் சமாதான காலத்தில் அதே வகையான கடும் போக்கையே முஸ்லிம்கள் விடயத்தில் மேற்கொண்டார்கள். இவ்வரலாற்றனுபவங்களை நோக்குமிடத்தில் எதிர் காலத்திலும் நம்பகமானதொரு சூழலை காண முடியாது. விரும்பியோ விரும்பாமலோ புலிகளும் இலங்கை இராணுவமும் எதிர்காலத்தில் புரிந்துணர்வுடன் எல்லைகளுக்கு அப்பாலும், இப்பாலும் செயற்படும் காலம் உருவானால் இந்நிலமையை யதார்த்தமாக உணரலாம்.

முஸ்லிம்களின் இருப்பையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாயின் வெறுமனே சிவில் நிருவாகத்தின் அதிகாரங்களுள் சிலதை பகிர்வதால் மாத்திரம் முடியாது. முஸ்லிம்களின் உயிர் உடமைகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதாயின் இராணுவ ரீதியிலும் சில நடைமுறை மாற்றங்களை கொண்டுவருதல் வேண்டும். பொலிஸ் படையில் ஒரு முஸ்லிம் பிரிவை அல்லது முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை முஸ்லிம்களின் விகிதத்திற்கேற்ப நியமிப்பது போன்ற திட்டங்கள் இலங்கை தேசிய இராணுவத்திலும் ஒரு முஸ்லிம் படைப்பிரிவை உண்டுபண்ண வேண்டும்.



அதாவது ஓர் இராணுவப்படை உருவாக்கப்பட வேண்டும் என்பது இதன் கருத்தல்ல. மாறாக இலங்கை தேசிய இராணுவத்தில் கூடுதலாக முஸ்லிம்கள் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் சில நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேற்படி நிலைமைக்கு முக்கியமான காரணங்களுள் ஒன்றாக, தமிழ் தேசிய ஊடகங்களின் கருத்துப்படியும் புலிகளின் நிலைப்பாட்டின் படியும் இலங்கையில் இரண்டு இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு இராணுவங்களுக்குள்ளான (ஒன்று சிங்கள இராணுவம் மற்றையது தமிழ் தேசிய இராணுவமுமாகும்) "சிங்கள இராணுவம்" எனும் பதம் திட்டமிட்டு ஊடகங்களில் பிரயோகப்படுத்தப் பட்டுவருவதால் இலங்கையில் தேசிய இராணுவம் என்ற மனோபாவம் இல்லாமலாக்கப்பட்டு விட்டதை தற்கால நிகழ்வுகள் மூலம் அறியலாம்.

முஸ்லிம்கள் தாம்சாரும் நாட்டுக்கும் அரசாங்கத்திற்கும் நம்பிக்கையாகவும், கட்டுப்பட்டும் வாழ மார்க்க ரீதியாக (மதத்தினூடாக) வலியுறுத்தப்பட்டவர்கள். அதேவேளை அநியாயத்திற் கெதிராகவும் அநீதிக்கெதிராகவும் தன்மானத்துக்காகவும், உரிமைக்காகவும் போராட வேண்டும் என்றும் மார்க்கத்தினூடாக பணிக்கப்பட்டவர்கள்.

நாடெங்கிலும் பரந்து வாழும் முஸ்லிம்கள் இதுகால வரை அந்நிய சமூகங்களுடன் சேர்ந்தே வாழ்ந்து வருகின்றனர். நாட்டின் நாலா புறங்களிலும் முஸ்லிம்கள் மீது அவ்வப்போது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளும், கொடுமைகளும் இதுகாலவரை முஸ்லிம்களை ஆயுத கலாசாரத்தை நோக்கி நகர்த்தவில்லை. அதில் அவர்களுக்கு நாட்டமுமில்லை. முஸ்லிம்கள் கல்வி, கலாசார, பொருளாதார மீட்சியை ஜனநாயக ரீதியிலேயே எதிர்கொண்டு வருகின்றார்கள்.

ஆனால் தற்கால நிகழ்வுகளை நோக்குமிடத்து எதிர்காலத்திலும் இதுபோன்ற ஆரோக்கியமான சூழல் காணப்படும் எனும் நிலையை எந்த வகையிலும் உத்தரவாதமளிக்க முடியாது.

குறிப்பாக கிழக்கிலங்கை முஸ்லிம்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்ட வேளையில் இலங்கை பொலிஸ் பிரிவில் 550 முஸ்லிம்களை சேர்த்துக்கொள்ள மேற்கொண்ட முயற்சி, எதிர்காலத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்பில் கணிசமானதொரு பங்கினை வகித்திருக்கும் என்பதில் ஆறுதல் கொண்டாலும் தற்போது "தமிழ் பேசும் சிறுபான்மை" என்ற வரையறைக்குள் மேற்படி திட்டத்தை அடக்கிவிட்டதானது அதிர்ச்சிக்குரிய விடயமாகும்.

தமிழ் தேசிய ஊடகங்களின் கணிப்பில் "முஸ்லிம்கள் ஆயுதமேந்த முற்பட்டால் அது இஸ்லாமிய தீவிரவாதமாக மாறி அது உலக பயங்கரவாதமாக உருவெடுக்கும். அப்போது அதை அமெரிக்கா எவ்வாறு நோக்கும். அதன் பின் ஐ. நா. சபை அதை எவ்வாறு அணுகும்" என்ற வியூகத்தை அண்மை காலமாக எழுதி வருகின்றது. உரிமை போராட்டங்களும் விடுதலையெழுச்சிகளும் அமெரிக்காவினது கணிப்பிலேயோ ஐ. நாவின் ஆலோசனையிலோ முன்னெடுக்கப்படுவதில்லை என்பதை மேற்படி ஊடகங்கள் விளங்க வேண்டும். அப்படி அமெரிக்காவினதும் ஐ. நா. வினதும் கணிப்பினையே நாம் சரியென்று ஏற்பதாயின் L.T.T.E இன்று ஒரு பயங்கரவாத இயக்கமே என்பதை விளங்க வேண்டும்.

புலிகளின் நிலைப்பாட்டின் படி புலிகள்தான் தமிழ் பேசும் சிறுபான்மையினரின் ஏக பிரதிநிதிகள் என்றால் ......

- வடக்கிலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு அவர்களால் இதுவரையில் எந்த வகையான பிரதிநிதித்துவம் தரப்பட்டுள்ளது?
- காத்தான்குடி வாழைச்சேனை பிரதேசங்களில் புலிகளால் கொல்லப்பட்ட அப்பாவி முஸ்லிம்களின் விடயத்தில் இவர்களின் நிலைப்பாடென்ன? இக்கோர நிகழ்வினால் அனாதைகளாக்கப்பட்ட குழந்தைகள், விதவைகளாக்கப்பட்ட பெண்களின் பிரச்சினைகளை இவர்கள் எந்த வகையில் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்கள்.
- முஸ்லிம் கிராமங்களின் மீதும் முஸ்லிம்களின் மீதும் அவ்வப்போது கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித் தனங்கள். வன்முறைகளால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகளை (வாழைச்சேனை, மூதூர், மன்னார், மாவனல்ல, மாளிகாவத்த) எவ்வகையில் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்.
- மர்ஹூம் தலைவர் அஷ்ர.்.பின் படுகொலைக்குப் பின்னணியை துப்பறிவதில் இவர்களின் பிரதிநிதித்துவம் என்ன?
- "வடக்கிலிருந்து மனிதாபிமான உதவிகள் தெற்கிற்கு" என்று தலைப்பிட்டு அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை கொண்டுவந்த புலிகளின் மனித நேயத்தை சுட்டிக்காட்டிய தமிழ் தேசிய ஊடகங்கள் அதே காலத்தில் வாழைச்சேனை மூதூர் பிரதேச முஸ்லிம்கள் வன்முறையால் அகதிகளாக்கப்பட்ட விடயத்தில் இவர்களின் மனித நேயம் என்னவாயிற்று என்பதை, குறிப்பிட்ட ஊடகங்களோ தரப்பினரோ எவ்விடத்திலுமே குறிப்பிடவில்லை.

அண்மைக்காலமாக நம்பிக்கை ஒளிக்கீற்றுக்களாக சகோதரர் ஹாரிஸ் (பா. மன்ற உறுப்பினர்) போன்றவர்களின் முன்னெடுப்புக்கள் மன ஆறுதலை தந்தாலும் இளமையின் கொதிப்புக்கள் என்று இவர்களின் சிந்தனைகள் கொச்சைப்படுத்தப்படக்கூடாது என்பது குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

எடுக்கப்படும் தீர்வுகள் வடக்கு - கிழக்கு முஸ்லிம்களை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளாது பாராளுமன்றத்திலோ மாகாண சபைகளிலோ பிரதிநிதித்துவம் பெற முடியாத பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களையும் கருத்தில் கொண்டே தீர்வுகளை அணுக வேண்டும்.

## நுரைச்சோலை தபால் நிலையம் உண்மை வெளிச்சத்துக்கு வருமா?

அமைச்சர் அஸ்வர் அவர்களே! எல்லாம் வல்ல அல்லாஹ் மீது சத்தியமாக புத்தளம் நுரைச்சோலையில் அமைக்கப்பட்ட தபால் நிலையத்திற்கு மொத்தச் செலவு 65 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டது உண்மையா? இது புத்தளம் தொகுதி மக்கள் சார்பாக தங்களிடம் கேட்கும் கேள்வி? எனது குடும்பமும் நுரைச்சோலையில்தான் குடி இருக்கின்றார்கள். நுரைச்சோலை மக்களை ஏமாற்ற நினைக்க வேண்டாம். ஆனால் எல்லோரையும் ஏமாற்றவும் முடியாது என்பதை தாங்கள் உணர வேண்டும்.

நுரைச்சோலை மக்களின் புலம்பல், பலரிடம் வினவினேன். நவீன தபால் அமைக்கப்பட்டுள்ளதே எவ்வளவு செலவாகி இருக்கும்: நுரைச்சோலை மக்களின் பதில் அனைத்து செலவுகளும் 20 லட்சத்துக்குள்தான் இருக்கும். இவர்களின் பதில் கிடைத்தது. புத்தளம் இருந்து தான் நுரைச்சோலைக்கு சென்று தபால் நிலையத்தை சுற்றிப்பார்த்தேன். வியப்படைந்தேன். தபால் கட்டிடத்துக்கு 10 லட்சம் செலவாகியும் இருக்காது. இதன் உண்மையை அறிய வேண்டும். எனவே நான் கணக்காய்வாளர் நாயகம் எஸ்.சி. மாயதுன்ன அவர்களுக்கும் பாராளுமன்ற கணக்காய்வாளர்களுக்கும் அறிவித்துள்ளேன். உடன் விசாரணை செய்து மக்களுக்கு உண்மையை தெரியப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுள்ளேன். கூடிய கெதியில் கணக்காய்வாளர்கள் நுரைச்சோலைக்கு வருகை தருவார்கள். கணக்காய்வாளர்களுக்கு நுரைச்சோலை மக்கள் முழு மனதுடன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். காரணம் யார் ஆட்சியில் இருந்தாலும் அபிவிருத்தி என்று நடைபெறும் போது இளைஞர் சமுதாயம், பொது சேவையாளர்கள் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது, எப்படி அபிவிருத்திகள் நடைபெறுகிறது என்பதை நாம் அறிய வேண்டும்.

மக்களாகிய நாம் கொடுத்த "வாக்குப்பிச்சையினால்" பிரதேச சபையிலோ, நகர சபையிலோ, மாகாண சபையிலோ, ஏன் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் செல்வதற்கு வாக்களித்தோம். நமது வாக்குகளினால் கொழுத்த சம்பளம் மட்டுமல்ல பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், பஜிரோ வாகனங்கள், பிக்கப் வாகனங்கள் சாரதிகள், பியோன்கள் இன்னும் தொலைபேசி தீர்வையற்ற சாமான்கள் வாங்குவதற்கும் இத்தனை சலுகைகளும் உண்டு. தேர்தல் முடிந்ததும் இவர்களை காண முடிகின்றதா? ஊருக்கு என்ன தேவை என்பதுதான் இவர்களுக்கு தெரியுமா?



இத்தனை சலுகைகளையும் பெற்றுக் கொள்கின்ற இவர்களின் சேவை எப்படி இருக்க வேண்டும். நமது விலை மதிக்க முடியாத வாக்குகளைப் பெற்றுக்கொண்டு இவர்கள் தன் ஊருக்கு தான் சேவை செய்கின்றார்களா? நான் அன்றும் இன்றும் என்றும் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளன். இலங்கையின் முதல் முஸ்லிம் சபாநாயகர் மர்ஹூம் அல்ஹாஜ் எச். எம். இஸ்மாயில் சேவை புரிந்த புத்தளம், முன்னால் நிதி திட்டமிடல் அமைச்சர் மர்ஹூம் எம். எச். எம். நெய்னாமரைக்கார் அவர்களோடு ஒன்றிணைந்து அரசியல் செய்தவன். இலங்கை வரலாறுகளில் புத்தளம் மாவட்டத்தில் புத்தளத்தில் பிறந்த "கறைபடியாத கரங்கள்" இவர்கள் இருவரும் புத்தளம் மண்ணில் பிறந்த "மாணிக்கங்கள்"

புத்தளத்தின் பெயரை கெடுக்க வந்தவர்களை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்காமல் சட்டத்தின் பிடியில் ஒப்படைத்து இவர்களுக்கு தகுந்த தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். எத்தளம் போனாலும் புத்தளம் போகாதே புத்தளம் போனாலும் புத்தியுடன் நட - இனி வரும் அரசியல்வாதிகளே கவனம்.

எம். சி. இப்னு மசூத்
செயலாளர், ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர்.

*வெலிகம புஹாரி பள்ளிவாயல்...*

இதன் பின் மக்கள் இச் செய்கைக்கு எதிராக பல்வேறு ஆர்ப்பாட்டங்களைச் செய்தனர். ஏற்பட்ட நிலைமையை தணிக்கும் முகமாக கடந்த 29. செப்டம்பர் தொடக்கம் இப்பள்ளிவாசல் நிர்வாகம் முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

அதனை எதிர்த்து தனி நபர் உரிமையாளரின் பிரதிநிதிகள், மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் வழங்குத்தாக்கல் செய்தனர். இது தொடர்பாக முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களம் உரிய விளக்கத்தைத் தரும் வரையில், தனிநபர் உரிமையாளரின் பிரதிநிதிகளிடம் பள்ளிவாசலை ஒப்படைக்குமாறு தீர்ப்பு வழங்கியதை அடுத்து, கடந்த 3-10-2003ம் திகதி பிஸ்கால் அதிகாரி சகிதம் வந்து உரிமையாளரின் பிரதிநிதி ஒருவர் பள்ளிவாசலைப் பொறுப்பேற்றார். ஊர்மக்களின் பலத்த எதிர்ப்புக்கு ஈடுகொடுக்க இயலாமல் குறித் பிரதிநிதி பள்ளிவாசலைக் கைவிட்டுச் செல்ல நேர்ந்தது.

அதனை விட்டுக் கொடுக்க விரும்பாத தனிநபர் உரிமையாளரின் பிரதிநிதிகள் திரும்பவும் மாத்தறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். போதிய பந்தோபஸ்துடன் சென்று பள்ளிவாசலைப் பொறுப்பளிக்குமாறு வழங்கப்பட்ட தீர்ப்பையடுத்து நேற்று முன் தினம் (10-10-2003ம் திகதி) மாலை வெலிகம பொலிஸாருடன் மேலதிகமாக சுற்றயல் நிலையங்களிலிருந்தும் பெருமளவில் பொலிசார் வருவிக்கப்பட்டனர். பிஸ்கால் அதிகாரிகள் மாலை 6.30 மணியளவில் பலத்த பொலிஸ் பந்தோபஸ்துடன் குறித்த பிரதிநிதிகளுடன் பள்ளிவாசலுக்குள் நுழைந்தனர். பின் பள்ளிவாசலின் முற்புற வாயில் முற்றாக அடைக்கப்பட்டது. மாலை 6.40 மணியளவில் ம.்.ரிப் தொழுகைக்காக அதான் ஒலித்ததும் கட்டுக்கடங்காத மக்கள் வாயிற்காவலையும் தாண்டிச் சென்று தொழுகை நடத்தினர். பிஸ்கால் அதிகாரிகள் மக்கள் தொடர்ந்தும் வணக்கத்தில் ஈடுபடுவதைத் தடைசெய்தனர். பள்ளிவாசலின் சில உட்புறவாயில்கள் சீல் வைக்கப்பட்டன. பள்ளிவாசலின் உரிமையாளரின் பிரதிநிதிகளால் வெளிப்புறக் கதவுகளும் முன்புற பிரவேச கேற்றும் இழுத்து மூடப்பட்டன. இரவு (இஷா)த் தொழுகைக்கான நேரம் நெருங்கவே, மக்கள் பள்ளிவாசலினுள் நுழைய எடுத்த முயற்சி பொலிசாரால் தடுக்கப்பட்டது. கோபாவேசப்பட்ட மக்கள் அணிதிரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடலாயினர். பல வீடுகள் சேதமாக்கப்பட்டன. சிலர் தாக்கப்பட்டனர். பொலிஸ் ரோந்து சேவை தீவிரமாக்கப்பட்டதைத் தொடர்ந்து நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

சுமார் 150 வருடகாலமாக பாங்கு ஒலித்து, தொழுகை நடாத்தப்பட்ட பள்ளிவாசல் ஒரே இரவில் இழுத்து மூடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வீடுகள் தோறும் கறுப்புக் கொடிகள் போடப்பட்டன. அவை பின்னர் பொலீசாரால் அகற்றப்பட்டன. விடியற்காலையில் பிரதான பாதையில் இடத்துக்கிடம் டயர்கள் எரிந்து கொண்டிருந்தன. மறுநாள் (11-10-2003 திகதி) புனித பராஅத் இரவு நிகழ்ச்சிகள் புகாரிப் பள்ளிவாசலுக்கு எதிரே, வெலிகம அக்குரஸ்ஸ பிரதான பாதை அருகே மௌலவி புர்கான் தலைமையில் இடம்பெற்றது. பெருந்தொகையான மக்கள் இதில் பங்கேற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் பதிவின் முக்கியத்துவம் நமது மக்கள் உணராத பக்கம்

வருடா வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஜூலை மாதம் நடுப்பகுதிவரை நடைபெறும் வாக்காளர் இடாப்புத் திருத்த வேலைகள் இவ்வருடமும் முடிவுற்றுள்ளது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புச் சட்டம் அத்தியாயம் XIV உறுப்புரை 89ன் படி.

அ) குடியியல் தகுதியீனம் என நீதி மன்றத் தீர்ப்புப் பெற்று குறித்த காலம் முடிவுறாதிருப்பவர்கள்.

ஆ) தண்டனைச் சட்டக்கோவை 188-201 பிரிவு வரை குறித்துரைக்கப்பட்ட குற்றமிழைத்தவர்கள்.

இ) ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனையைப் பெற்று 5 வருடங்கள் தொடக்கம் 7 வருட காலம் முடிவுறாதிருப்பவர்கள் அத்துடன்,

ஈ) மரணித்தவர்கள் சித்த சுயாதீனமற்றவர்கள், நிரந்தர வதிவிட மாற்றம் பெற்றவர்கள், வேறு நாட்டில் பிரஜா உரிமை பெற்றவர்கள் தவிர்ந்த ஏனையோர் வாக்காளர் இடாப்பில் பெயர் பதிவு பெறத் தகுதியுள்ளவர்கள். இதுபற்றி 1980ம் ஆண்டின் 44ம் இலக்க தேருநர் பதிவுச் சட்டம் 1ம் பகுதியில் விதந்துரைக்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 1ம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களும் ஜூன் மாதம் 1ம் திகதியன்று வதிவிடத்தைக் கொண்டுள்ளவர்களும் பதிவு பெறத் தகுதியுள்ளவர்களாகும்.

இவர்கள் தமது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை ஒவ்வொரு வருடமும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவரவர்களின் பொறுப்பாகும். இதற்குரிய ஏற்பாடுகளைத் தேர்தல் திணைக்களம் ஒவ்வொரு வருடத்திலும் ஒக்டோபர் - டிசம்பர் மாதங்களில் பொது அறிவித்தல் மூலம் செய்து வருகிறது. இக்காலப் பகுதிக்குள் வாக்காளர் இடாப்பில் பெயர் சேர்த்துக் கொள்ளப்படாத ஒரு நபர் அல்லது அவரது பிரதிநிதி அந்தந்த மாவட்ட பதியும் அலுவலருக்கு (உதவித் தேர்தல் ஆணையாளர்) மனுச் செய்ய முடியும். குறித்த காலக்கெடு முடிவுற்ற பின் செய்யப்படுகின்ற எந்தவொரு மனுவும் தேர்தல் திணைக்களத்தினால் நிராகரிக்கப்படும். அதுபோல கணக்கெடுக்கும் அலுவலரினால் (கிராம உத்தியோகத்தர்) பதிவு செய்யப்பட்ட ஒரு பெயரை நீக்கக் கோரி ஆட்சேபிக்கின்ற உரிமையையும் பொதுமக்களுக்கு தேர்தல் திணைக்களம் வழங்கியுள்ளது. இதுவும் மேற்குறித்த காலப்பகுதிக்குள்ளேயே செய்யப்படுதல் வேண்டும்.

வதிவிட மாற்றத்தின் மூலம் நபரொருவர் தன்னைப் புதிய வதிவிடத்தில் தேருநர் இடாப்பில் பதிந்து கொள்வதாயின், அந்நபர் ஏற்கனவே வசித்து வந்த பிரிவுக்குப் பொறுப்பான கணக்கெடுக்கும் உத்தியோகத்தர் / கிராம உத்தியோகத்தரிடமிருந்து பழைய வதிவிடத்தில் தாம் பதிவு செய்யப்படவில்லை என்பதை அத்தாட்சிப்படுத்திய கடிதத்தை புதிய வதிவிடத்திற்குப் பொறுப்பான பதியும் அலுவலருக்கு சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

இந்நடைமுறை 1995ம் ஆண்டுக்கு முன் நடைமுறைப்படுத்தப்பட்டதாக அறிய முடியவில்லை ஆயினும் இது இரட்டைப் பதிவு மோசடியை தவிர்த்துக் கொள்ளும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்டதாகும்.

தேர்தல் ஒன்று நடைபெற்றாலொழிய தமது பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி அக்கறைப்படாத மக்களாகவே எமது மக்கள் உள்ளது மிகவும் ஆபத்தானதாகும். வாக்குச் சாவடிக்குச் சென்ற பின்னரே எத்தனை பேரின் பெயர் பதிவு செய்யப்படவில்லை என்பதை அறிந்து, கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்கள் மீது பழி பாவம் சுமத்தும் கைங்கரியம்தான் நடைபெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

வருடா வருடம் வாக்காளர் இடாப்புத் திருத்தப் படிவங்கள் விநியோகிக்கும் முன்னரே எந்தெந்தப் பிரதேசத்தில் எவ்வெப்போது வாக்காளர் பதிவு நடைபெறும் என்பதை அரசியல் கட்சிகளுக்கு அறிவிக்கும் நடைமுறையையும் தேர்தல் திணைக்களம் கையாண்டு வருகிறது.

ஆயினும் எமது பிரதேச அரசியல் கட்சிகள் உட்கட்சிப் பூசல்களையே முதன்மைப்படுத்தி செயற்பட்டு வருவதை மனவேதனையுடன் குறிப்பிட்டாக வேண்டும். எல்லாப் பிரதேச செயலாளர் காரியாலயங்களிலும், கிராம உத்தியோகத்தர் காரியாலயங்களிலும் வாக்காளர் இடாப்புப் பட்டியல்கள் உள்ளன.

தற்போது அரசியல் கட்சிகளின் சிபார்சின் மூலம் நியமனம் செய்யப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் பதவி வகித்து வரும் பலரிடம் பிரிவு வாரியான சகல தரவுகளும் உள்ளன. இவ்விவரங்களின் அடிப்படையிலும், கட்சித் தொண்டர்களின் மூலம் திரட்டப்பட்ட தரவுகளின் மூலமும் யார் யார் பதிவுக்குத் தகைமை பெற்றுள்ளார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களை



பதிவு செய்யும் ஏற்பாடுகளை முன்னின்று செய்யலாம். இவ்வாறு செய்வதன் மூலம் பதியப்படாது தவறவிடப்படுகின்ற நூற்றுக்கணக்கான வாக்குகளைப் பதிந்து கொள்ளக் கூடியதாகயிருக்கும்.

ஏனெனில், தொகுதிவாரியான தேர்தல் முறையாயிருந்தாலும் அல்லது விகிதாசாரத் தேர்தல் முறையாயிருந்தாலும் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தீர்மானிக்கின்ற பெரும் சக்தி வாக்காளர் பதிவுகளிலேயே தங்கியுள்ளது. அத்துடன் ஒவ்வொரு இனத்திலும் விகிதாசாரத்தைக் கணிக்கின்ற முக்கிய ஆவணமாக இவ்வாக்காளர் இடாப்புப் பட்டியலே அடிப்படையாகக் கொள்ளப்படுவதோடு எந்தவொரு அரச நிருவாக செயற்பாட்டின்போதும் "இலங்கைப் பிரஜை" எனும் அடிப்படைத் தகைமைக்குரிய முக்கிய ஆவணமாக இவ்வாக்காளர் பட்டியலே உள்ளதென்பதை உணர்தல் வேண்டும். கடந்த காலங்களில் பிரதேச வாரியான பதவி நியமனங்களின் போதும் வன்செயல் நஷ்டஈடு கோரிய போதும் வாக்காளர் இடாப்பு பிரதி சமர்ப்பிக்காதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு அவர்கள் கைசேதப்பட்டுள்ளதை நாம் அறிவோம்.

மலையக மக்கள் தமது வாக்குரிமையின் மகிமையை உணர்ந்துள்ள அளவிற்கோ அல்லது அம்பாறை நகர் போன்ற பெரும்பான்மைப் பிரதேசத்தில் வசிக்கின்ற தமிழ் முஸ்லிம் மக்கள் அறிந்துள்ள அளவிற்கோ அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேச முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொள்ளவில்லை என்பதை உறுதியாகக் கூறலாம்.

மேலும் வாக்காளர் இடாப்புத் திருத்த வேலைகளுக்காகச் செல்லும் அரச உத்தியோகத்தர்களிடம், பெரும்பான்மையான மக்கள் வாக்கு வேட்டைக்குச் செல்லும் வேட்பாளர்களிடம் நடந்து கொள்ளும் பாங்கில் செயற்படுவது அவர்களது அறியாமையை குறிக்கின்றது. தாங்கள் யாருக்கும் வாக்களிக்கப் போவதில்லை என்றும் தம்மை வாக்காளர் இடாப்பில் சேர்த்துக் கொள்ள தேவையில்லை என்றும், அவர்கள் தமது வெறுப்பைக் காட்டிக் கொள்வது தவிர்க்கப்பட்டால் கடமைக்காகச் செல்லும் அரச உத்தியோகத்தர்கள் திருப்தியடைவார்கள் என்பதும் குறிப்பிடக் கூடியது.

எம். ஏ. மஹ்றுன் நிஸா
அக்கரைப்பற்று

---



## Muslim Kural News Paper

முஸ்லிம் குரல் பத்திரிகை

181/1, Ananda Mawatha, Colombo -10

Advertisement Rates

விளம்பரக் கட்டண விபரம்

| Page Size<br>பக்க அளவு | Colour or Black & White<br>கலர் அல்லது கறுப்பு வெள்ளை | Rate<br>கட்டணம் |
|---|---|---|
| Full Page<br>முழுப் பக்கம் | 4 Colour (4 கலர்)<br>2 Colour (2 கலர்)<br>Black & White (கறுப்பு வெள்ளை) | Rs. 60,000/-<br>Rs. 40,000/-<br>Rs. 30,000/- |
| Half Page<br>அரைப் பக்கம் | 4 Colour<br>2 Colour<br>Black & White | Rs. 30,000/-<br>Rs. 20,000/-<br>Rs. 15,000/- |
| Quarter Page<br>கால் பக்கம் | 4 Colour<br>2 Colour<br>Black & White | Rs. 15,000/-<br>Rs. 10,000/-<br>Rs. 7,500/- |
| Half - Quarter Page<br>அரைக்கால் பக்கம் | 4 Colour<br>2 Colour<br>Black & White | Rs. 7,500/-<br>Rs. 5,000/-<br>Rs. 4,000/- |
| 1 Column x cm<br>1 கலம் x செ.மீ.<br>1 கலம் = 3 செ.மீ.<br>1 Column = 3 cm | 4 Colour<br>2 Colour<br>Black & White | Rs. 150/-<br>Rs. 100/-<br>Rs. 75/- |

Front Page - Extra 30% Premium Page - Extra 20%

முன் பக்கம் - மேலதிகம் 30% விருப்பத்திற்குரிய பக்கம் - மேலதிகம் 20%

சிறு விளம்பரங்கள் - Classified Advertisements

முதல் 20 சொற்களுக்கு Rs. 200/- மேலதிக சொல் ஒன்றுக்கு Rs. 10/-

First 20 words Rs. 200/- Per Additional word Rs. 10/-

விளம்பர முகாமையாளர், முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்

Advertisement Manager, Muslim Kural Publication



### மண்ணுக்குள் விழுந்த.....

பாதகத்தை உணர்கின்றவர்களதும், பாதகத்தால் பாதிக்கப்படுகின்றவர்களதும் தலையாய கடமையாகும். எல்லாச் சூழல்களும் நம்மைப் போன்ற மனிதர்களால்தான் தோற்றுவிக்கப்படுகின்றன. பலமானவர்கள் அச்சூழலை மாற்றியமைப்பதற்கான தியாகங்களை செய்யத்தான் வேண்டும். இஸ்லாமிய அடிப்படைகளை நீங்கள் கூறியது போல் இஸ்லாமிய நாட்டிலோ அல்லது இஸ்லாத்தை பின்பற்றுவோர் பெரும்பான்மையாக வாழும் இடத்திலேதான் பின்பற்றலாம், பின்பற்ற வேண்டும் என்று இஸ்லாம் கூறியிருக்கவில்லை. இஸ்லாத்தினை தனது இலட்சியமாக எடுத்து வாழும் எந்த மனிதனும் அதன் அடிப்படைகளை எங்கும் பின்பற்றி ஒழுகலாம். ஒழுக வேண்டும். இன்று நமது சமுதாயம் அதன் அசல் தன்மையிலிருந்து விலகி நிற்கின்றது. இது மறுமை பற்றிய எமது நம்பிக்கைகளுக்கு பாதகமானதும் உலக நோக்கில் நமது கௌரவத்திற்கும் இருப்பிற்கும் கேடுவிளைவிப்பதாகவுமே அமைகிறது. எனவே அசனார் போன்ற கிராம உத்தியோகத்தர்களால் எமது மக்கள் பாதிக்கப்படாமலிருப்பதற்கான இறுக்கமான நடவடிக்கைகளை ஏற்படுத்தியேயாக வேண்டும் என்று பாத்தும்மா விளக்கினாள். ஹனீபா ஆசிரியர் தனது மக்கள் நலன்புரி ஒன்றியத்தினை உடனடியாக கூட்டுவதென்றும் அக்கூட்டத்தின் போது பாத்தும்மா ஆயிஷா போன்ற பல முற்போக்கு பெண்களும் கலந்து கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

காலங்கள் மிக விரைந்து சென்று கொண்டிருக்கின்றன. ஹனீபா ஆசிரியர், பாத்தும்மா, மக்கள் நலன்புரி ஒன்றியம் மேற்கொண்ட ஊர்வலம்,-ஆர்ப்பாட்டங்கள், பெட்டிசன் காரணமாக அசனார் ஜி.எஸ்.ஓ விசாரிக்கப்பட்டு குற்றங்கள் நிரூபிக்கப்பட்டதனால் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டார். இன்னும் இரு கிராம உத்தியோகத்தர்களுக்கும் இதேகதியே ஏற்பட்டது. *(யாவும் கற்பனை)*

### மொழிகளுக்கு நடந்த கதி

மாவீரன் அலெக்சாண்டர் பேசிய கிரேக்க மொழியை இன்றைக்கு சிறியதொரு கூட்டமே பேசுகிறது. இயேசு நாதர் பேசிய ஹீப்ருவும், ராமாயாணத்தைத் தந்த சமஸ்கிருதமும் நடைமுறைப் பேச்சில் இல்லாமல் போய் விட்டது.

### மானா மக்கீன் தருவது



### முஸ்லிம்கள் வழக்கில் புகுந்துவிட்ட 'சீதேவி'


சீதேவி என்ற சொல் முஸ்லிம்களின் பேச்சு வழக்கில் இருந்து வருவதைக் காண்கிறோம். மற்றவர்களைப் பாராட்டி மேன்மைப்படுத்தவும் நல்லவர்களையும் சிறப்புக்குரியவர்களையும் இந்த வார்த்தையைக் கொண்டு ஒப்பிட்டு (அதாவது சீதேவியான மனிதன் சீதேவியான பிள்ளை என்று) பெருமைப்படுத்தி பாராட்டவும். இப்படிப் பல நிலையிலும் பயன்படுத்தி வரும் வழக்கம் இருந்து வருகிறது. சன்மார்க்கச் சொற்பொழிவிலுங் கூட சிலர் "ஈமானுள்ள சீதேவிகளே" என்று சொல்வதையும் பார்த்திருக்கிறோம்.

"ஸ்ரீதேவி" என்ற சொல்தாம் "சீதேவி" என்று மருவி வழக்காற்றில் இருந்து வரும் சொல்லாகும். ஸ்ரீதேவி என்பது இந்துக் கடவுள்களில் ஒன்றைக் குறிப்பிடும் பெயராகும். இந்த உண்மை விளங்காமலேதான் சீதேவி என்ற சொல் நம் வழக்கில் பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது என்று தெரிய வருகிறது.

தமிழ் இலக்கிய மரபுப்படி ஸ்ரீ என்பதுதான் சீ என்று கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீதேவி என்பதுதான் சீதேவி என்று எவ்வித ஐயமுமின்றி தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே, முஸ்லிம்கள் சீதேவி என்ற சொல்லை தவிர்த்திடுவோமாக.

சா.அஹமது மீரான்,
சீருடையார்புரம்,
நன்றி : மணிச்சுடர்.

### பெண்களுக்கு வழுக்கை வராதா?



வரவேண்டும் என்று ஆசை அல்ல. நம்புங்கள். ஓர் ஆய்வுக்காக இப்படியொரு கேள்வியை நாலு டாக்டர் மருத்துவர்களிடம் கேட்டுப் பார்த்ததில் நல்ல மகிழ்ச்சியான செய்தி!

அவர்களுக்கு வழுக்கை ஏற்படாது.

வயதாலும், பரம்பரையாலும், டெஸ்டோஸ்டிரோன் (Testosterone) எனும் இயக்குநீர் குறைபாடு காரணமாகவும் ஆண்களுக்கு வழுக்கை விழுகிறது. மாறாக, பெண்களுக்கு இயற்கையிலேயே சற்று மிகையாக அமைந்துள்ள "சுயதடுப்பாற்றல்" (Auto Immune Satate) நிலையும் மரபுப் பண்பும் (Heredity) ஈஸ்ட்ரோஜன் (Oesteogen) என்னும் இயக்குநீரின் செயல்பாடும் அவர்களுக்கு வழுக்கை விழுவதைத் தவிர்க்கின்றன.

அப்பாடா! இப்பகுதியில் ஆயிரமாயிரம் பெண் அபிமானிகளுக்கு நிம்மதியான தகவல்!

## முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம்

முஸ்லிம் தேச ஆவணப்படுத்தலுக்கும், பாதிக்கப்பட்டவர்களின் நட்ட ஈட்டுக் கோரிக்கைக்குமான ஆவணக் காப்பகம் செயற்படத் தொடங்கி உள்ளது. 1983ம் ஆண்டுக்குப் பின்னர் அரச, தமிழ் இயக்கப் பயங்கரவாதத்தால் மௌத்தான, காணாமல் போன, அங்கவீனமுற்ற இலங்கை முஸ்லிம்களின் தகவல்களை ஆவணப்படுத்தவும், ஆவணக்காப்பகமையம் ஊடாக நட்ட ஈட்டுக் கோரிக்கையை வென்றெடுக்கவுமான செயற்திட்டம் ஒன்றிற்காக நமது மக்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன.

தற்போதைய தேசிய இனப் பிரச்சினைச் சூழ்நிலையில் முஸ்லிம்களின் இழப்பு எவ்வித பெறுமதியற்ற ஒன்றாகவும் கவனிப்பாரற்ற நிலையிலும் காணப்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதுவரையில் 1983ம் ஆண்டில் இருந்து "முஸ்லிம்கள்" என்பதற்காக 5000 க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே எமது இழப்பை பெறுமதியுள்ளதாக மாற்றுவதற்கு எமது இழப்பின் விபரத்தை ஆவணப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. இந்த பெரும் சமூக வேலைத்திட்டத்தில் தங்களை இணைத்து கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

எமது சகோதரர்களின் இழப்புக்களில் அக்கறையுள்ள சகல இயக்கங்களும், சமூக சக்திகளும் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை தயார் செய்து எமக்கு அனுப்பி வைக்குமாறு தங்களை சமூகத்தின் சார்பாக அழைக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட சகல மக்களினதும் குடும்பங்களுக்கு மாதிரி விண்ணப்பப்படிவம் கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். சமூக இயக்கங்கள் தனி மனித சக்திகள் இது தொடர்பாக எம்முடன் இணைந்து செயற்பட முன் வருமாறு வேண்டுகின்றோம்!

தகவல்களை அனுப்ப வேண்டிய முகவரி

முஸ்லிம் தேச
ஆவணக் காப்பகம்
181/1 மாளிகாகந்த வீதி, (வைற்பாக்)
கொழும்பு 10.

## மல்வானை முஸ்லிம் மாதர் சங்க விஷேட பொதுக் கூட்டம்

மல்வானை முஸ்லிம் மாதர் சங்கத்தின் விஷேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 20ம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அஹதிய்யாப் பணிமனைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

எம்.எச்.எம். அஷ்ரஃப் நினைவு அரங்கில் நடைபெறவுள்ள இந்தப் பொதுக் கூட்டத்தின் போது, வறுமை ஒழிப்பு, வீட்டுக் கைத்தொழில், தொழிற்பயிற்சி, கலாசார மேம்பாடு, குடும்ப அரோக்கியத்தில் தாயின் பங்களிப்பு முதலான விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன.

மல்வானை மற்றும் மல்வானையைச் சூழவுள்ள ஐந்து கிராம சேவகர் பிரிவுகளில் காணப்படும் சுமார் 10 கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்களும், யுவதிகளும் கலந்து கொள்ள இருப்பதாக அமைப்பின் உதவிச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தின் 40க்கும் மேற்பட்ட முஸ்லிம் கிராமங்களில் வசிக்கும் முஸ்லிம் மாதர் களின் ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்துள்ள இந்த அமைப்பு முஸ்லிம் மாதர் மேம்பாட்டுக்காக பல்வேறு பாரிய செயற்திட்டங்களையும் முன் வைத்து இயங்கி வருகிறது.

## இந்த நேரங்களில் இப்படி இப்படி எல்லாம் நம் உடல்!

+ அதிகாலை 4 மணிமுதல் 6 மணி வரை நம் உடலில் உஷ்ண நிலை உயர ஆரம்பிக்கிறது.

+ இந்த நேரத்தில் கனவுகளும் அதிகம், இதயத்துடிப்பு ஊக்குவிக்கப்படுகிறது. ஆணுக்கும் பெண்ணுக்கும் மகிழ்ச்சி தரும் நேரம்

+ காலை 10 மணிக்குப் பிறகு மேலும் உடல் உஷ்ணம் அதிகரிப்பு. ரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகமாகி தசைகளுக்கும் மூளைசெல்களுக்கும் அதிக சக்தி கிடைக்கிறது. மூளை சம்பந்தமான வேலைகள் தொடங்க சரியான நேரம்.

+ பகல் 1 மணிக்குப் பிறகு பெரும்பாலானோருக்குக் களைப்பு ஏற்பட்டுவிடும். அவர்கள் தங்கள் செயல்திறனை இழக்கிறார்கள். இந்நேரத்தில் ஆராய்ச்சி, விவாதம் போன்றவைகளைத் தவிர்ப்பது நல்லது. ஆனால், 3 மணிக்கு மீண்டும் உடல் சுறுசுறுப்பு அடையும்.

+ மாலை 4 மணிமுதல் 5 மணிவரை உடற்பயிற்சிக்கு ஏற்றவிதமாக உடல் இருக்கும். இந்நேரத்தில் உடல் உஷ்ண நில உச்சத்தில் இருக்கிறது.

+ மாலை 6 மணிக்குப் பிறகு நோயாளிகளாக இருப்போரது நோய்நிலை தீவிரமடைகிறது.

+ இரவு 7 மணிக்கு அலர்ஜிக் பிரச்சினைகள் அதிகமாகின்றன. தோல், ஆஸ்மா, சைனஸ் உள்ளவர்கள் அவதிப்படுவார்கள். அலர்ஜியை உண்டுபண்ணும் ஹிஸ்டமின் அதிகமாக இந்நேரத்தில் சுரப்பதே காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதமுனையில் நடந்த உண்மைச் சம்பவம்

# தொழிலுக்காக ஆட்டோவுடன் சென்ற ஒருவர் ஒரு வருடமாகியும் திரும்பி வரவில்லை

மருதமுனையிலிருந்து எம். எல். எம். முஸ்தபா

மருதமுனை 3ம் பிரிவு றம்ளார் முஹம்மது நஸார் (வயது 32) என்பவர் பெரிய நீலாவணை முஸ்லிம் பிரிவிலுள்ள மாவடி வீதியில் வசிக்கும் ஒரு ஏழைப் பெண்ணை திருமணம் செய்து ஒரு குழந்தையின் தகப்பனாவார். இவர் சொந்தமாக ஆட்டோ ஒன்றினை வைத்து தொழில் செய்து வந்தார். அந்த ஆட்டோ இலக்கம் 201 - 2754. நிறம் பட்டர் கலர். கடந்த 2002 - 08 - 22ம் திகதி பி.ப. 5.30 மணியளவில்தான் வழமையாக ஆட்டோவை நிறுத்தும் இடமான மருதமுனை பிரதான வீதி அல் மனார் மத்திய கல்லூரிக்கு முன்பாக நிறுத்தி இருந்த சமயம் மூன்று நபர்கள் வந்து வாடகைக்காக அழைத்துச் சென்றதாக கண்டவர்கள் கூறுகின்றார்கள்.

அழைத்துச் சென்ற மூவரில் ஒருவர் கால் ஊனமானவர் என்றும் கூறுகின்றனர். அம்மூவரும் நிச்சயமாக பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் என்றும் வாதிட்டுக் கூறுகின்றனர். எனினும் ஆட்டோவுடன் சென்ற முகம்மது நஸார் என்பவர் திரும்பி வராமையை சம்பவம் நடந்த அடுத்த நாள் அதாவது 23.08.2002ம் திகதியே அவரது பெற்றோருக்கு முகம்மது நஸாரின் மனைவி வந்து கூறினார்.

இச்செய்தியைக் கேட்ட பெற்றோர் உடனடியாகச் சென்று யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு உறுப்பினரிடம் விடயத்தைக் கூறி அவரது ஆலோசனையுடன் கல்முனை பொலிஸ் நிலையத்திலும், விடுதலைப் புலிகளின் கல்முனைக் காரியாலயத்திலும் முறைப்பாடுகளைச் செய்து விட்டு குடும்பத்தவர்களின் துணை கொண்டு தேடுதல் நடத்தப்பட்டன. எனினும் எதுவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை. அதனைத் தொடர்ந்து கல்முனையிலுள்ள புலிகளின் காரியாலயப் பொறுப்பதிகாரியின் உதவியுடன் கொக்கட்டிச்சோலைக்குச் சென்று அம்பாறை. மட்டக்களப்பு புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் கௌசல்யன் அவர்களைச் சந்தித்து நேரடியாக விடயத்தைத் தெரிவித்தனர் முகம்மது நஸாரின் பெற்றோர்.

ஆனால் அவரால் தெரிவிக்கப்பட்ட பதிலால் ஏமாற்றமடைந்து செய்வதறியாது திகைத்து திரும்பினார்கள் அவர்கள். அங்கு கௌசல்யன் தெரிவித்ததென்னவெனில் தமிழ் போராளிகள் எவரும் உங்கள் மகனைக் கடத்தி இருக்கமாட்டார்கள். அதற்கு எமது இயக்கம் தடை விதித்திருக்கின்றது. நீங்கள் கல்முனைப் பொலிசாருக்கு விடயத்தைக் கூறி அரசாங்க கட்டுப்பாட்டு பிரதேசங்களில் தேடிப்பாருங்கள் எனத் தெரிவித்தார்.

இருந்தும் தமிழ்ப் பிரதேசங்களில் தேடுதலை மேற்கொள்ள அவரிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்று அக்கடிதத்தை கல்முனை புலிகளின் காரியாலயத்தில் ஒப்படைத்து புலிகளின் உதவியுடன் தமிழ்ப் பிரதேசங்களில் தேடுதல்களும் நடத்தப்பட்டன. இதற்கிடையில் கல்முனைப் பொலிசிலும் மறுபடியும் சென்று முறைப்பாடு செய்து நாடு பூராவிலுமுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்து. வானொலி. பத்திரிகையென சகலவற்றுக்கும் செய்தியைத் தெரிவித்து அறிவித்தல்களும் கொடுக்கப்பட்டன. எனினும் நாட்கள் கடந்ததே ஒழிய காணாமல் போன முகம்மது நஸாரைப் பற்றி எந்த விதமான தகவல்களும் கிடைக்கவில்லை.

எனினும் நஸாரின் பெற்றோர் சளைக்காமல் கிராமம். கிராமமாகச் சென்று தேடுதல் நடத்தினர். கிழக்கிலுள்ள புலிகளின் காரியாலயங்களில் பெரும்பாலானவற்றுக்குச் சென்று விசாரிக்கப்பட்டன. எந்த விதமான தகவல்களும் கிடைக்கவில்லை. செய்வதறியாது தமது மகனை இழந்து தவித்த பெற்றோர் மீள முடியாத துக்கத்தில் இருக்கையிலே சில தமிழ் இளைஞர்கள் அவர்களிடம் வந்து காணாமல் போனவரின் விபரங்களைப் பெற்றுச் சென்றனர். எனினும் பின்னர் அவர்கள் திரும்பி வரவே இல்லை.

இது நடந்து சில காலம் சென்ற நிலையில் இன்னும் சில தமிழ் இளைஞர்கள் வந்து பெற்றோரிடம் விசாரித்து விட்டு உங்கள் மகனை நாங்கள் மீட்டுத் தருகிறோமென்று வாக்குறுதியளித்து செலவுகளுக்கு பணமும் பெற்றுச் சென்றுள்ளனர். பின் சிறிது காலம் சென்ற நிலையில் மீண்டும் வந்து உங்கள் மகனை உங்களூர் முஸ்லிம் பொடியன்களும் சேர்ந்து கடத்தியிருக்கலாம் என்று சொல்லி மீண்டும் பணம் பெற்றுச் சென்றிருக்கின்றார்கள்.


இச்சம்பவங்கள் நடந்து நாட்கள் உருண்டோடி மாதங்களாகி வருடம் ஒன்றையும் தாண்டி விட்டது. ஆன போதிலும் இன்னும் உருப்படியான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை. கல்முனைப் பொலிசாரோ முறைப்பாடு பதிவு செய்ததோடு தமது கடமை முடிந்து விட்டது என்று எதுவுமே செய்யாமல் கிடப்பிலே போட்டுள்ளார்கள். விடுதலைப் புலிகளின் கல்முனைக் காரியாலயமோ. தங்களுக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. நீங்கள் முஸ்லிம் பிரதேசங்களில் தேடுதல் நடத்துங்கள் என்று கையை விரித்து விட்டார்கள். ஊரின் சமாதான சபையோ, பள்ளிவாசல் நிர்வாகமோ தமக்கேன் ஊர் வம்பு என்று ஒதுங்கி விட்டது. ஆனால் தொழிலுக்காக தனது ஆட்டோவுடன் சென்ற முகம்மது நஸாருக்கு என்ன நடந்தது? அவர் உயிருடன் இருக்கின்றாரா? என்பதை இறைவனும் அவரைக் கூட்டிச் சென்றவர்களுமே அறிவார்கள்.

இன்று வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம்களின் நிலை இதுதான். வீட்டை விட்டு வெளியேறினால் திரும்பி வருவது நிச்சயமில்லாத நிலையாகி விட்டது. தமது மகன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையுடன் முகம்மது நஸாரின் பெற்றோர் இருந்து கொண்டிருக்கின்றனர். (மேற் குறித்த ஆட்டோவினை யாரும் கண்டால் 'முஸ்லிம் குரல்' காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# புகை பிடித்தலற்ற உலகை நோக்கி.....! (10)

### புகைத்தல் எதிர்ப்புப் பிரசார நடவடிக்கை

மனித இனம் புகையிலை உற்பத்திகளுக்கு முன் தழுவிய பயங்கர தோல்வியை தனது வேறெந்த எதிரிகளின் முன்னிலையில் தழுவவில்லை. தமது நுகர்வோர் தொகையை நாளாந்தம் அதிகரிக்கச் செய்வதில் சிகரட் கம்பனிகள் முனைப்போடு கருமமாற்றுகின்றன. உலகிலேயே நுகர்வோரை மிக அதிகமாக அடிமைப்படுத்தும் போதை வஸ்து புகைத்தலே. தனது உள்ளடக்கத்தைப் பட்டியலிடாத ஒரேயொரு உற்பத்திப் பொருளான சிகரட்டை தமது வாழ்க்கைக்கு நல்ல பொருளாக தெரிந்தெடுப்பதில் வயது. பால். மத வித்தியாசமின்றி பெரும்பாலானோர் ஈடுபட்டுள்ளமை கண்கூடு. இந்நிலையில் புகைப்பிடித்தல் எதிர்ப்புப் பிரசாரம் வேகத்துடனும். விவேகத்துடனும்



முன்னெடுத்துச் செல்லப்படவேண்டியது அவசரத் தேவையாகும். சிகரட் பக்கெட்களில் "புகைத்தல் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடியது." "புகைத்தல் புற்றுநோயை ஏற்படுத்துகின்றது" போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்டிருப்பது சிகரட் உற்பத்தியாளர்கள் புகைத்தலுக்கெதிராக பிரசாரம் செய்கின்றனர் என்ற கருத்தை வழங்காது. மாறாக சட்டத்தை அனுசரித்து இவ்வாசகங்களைப் பொறிக்கின்றனர்.

எச்.அப்துல் நாசர் (ரஹ்மானி)
பொதுச் செயலாளர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை.

பொதுவாக வல்லரசுகள் முதல் வறுமை நாடுகள் வரை புகைத்தலுக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொள்கின்றன. என்றாலும் புகைத்தல எதிர்ப்புப் பிரசார நடவடிக்கை இன்னும் பலமாக பல கோணங்களிலிருந்தும் பொறுப்புணர்வுடனும், இதய சுத்தியுடனும் முடுக்கிவிடப்பட வேண்டும். அரச சார்பு, அரச சார்பற்ற நிறுவனங்கள், அமைப்புக்கள், பொறுப்பான பதவிகளில் அமர்ந்திருப்போர், ஆசிரியர்கள், துறை சார்ந்தோர், அறிஞர்கள், மதத்தலைவர்கள், பெற்றோர்கள் போன்றோர் தமது மகத்தான பங்களிப்புக்களை இதற்கு நல்கலாம். பிரதானமாக புகைத்தலின் அனைத்துவிதத் தீங்குகள் பற்றியும் மக்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இன்டர்நெட் முதலிய ஊடகங்களை இப்பிரசார நடவடிக்கைக்கு பரவலாக பயன்படுத்த வேண்டும். வளர்ந்து வரும் சிறார்களையும் இக்கொடிய அபாயத்தில் மாட்டிக் கொள்ளா வண்ணம் அவர்களை அறிவூட்டி பயிற்றுவிக்க வேண்டும். இது சம்பந்தமாக பள்ளிவாயில்கள், ஏனைய வணக்கஸ் தலங்களுக்குள்ளும், வெளியிலும் உபன்யாசங்கள் நிகழ்த்தப்பட வேண்டும். புகையிலை உற்பத்திகளின் தீங்குகளை சித்தரிக்கும் வண்ணம் கண்காட்சிகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்

இது இவ்வாறிருக்க, புகையிலை உற்பத்திகள் உற்பத்தி செய்யப்படுவதும், இறக்குமதி செய்யப்படுவதும் சட்ட ரீதியாக தடைசெய்யப்படுவதோடு. இதனை மீறுவோர் மீது தண்டனைகளும் அறிமுகம் செய்யப்பட வேண்டும். ஊடகங்கள் இது சம்பந்தமான விளம்பரங்களில் நேரடியாகவோ. மறைமுகமாகவோ ஈடுபடுவது கண்டிப்பாக நிறுத்தப்பட வேண்டும். கல்விக் கூடங்கள், காரியாலயங்கள் வேலைத் தளங்கள், உணவகங்கள், போக்குவரத்து நிலையங்கள், பொதுவாகனங்கள், மக்கள் குழுமும் இத்தியாதி இடங்களில் புகைத்தல் தடை செய்யப்பட வேண்டும். இத்தீய பழக்கத்தைக் கொண்டுள்ள பெற்றோர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் இதனைத் துறந்து முறையே பிள்ளைகள், மாணவர்கள், நோயாளிகளுக்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டும். மக்கள் அபிமானத்தைப் பெற்ற விளையாட்டு வீரர்கள், நடிகர்கள் போன்றோர் புகையிலை உற்பத்திகளின் விளம்பரங்களில் தோன்றுவதைத் தவிர்க்க வேண்டும். அதேவேளை புகைத்தல் எதிர்ப்புப் பிரசாரத்தில் இவர்களும் சிரத்தையுடன் ஈடுபட வேண்டும்.

அவ்வாறே தொழில் வழங்குவோர் ஆட்களை வேலைக்கமர்த்தும் போது புகைஞர்களை வேலைக்கமர்த்துவதைக் கைவிட வேண்டும்.

புகைப்பிரியரை தம் புதல்விக்கு கணவனாக தெரிவு செய்வதை பெற்றோர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். புகைக்கும் கணவன் தனக்குத் தேவையில்லையென ஒவ்வொரு யுவதியும் துணிந்து கூற வேண்டும். வைபவங்களின் போது சிகரெட் அன்பளிப்பாக விநியோகிக்கும் வழக்கம் நிறுத்தப்பட வேண்டும். பிள்ளைகள் புகைக்கும் பெற்றோரிடம் "எமக்கு பிள்ளைகள் இருக்கும் காலத்திலும் நீங்கள் உயிர் வாழக் காண விரும்புகிறோம்" என்று அடிக்கடிக் கூறவேண்டும். அவர்கள் சிகரெட் வாங்கி வரும்படி தம்மை பணிக்கும் போது "உங்களைக் கொல்வதற்கான முயற்சியில் ஈடுபட நாம் தயாரில்லை" என அன்பொழுகக் கூறி விலகிக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பரவலாக எதிர்ப்புப் பிரசாரம் நடைபெறும் போது புகைஞர்கள் தன்னியக்கமாகவே சமூகத்திலிருந்து ஓரங்கட்டப்படுவர். இச்சந்தர்ப்பத்தில் தமது பரிதாப நிலையை உணர்ந்து இக்கொடிய பாவத்திலிருந்து மீட்சி பெற வாய்ப்பு ஏற்படும் அல்லவா!

இலங்கையைப் பொறுத்தமட்டில் புகை பிடித்தல் எதிர்ப்பு இயக்கம் நத்தை வேகத்திலேயே நடைபெறுகின்றது. ஏனைய ஆசிய நாடுகள் , மேலைத்தேய நாடுகளை விட 20 ஆண்டுகள் பின்தள்ளி நிற்கின்றது. எனவே, சம்பந்தப்பட்ட சகலரும் இவ்வெதிர்ப்பியக்கத்தில் உற்சாகமாகவும், உத்வேகத்துடனும் ஈடுபட வேண்டும். மனித சமூகத்தின் அதி பயங்கர பொது எதிரி ஒருவனை அவன் தோல்வியுறும் வரை எதிர்த்துப் போராடுவது வயது. பால். மத வேறுபாடின்றி அனைவரினதும் கூட்டுப் பொறுப்பாகும்.

புகையிலையின் தோற்றம். வியாபகம். உற்பத்தி. வகைகள், அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள். புகைத்தலின் தீங்குகள். புகைத்தல் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு. புகைத்தலை விடுவதற்கான வழிகள். புகைத்தல் எதிர்ப்புப் பிரசார நடவடிக்கை என்பன பற்றி இக்கட்டுரை ஓரளவு விரிவாக விளக்க முயல்கின்றது. கருத்துக்களை நிறுவ ஆதாரங்களும். புள்ளி விபரங்களும் தரப்பட்டுள்ளன. புகைக்கும் பாவத்திலிருந்து புகைஞர்கள் மீள வேண்டும். ஏனையோர். இப்பாவத்தில் மாட்டிக் கொள்ளாதிருக்க வேண்டும் என்பதே ஆக்கியோனின் அவாவும். துவாவும்.

(முற்றும்)

# மூடு பலகை சுமக்கும் இரவு!

ஏழு மணிக்கு
ஊரின் வாசலுக்கு
பெரும் பூட்டு!

தெருப் படியில்
சில்லூறு சத்தம்
சனத்தின் நாற்றம்
எதுவுமே கிடையாது.

சுத்தியும்,
இழுத்துப் போர்த்திக் கொண்டு
ஒரு பக்கம்
நெடும் குறட்டை!

கடற் கரை மணலில்
எறும்பாக இருந்து
ஊர் கழுதும்
குருவிக் கூட்டமும் குறைவு!

ஆல மரம்!

ஒரு முறை அசைந்து
பார்த்து சிரிக்க
பெரும் பயத்தோடு!

நிலவுக்கு,
எல்லாம் தெரியும்
நமக்கெதற்கு இது
என்றாற் போல்!

தார் வீதி
பக்கத்து காற்றை கூப்பிட்டு
அவர்களின்,
நடமாட்டத்தை சொன்னது!

விடியட்டும்!
சப்பாத்து கால்களையும்
துப்பாக்கி சன்னங்களையும்
எண்ணிப் பார்ப்பதற்கு,
என்றது என் மனம்!



முகமட் அபார்

# முஸ்லிம் குரல்

**புதிர்ப் போட்டி இல - 02**

அகழ்வு : நிஷாத் கரீம்

✔ இந்தப் பகுதியின் மாதிரி விடைத்தாளில் புதிர் எண்களும் அதற்கான விடை எழுதும் பகுதியும் தரப்பட்டுள்ளன. (காண்க விடைத்தாள் - 02)

**மாதிரி விடைத்தாள் 2**

முஸ்லிம் குரல்
புதிர்ப் போட்டி இல- 02

| புதிர் இல | விடை எழுதும் பகுதி |
| --- | --- |
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 9 | |
| 10 | |

பெயர் :.............................................

முகவரி :...........................................

கையொப்பம் :......................................

✔ விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி

முஸ்லிம் குரல்,
புதிர்ப் போட்டி இல - 02
181/1 மாளிகாகந்த வீதி,
(வைட் பார்க்)
கொழும்பு - 10

## புதிர்கள் :-

*01. உமர் (ரலி) இஸ்லாத்தை எத்தனையாவது நபராக ஏற்றுக் கொண்டார்?*

*02. இலங்கையில் முதன் முதல் உருவான முஸ்லிம்களுக்கான பத்திரிகை எது?*

*03. தென் கிழக்குப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?*

*04. பிரிட்டிஷ் ஆட்சியில் துருக்கித் தொப்பிப் போராட்டம் நடாத்திய சட்டத்தரணி யார்?*

*05. 1505ல் போர்த்துக்கேயர் இலங்கையை கைப்பற்றியதும் முஸ்லிம்களை தென் பகுதியில் இருந்து வெளியேற்றிய தளபதி யார்?*

*06. 1915ல் ஏற்பட்ட சிங்கள. முஸ்லிம் கலவரத்தில் முஸ்லிம்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். இதன் பின்னணியில் சிங்களவருக்கு அநீதி இழைக்கப்பட்டதாக முஸ்லிம்களுக்கு எதிராக பிரிட்டன் சென்று வாதாடிய. சிங்களவரின் பேராதரவு பெற்ற தமிழ் சட்டத்தரணி யார்?*

*07. கலீலுள்ளாஹ் - இறைவனின் நண்பன் என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட இறைதூதர் யார்?*

*08. இலங்கை நூதனசாலை (மியூசியம்) கட்டடம் யாரால் அன்பளிப்பு செய்யப்பட்டது?*

*09. கல்லோயா குடியேற்றத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட சிங்கள தொகுதி எது?*

*10. 1956ம் ஆண்டு இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் "திருமலைத் தீர்மானத்தில்" வடக்கு. கிழக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட சமஸ்டி அரசுகள் இருக்கலாம் என யாருடைய தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது?*

## போட்டி நிபந்தனைகள்

✔ உங்கள் விடைகள் தெளிவான எழுத்துக்களில் எழுதி அனுப்பப்படல் வேண்டும். (விடைத்தாளை நீங்கள் தயாரித்துக் கொள்ளவும்)

✔ சகல வினாக்களுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பிய அதிஷ்டசாலிக்கு பெறுமதியானதும், அறிவு ரீதியானதுமான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

✔ ஒன்றுக்கு மேலானவர்கள் சரியான விடையை எழுதி அனுப்பும் பட்சத்தில் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார்.

✔ ஏனைய 10 முதல் தர விடைதாரர்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டு பாராட்டுப் பெறுவர்.

✔ நிரப்பப்பட்ட விடைத்தாள் 25.10.2003ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாய் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸ் இயக்கத் தலைவர் ஒருவர் மீதான இஸ்ரேல் அரசின் கொலை

**காலித் அமைய்ரா**

ஹமாஸ் இயக்கத் தலைவர்களில் மிதவாதியாகவும், இணக்கவாதியாகவும் பரவலாகக் கருதப்பட்ட இஸ்மாயில் அபூ ஷனாபைக் கொலை செய்ய, ஏன் ஷரோனின் அரசாங்கம் தீர்மானித்தது என்பதைக் கண்டுபிடித்து உணருவது மிகக் கடினமானது.

ஹமாஸ் இயக்கம் அரசியல் ரீதியாக மிதவாதப் போக்கினைக் கடைப்பிடிப்பதனைத் தடுப்பதற்காக ஷரோன்-போபாஸ் தலைமைத்துவம் அவரைக் கொலை புரியும்படி கட்டளையிட்டிருக்குமா? ஏனெனில் ஹமாஸின் அத்தகைய மிதவாதப் போக்கு, பலஸ்தீனர்களின் தேசிய இயக்கத்திற்கு எதிராகக் கடுமையான பிரசாரம் செய்வதற்காக, ஸியோனிஸ அரசால் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கிறது.

ஹமாஸ் இயக்கத்தை இடைவிடாது இஸ்ரேல் நிர்ப்பந்தித்த போதிலும் சர்வதேச ரீதியில் ஏற்கப்பட்ட பலஸ்தீனத்தின் ஒரு அரசியற் சக்தியாக மெதுவாக ஆனால் உறுதியாக இந்த இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கம் அபூ ஷனாப்பின் தலைமையில் ஒரு தேசிய, சக்தி வளர்ந்து வருவதை ஷரோன் உணர்ந்த காரணத்துக்காக அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாமா?

ஹார்ட்டங் எனும் பத்திரிகையில் இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டபடி கொலை செய்யப்படுவதற்காகக் கிடைக்கப்பெற்ற ஹமாஸின் ஒரே தலைவர் என்ற காரணத்துக்காக அபூஷனாப் கொல்லப்பட்டிருக்கலாமா? ஷரோனும் அவரது தளபதிகளும், யுத்தக் குற்றவாளிகளும் மட்டுமே இக்கொள்கைகளுக்கு முழுமையான பதில் அளிக்க முடியும்.

எவ்வாறெனிலும், அபூஷனாபின் கொலையானது முழுப் பலஸ்தீனிய மக்களைப் பற்றியும் இஸ்ரேலின் முழுமையான கொள்கையினை எடுத்துக்காட்டுகிறது. இக் கொள்கையின் செயற்பாட்டு முறை, அச்சமூட்டுதல், அரசினால் ஏற்படுத்தப்பட்ட பயங்கரவாதம், திட்டமிடப்பட்ட தொந்தரவுகள், அடக்கு முறை போன்றனவாக இருந்துள்ளதுடன், அதே நிலை தொடர்ந்தும் செயற்படுத்தப்படுகிறது.

எமது ஆக்கிரமிப்புக்கு அடிபணியுங்கள் அன்றேல் நாம் உங்களைக் கொன்று விடுவோம் என்பது அதன் அடிப்படையாகும்.

ஹமாஸ் போராளிகளின் ஒரு தலைவர் அப்துல் அஸீஸ் அலி-ரன்திஸி போன்றோரின் கடுமையான போக்கிற்கு மாறாக, அபூ ஷனாப் ஒரு மிதவாதப் போக்கைக் கடைப்பிடித்து நாம் திட்டமிடும் அரசு, இஸ்ரேலுக்கு மேலால் போகாமல் அத்துடன் இசைவால் போகும் என்று பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

அதே செவ்வியில் அவர் பின்வருமாறும் கூறியிருந்தார். "நாம் பலஸ்தீன அரசு ஒன்றை அமைக்கும் போது எமக்கு இத்தகைய போர் வீரர்கள் தேவைப்படமாட்டார்கள். இஸ்ரேல் மீது



தாக்குதல் நடத்த வேண்டிய தேவை இல்லாது போகும். அனைத்தும் ஒரு சாதாரண குடியியல் வாழ்வாக மாறிவிடும்."

அபூ ஷனாப் மத்திய காஸாவின் நுஸேரத் எனும் அகதிகள் முகாமில் 1950ம் ஆண்டு அகதிகள் குடும்பமொன்றிற் பிறந்தார். இக்குடும்பம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் (1948) துப்பாக்கி முனையில் வெளி யேற்றப்பட்டிருந்தது.

ஒரு அகதி மட்டுமே உணரக்கூடிய, வீடில்லாப் பிரச்சினையின் கஷ்டங்களை நன்குணர்ந்திருந்த இளம் அபூஷனாப், நீ உனக்கு உதவி புரியவில்லையெனின் உலகமோ, ஏன் கடவுளோ உனக்கு உதவ மாட்டார்கள் என்பதை இளம் வயதிலேயே அறிந்திருந்தார்.

இந்த உணர்வில்தான் உண்மையில் பாடசாலையிலும், பின்னர் கல்லூரியிலும் அவர் கல்வியில் சிறந்து விளங்கினார்.

"நாம் சுற்று வட்டத்தை நோக்கிய போது எங்கும் துக்கம் வியாபித்திருந்தது. நாம் பூமியில் இருந்து மறைய வேண்டும் என யூதர்கள் விரும்பினர். வசதிகளற்ற கூடாரங்களில் வாழ்ந்து கொண்டு மாதாந்தம் வழங்கப்படும் மாவு, சமையல் எண்ணெய், பங்கீட்டுடன் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டுமென உலகம் எதிர்பார்த்தது" அவர் ஒரு முறை நினைவு கூறினார். சன்மார்க்கக் குடும்பமொன்றிற் பிறந்த அவர்; தமக்குத் தாமே உதவாதவர்களுக்கு இறைவனின் உதவி கிடைக்காது என்றும் ஊக்கமும் கடும் உழைப்பும் வெற்றிக்கான வழி என்றும் கற்பிக்கப்பட்டார். உண்மையில் அவை அவ்வாறாகவே இருந்தன.

1966ம் ஆண்டு உயர் பாடசாலைப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளை பெற்ற பத்துப் பேர்களில் இவரும் ஒருவராக இருந்தார். இதன் விளைவாக மேற்குக்கரையில் உள்ள பெயில் வெயிட் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றார். எனினும் 1967ம் ஆண்டு அரபு-இஸ்ரேல் யுத்தம் இஸ்ரேல் மேற்குக்கரையினையும், காஸா கரையினையும் கைப்பற்றியமை என்பன காரணமாக அவரது கல்வி தடைப்பட்டது.

1927ம் ஆண்டு எகிப்துக்குச் சென்ற அபூஷனாப் மன்சூரா பல்கலைக்கழகத்தின் பொறியியல் கல்லூரியிற் சேர்ந்து பீ.எஸ்.ஸீ பட்டம் பெற்றார்.

கல்லூரியில் கல்வி பயிலும் போது இஸ்லாமிய சகோதரத்துவத்தின் கருத்துக்களால் கவரப்பட்டார். நாஸர் காலத்தில் பல ஆண்டுகளாக உறங்கிய நிலையில் அடக்கு முறையின் கீழ் இருந்த இவ்வியக்கம் அப்போது குறிப்பிட்ட அளவில் உயிர் பெற்றுக் கொண்டிருந்தது.

பட்டம் பெற்று 1975இல் காஸா நகருக்குத் திரும்பிய அவர் அதன் மாநகர சபையில் நான்கு ஆண்டுகள் பணியாற்றினார்.

அதன் பின் உயர் கல்வி (M.A) பட்டப்படிப்புக்காக அமெரிக்காவுக்குச் சென்றார். காஸா திரும்பிய அவர் மனிதன் உணவினால் மட்டும் வாழ்வதில்லை என உணர்ந்தார்.

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு அரசின் தீங்குகளினால் தமது மக்கள் இம்சிக்கப்படுவதையும், துன்பப்படுதையும் அவதானித்த அவர், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் பிடியில் இருந்து சுதந்திரம் பெற ஏதும் செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தார்.

இவ்வகையில் அவர் பிரபல இஸ்லாமியத் தலைவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். ஹமாஸ் இயக்க ஸ்தாபகரும், சன்மார்க்கத் தலைவருமான ஷெய்க் அஹ்மட் யாசீன், 10 ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேலிய மொஸாட்டினால் கொலை செய்யப்பட்ட இஸ்லாமிய ஜிஹாத் இயக்கத் தலைவர் பாத்திரை ஷெக்காகி என்பவரும், இப்ராஹீம் மகாமெத் என்பவரும் அவர்களிற் சிலர் ஆவார்.

இறுதியில் ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் தலைமையில் அபூஷானப் இணைந்து கொண்டார். பலஸ்தீனிய உரிமைகளைப் பெற ஆயுதம் ஏந்துவதுதான் ஒரே வழி என்று கருதிய இஸ்லாமிய சகோதரத்துவத்தில் இருந்து உருவானதே இந்த அரசியற் பிரிவு.

1989ல் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு எட்டு ஆண்டுகள் சிறையில் இருந்தார். 1997ல் விடுதலையான அவர் ஹமாஸ் இயக்கத்தின் முதிர்ந்த தலைவர்களில் ஒருவராக இருந்தார்.

அவரது புத்திக் கூர்மையும், அரசியற் திறமைகளும் தூண்டும் சக்தி என்பன காரணமாக பலஸ்தீனிய விவகாரங்கள் தொடர்பாக ஹமாஸைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தகைமை பெற்றார்.

அபூ ஷனாப், பலஸ்தீனத் தேசிய ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்காக எதையும் சாதிக்கக்கூடிய திறமையுள்ளவர் எனக் கூறுகிறார் பலஸ்தீனத் தகவல் அமைச்சர் நவீல் அம்ர்.

"அவர் பலஸ்தீன தேசிய அக்கறைகளுக்கு மோலாகப் பிரிவினை வாதங்கள் மேலிட இடமளியாத உண்மையான தலைவர் ஆவார்"

எகிப்தியப் பேச்சு வார்த்தையூடாக யூன் 29ந் தேதி ஏற்படுத்தப்பட்ட HUDNA ஹசத்னா ஏற்பாட்டைப் பலஸ்தீன் தலைவர்கள் ஏற்றுக் கொள்ளச் சொல்வதில் அபூ ஷனாப் முக்கிய பங்கு எடுத்தார்.

அபூ ஷனாப் 9 பிள்ளைகளின் தகப்பனார் (5பெண்கள், 4 ஆண்கள்) மூத்தவரான ஹஸன் இப்போது அமெரிக்காவில் கணணிப் பொறியியல் படிக்கிறார். ஆக இளையவனின் வயது 2 ஆண்டுகள்.

நன்றி : பெலஸ்டின் டைம்ஸ்

---

## ஆர்ப்பாட்டம் செய்ததன் காரணமாக துறைமுக ஊழியர்கள் வேலை நீக்கம்-அரசாங்கம் தொழிற்சங்க உரிமைகளை இல்லாதொழிக்கிறது

ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றில் கலந்து கொண்ட துறைமுக அதிகார சபையைச் சேர்ந்த 19 ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் அரசாங்கம் ஊழியர்களின் தொழிலாளர் உரிமையை மீறியுள்ளது.

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து 32 தொழிற் சங்கங்களினால் அண்மையில் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடாத்தப்பட்ட அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்புப் போராட்டம் வெற்றியடைந்ததன் காரணமாகவே அரசாங்கம் இத்தகைய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளது. மேலும் பலர் வேலையிலிருந்து நீக்கப்படவுள்ளனர்.

எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்ட சில பெண்மணிகள் இடையூறுகளுக்கு உட்படுத்தப் படுவதாகவும் தெரிய வருகிறது.

அத்தகைய பொருத்தமற்ற செயற்பாடுகள் அரசாங்கத்திற்கும் பொருத்தமற்றது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

---

## 30 பில்லியன் டொலர் பெறுமதிவாய்ந்த தைத்த ஆடைக் கோட்டாக்களை அமைச்சர் ஜீ.எல். பதுக்கி வைத்துள்ளார்

அமைச்சர் ஜீ.எல் பீரிஸினால் அமெரிக்கா மற்றும் கனடாவினால் வழங்கப்பட்ட 30 மில்லியன் டொலர் பெறுமதிவாய்ந்த தைத்த ஆடைகளுக்கான 05 கோட்டாக்கள், பின்னர் அதிக விலைக்கு விற்கும் நோக்குடன் பதுக்கி வைத்துள்ளதாக இலங்கை தைத்த ஆடை ஏற்றுமதியாளர் சங்கம் பிரதமரிடம் முறையிட்டுள்ளது.

336, 338, 342, 347, 348 ஆகிய அடையாள இலக்கங்களைக் கொண்ட ஆடைக் கோட்டாக்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எப்படியிருப்பினும், குளிர்காலத்தில் அணியக் கூடிய ஆடைகளுக்கான இந்தக் கோட்டாக்களின் காலம் இவ்வருட இறுதியில் காலாவதியாகின்ற படியால், அமைச்சரின் நோக்கம் ஈடேறாத ஒரு நிலைமை உருவாகியுள்ளது.

அமைச்சர் ஜீ. எல் பீரிஸ் பொ. மு. அரசாங்கத்தில் ஒரு அமைச்சராக பதவி வகித்த போது கூட இத்தகைய தைத்த ஆடைக் கோட்டா மோசடி தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## அரபாத்துக்கு பாதுகாப்பு வழங்குமாறு சர்வதேச பிரஜைகளிடம் வேண்டுகோள்

யசீர் அரபாத்துக்கு எதிரான இஸ்ரேலின் நடவடிக்கைகளை தடுப்பதற்கு முன்வருமாறு பலஸ்தீன விடுதலை இயக்கம் சர்வதேச பிரஜைகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்குக் கரை ரமல்லா நகரத்தில் நடைபெற்ற நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தின் பின் இந்த வேண்டுகோளை ப.வி.இ. விடுத்தது.

இஸ்ரேலுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களுக்கு அவர்கள் பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் மீதே குற்றம் சாட்டுகின்றனர். அவரை நாடு கடத்துவதாகவும் அச்சுறுத்தியுள்ளனர்.

பலஸ்தீனர்களுக்கும், பலஸ்தீன அதிகாரசபைக்கும் அரபாத்துக்கும் இஸ்ரேலியர்களினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்ற அராஜகத்தை தடுத்து நிறுத்துமாறு ப.வி.இ. நிறைவேற்றுக் குழு சர்வதேசத்திடம் வேண்டுகிறது.

ஹயிபா நகரத்தில் இடம்பெற்ற பெண் மனித வெடிகுண்டு சம்பவத்தின் பின்னர் அரபாத்தை நாடு கடத்துமாறு இஸ்ரேலியர்கள் அரசாங்கத்தைப் பலவந்தப் படுத்துகின்றனர்.

---

## புலிகளின் மாற்று யோசனைகள் அரசியல் ஏமாற்றாகும்

**டக்ளஸ் எம்.பி. - தெரிவிப்பு**

இப்போதைக்கு இடைக்கால நிர்வாகமொன்று தேவையற்றது. போர்ச் சூழலுக்குள் அல்லாது அரசியல் தீர்வொன்றை எட்டி செயற்படுத்தப்படும் வேளையிலேயே இடைக்கால நிர்வாகமொன்று தேவைப்படும். இன்று அப்படியொரு நிலை இல்லை.

நாம் முதலில் அரசியல் தீர்வொன்றை எட்ட வேண்டும். ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பதற்கு ஒப்ப காலம் செல்லச்செல்ல இந்தப் பிரச்சினை ஏற்பு நோயாக மாறிவிடும்.

புலிகளின் மாற்று யோசனை என்பது ஓர் அரசியல் ஏமாற்றாகும். அவர்கள் நேரகாலத்தை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். தருணம் பார்த்து காத்திருக்கின்றனர். எங்கள் அனுபவத்தின் படி புலிகள் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களின் உண்மையான நோக்கம் வேறு.

அவர்களின் மாற்று யோசனையையும் எந்தவொரு அரசாங்கத்தினாலும் நிறைவேற்றிக் கொடுக்க முடியாது. அப்படிப்பட்ட யோசனைகளையே புலிகள் முன்வைப்பார்கள். பிரபாகரன் தனது அரசியல் இலக்கை அடையும் முயற்சியே அது.

அடுத்ததாக, எந்தவொரு அரசாங்கம் தெற்கில் ஆட்சி அமைத்தாலும் 1 அல்லது 2 வருடங்களுக்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காண வேண்டும். 1 அல்லது 2 வருடங்களுக்குத்தான் இப்பிரச்சினை பூதாகரமானதாக இருக்கும். காலம் செல்லச் செல்ல வேறு பிரச்சினைகள் முளைவிட்டு



முதலிடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளும். வேலை வாய்ப்பு பண்டங் களின் விலையேற்றம் போன்ற பொருளாதாரப் பிரச்சினைகள் தலை தூக்கும். ஆகவே, முதலி ரண்டு வருடங்களுக்குள் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

தற்போது இந்த அரசாங்கம் ஆட்சியமைத்து 2 வருடங்கள் பூர்த்தியாகப் போகிறது. இப்போது வேறு பிரச்சினைகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. பிரபா கரனுக்கும் தேவை இத்தகைய தொரு சந்தர்ப்பமே. ஆகவேதான் அவர் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

தாங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தியாகத்துடன் செயற்படுவதாகவும், ஆனால் சிங்களத் தலைமைகள் தங்களுக்குள் பேதப்பட்டு அடித்துக் கொள்வதாகவும். தமிழரின் உரிமைகளை வழங்க முன் வருகிறார்கள் இல்லையென்றும் இப்போது பிரபாகரனால் சர்வதேச சமூகத்திற்கு கூற முடியும்.

இந்த நிலைமையை சிங்கள அரசியல்வாதிகள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்விடத்தில் தமிழருக்கு ஒரு பிரச்சினை உள்ளது. அதன் காரணமாக போராட்டமொன்றும் தலை தூக்கியுள்ளது. இவை இரண்டு விதமான பிரச்சினைகள். தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்டுள்ள புலிகளுக்கு வேறொரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

நன்றி லங்கா (12.10.2003)

---

முஸ்லிம் குரல்
சுவடு 22
17 ஒக்டோபர் 2003 Muslim Kural صوت المسلم මුස්ලිම් කුරල් 20 ஷஃபான் - 1424
181/1, Maligakanda Road, (White Park) Colombo - 10. Tel: 0777-389127, Fax: 01-2665831, E-mail: mm-s@eol.lk

## அனைத்துத் தளங்களிலுமான சமூகத்தின் வீழ்ச்சி!

இலங்கையில் "தொடர்ச்சியான அரசியல் ஏமாற்றங்களைச் சந்தித்து வரும் ஒரு தேசிய இனமாக முஸ்லிம்கள் இன்று தள்ளப்பட்டுள்ளனர். "சமூகங்களின் பலம்" காரணமாக இலங்கையில் எழுந்துள்ள சமூகங்களின் இருப்பை பேணும் போராட்டத்தில் இலங்கையில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் இருப்பு மிக மோசமான பின்னடைவைக் கண்டுவருகிறது. இந்த உண்மையை சமூக அக்கறையுள்ள சக்திகள் நன்குணர்ந்து வருகின்றனர்.

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம் சமூகம் மிக மோசமான ஆதிக்க நெருக்கடிகளுக்குள்ளும், ஆக்கிரமிப்பிற்குள்ளும் காலம் தள்ள வேண்டிய இக்கட்டான பொறிக்குள் தள்ளப்பட்டுவிட்டார்கள். இந்த நயவஞ்சகப் பொறியை தகர்த்து எறிய வேண்டிய பணியைச் செய்யவேண்டிய மக்கள் ஆணை பெற்ற தலைமைகள்- நமது மக்களை மேலும் மேலும் நெருக்கடியின் தீவிரத்திற்குள் இறக்கிக் கொண்டே வருகிறது.

இதற்கு எந்த விதத்திலும் குறைவில்லாத வகையில் இன்று தென்னிலங்கை வாழ் முஸ்லிம்களின் வாழ்வும் அதிர்ச்சிதரும் பின்னடைவுக்குள் வீழ்ந்து கிடக்கிறது. பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், கலாசாரத் தளங்களில் தென்னிலங்கை வாழ் முஸ்லிம்களில் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட மக்களின் வாழ்வு, புறக்கணிக்கப்பட்ட பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

கடந்த இருபது வருடகாலத்தினுள் தென்னிலங்கை முஸ்லிம்களின் அடிப்படைத் தேவைகளில் 10 சதவீதத்தைக் கூட, நமது தலைமைகளாலும்-நிறுவனங்களாலும் நிவர்த்திக்க முடியாது இருந்திருப்பதை தென்னிலங்கை முஸ்லிம் மக்கள் மத்தியில் களச் செயற்பாடுகளில் ஈடுபடும்போது தெரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

இலங்கை வாழ் சமூகங்களின் மத்தியில் மிக மோசமான வறுமைமிகுந்த அடிப்படை வசதிகளற்ற மக்கள் பிரிவினரில்-முஸ்லிம்கள் பெருகிவருவதை நாம் உணர்கிறோமா? என்றுமில்லாத வகையில் இத்தகைய மோசமான நிலை நமது சமூக அரங்கில் அதிகரித்துக் காணப்படுகிறது. பெருகிவரும் இந்நிலையை தடுத்து நிறுத்துவதற்கு உருப்படியான சமூகத் திட்டங்களை நமது சமூக சக்திகள் வகுத்துச் செயற்படாது விட்டால், கல்வியில் பொருளாதாரத்தில், சமூக ஒழுக்கத்தில் கலாசார விழுமியங்களில் நாம் மோசமான வீழ்ச்சியை சந்திக்க வேண்டி ஏற்படும்.

இவைகளை அடையாளம் கண்டு உடன் தீர்வுகாண்பதற்கான சமூக வேலைத்திட்டங்களை வகுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் நமது சமூக சக்திகளுக்கு உள்ளது. இக்கடமையிலிருந்து தவறின் நாம் அனைவரும் இறைவனின் கோபத்திற்கும் கேள்விக்கும் ஆளாக வேண்டிவரும் என்பதை உணர்தல் வேண்டும்.

தோழமையுடன்
பிரதம ஆசிரியர்

இப்பத்திரிகை 181/1, [illegible] 'முஸ்லிம் குரல்' [illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org